# அரசிறை முகாமைத்துவ அறிக்கை - 2011

**மஹிந்த ராஜபக்ஷ**
**ஜனாதிபதியும் நிதி திட்டமிடல் அமைச்சரும்**

2003 ஆம் ஆண்டின 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச் ) சட்டத்தின் கீழ், அரசிறை உபாயக் கூற்று 2011 (4,5 மற்றும் 6 ஆம் பிரிவுகளுக்கிணங்க), வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2011 (7,8 மற்றும் 9 ஆம் பிரிவுகளுக்கமைவாக) கௌரவ நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் கீழ் அறிக்கையிடல் தேவைப்பாடுகள்

| பிரிவு | தேவைப்பாடு | உள்ளடக்கங்கள் | இணக்கப்பாடுகள் |
|---|---|---|---|
| பிரிவு 4, 5 மற்றும் 6 | அரசிறை உபாயக் கூற்று சமர்ப்பிப்பு* | அரசின் அரசிறைக் கொள்கைகளின் பால் மக்கள் விழிப்பூட்டலை அதிகரிப்பதற்கு அரசிறை உபாயக் கூற்று மற்றும் அரசாங்கத்தின் அரசிறை உபாய மதிப்பீட்டுச் செயற்பாட்டு நியமங்களின் ஸ்தாபிப்பு | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2 ஆவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. |
| பிரிவு 7,8 மற்றும் 9 | அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பீடுவதற்கான அடிப்படையினை உருவாக்குவதற்கான அரசிறை உபாயக் கூற்று மற்றும் வரவு செலவுத்திட்ட பொருளியல் மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை. | பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் 2 ஆவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. |
| பிரிவு 10, 11 மற்றும் 12 | நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகை யின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான நடுத்தரக்கால அரசிறை நிலைமை அறிக்கை | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் நிறைவேற்றுகையின் திகதியிலிருந்து 6 மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் அல்லது யூன் மாதம் இறுதித் தினம் வருடாந்தம் வெளியடப்பட வேண்டியுள்ளதுடன் இத்திகதி களில் எத்திகதி பிந்தியதாக இருந்த போதும் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 2 வாரங்களுக்குள் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 13, 14 மற்றும் 15 | இறுதி வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) சமர்ப்பிப்பு* | அரசாங்கத்தின் அரசிறை உபாயத்திற்கு எதிராக அதேபோல் ஒரு மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய வகையில் உரிய வருடத்தின் முதல் நான்கு மாதங்களுடன் தொடர்புடைய அரசாங்கத்தின் அரசிறைச் செயலாற்றுகையின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை (ஆண்டறிக்கை) | நிதி ஆண்டு முடிவடைந்ததி லிருந்து 5 மாதங்களுக்குள் பொது மக்களின் பார்வைக்காக வெளியடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| பிரிவு 16,17,18 மற்றும் 19 | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை சமர்ப்பிப்பு ** | தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை நாட்டின் அரசிறை நிலைமை பற்றிய தகவல்களைத் தருகின்றது. | பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக பொதுத் ரேத்தல் ஒன்றை நடாத்துவதாக அறிவித்த திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பொதுமக்களுக்காக வெளியிடப்படுவதுடன் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது அமர்விலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப் படவுள்ளது. |

** நிதி அமைச்சரினால்*

*** நிதி அமைச்சின் செயலாளரினால்*

**இணக்கப்பாடுகள் - 2010**

---

- **தேர்தலுக்கு முன்னரான வரவு செலவுத் திட்ட நிலைமை அறிக்கை – 2010** நிதி, திட்டமிடல் அமைச்சின் இந்த அறிக்கையானது 2010 மார்ச் 1 ஆம் திகதி பொது மக்களுக்காக வெளியிடப்பட்டதுடன் அதன் பின்னர் உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

---

- **இறுதி வரவு செலவுத்திட்ட நிலைமை அறிக்கை** – 2010 ஆம் ஆண்டின் அரசிறை மற்றும் பொருளாதார நிலைமையினைக் குறிப்பிடுகின்ற நிதி, திட்டமிடல் அமைச்சின் ***வருடாந்த அறிக்கை 2010*** ஆனது 2010 மே மாத முடிவில் பொது மக்களுக்காக வெளியிடப்பட்டதுடன் அதன் பின்னர் உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

---

- **அரசிறை முகாமைத்துவ அறிக்கை 2010** - நிதி திட்டமிடல் அமைச்சரினால் முன் வைக்கப்படும் இந்த அறிக்கை அரசிறை உபாயக் கூற்று, வரவு செலவுத் திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2010 மற்றும் அயையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2010 யூன் 29 ஆம் திகதி அன்று பொதுமக்களுக்கு முன்வைக்கப்படுவதுடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

---

- **இந்த அரசிறை முகாமைத்துவ அறிக்கை, 2011 இல் அடங்கியுள்ள விடயம்;**
  *நிதி திட்டமிடல் அமைச்சின்* **அரசிறை உபாயக்கூற்று,** முழுமையான அரசிறைக் கொள்கை அமுல்படுத்தலுக்கு முக்கியமாகக் கருதப்படும் பிரதான அரசிறை அளவீடுகள் மற்றும் பரந்த உபாய முன்னுரிமைகள் குறிப்பிடப்பட்டு அரசாங்கத்தின் நடுத்தர கால அரசிறை உபாயம் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிதி, திட்டமிடல் அமைச்சின அரசிறை உபாயக் கூற்று ஆனது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

---

- *நிதி திட்டமிடல் அமைச்சின்* **வரவு செலவுத் திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2011** அரசாங்கத்தின் வருமானம், செலவினம் முதலியவற்றுடன் தொடர்புடைய மதிப்பீடுகளுடன் அரசிறை உபாயத்திகேற்ப அரசாங்க அரசிறை செயலாற்றுகைளை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ள நிதி, திட்டமில் அமைச்சின் இவ்வறிக்கையானது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
-

---

# அரசிறை முகாமைத்துவ அறிக்கை

**2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 4, 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின் கீழ்**

**கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட அரசிறை உபாயக் கூற்று 2011**

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 4,5,6 ஆம் பிரிவுகளின் கீழ் அரசாங்கத்தின் அரசிறை உபாய அறிக்கையினை பொதுமக்களுக்கு சமர்ப்பிப்பதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு தினத்தில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் நிதி அமைச்சர் கேட்கப்பட்டதற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது வரவு செலவுத்திட்டம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டதும் அரசாங்கம் உபாயமாக கொள்ளவேண்டிய முக்கிய விடயங்களையும் செயற்படுத்த வேண்டிய முழு மொத்த அரசிறை கொள்கையினையும் கவனத்திற் கொண்டு குறிப்பீடு செய்யப்பட்ட பிரதான அரசிறை நடவடிக்கைகளுக்கும் விரிந்த உபாய முன்னுரிமைகளை தெளிவுபடுத்துகின்றது.

## நடுத்தரக் கால அரசிறை உபாயம்

"மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு" திட்டத்துடன் இணைந்த பொருளாதார அபிவிருத்தியினை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளை மேலும் ஸ்திரப்படுத்தும் அதேவேளை, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மற்றும் அரசாங்கப் படுகடன் சுமையினை நிலையான குறைப்பொன்றாக அடைந்து கொள்வதற்கு நாட்டின் அரசிறை முகாமைத்துவமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. செலவின குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் நட்பு ரீதியான வருமான அதிகரிப்பு என்பவற்றினை முதலீடு மற்றும் வளர்ச்சி என்பவற்றுடன் இணைத்து நோக்குவதன் மூலம் இது அடையப்படலாம். உலகப் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் காணப்படும் பின்னணியில், பாரிய பேரண்டப் பொருளாதார சமமின்மைகளை ஏற்படுத்திவிட்ட பல நிச்சயமற்ற தன்மைகள் என்பற்றுடன் உலகப் பொருளாதாரத்தில் பிரதான நாடுகளுக்கிடையில் மிகவும் கரைந்து போயுள்ள நாணயச் சந்தைகள் மற்றும் நுகர்வு விலைகளை அரசாங்கத்தின் அரசிறை உபாயமானது அரசிறைப் பற்றாக்குறையினை 8 சதவீதத்தினை விட குறைவாகவும் பணவீக்கத்தினை ஏறக்குறைய 5 சதவீதமாக குறைப்பதற்குமான விசேட ஏற்பாடுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள நிலையில், அரசாங்கத்தின் அரசிறை உபாயமானது மேலும் ஒருங்கிணைக்கப்படும். இந்த அரசிறை உபாயமானது பயங்கரவாதத்தினை இல்லாதொழித்ததன் பின்னர் மற்றும் யுத்தத்துடன் தொடர்பான செலவினங்கள் குறையும் பொழுது உட்கட்டமைப்பு அபிவிருத்தியுடன் இணைந்த வகையில் பொருளாதாரத்திற்கான தேவையான ஒத்துழைப்பை வழங்கும் அதேநேரம் நாட்டில் புதுப்பிக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களின் முழுமையான நன்மைகளை மக்கள் அடைந்து கொள்வதற்கும் முடியுமாக இருக்கும். திருத்தப்பட்ட நடுத்தரக் கால அரசிறை உபாய வேலைச்சட்டகமானது 2012 ஆம் இறுதியளவில் மொ.உ.உற்பத்தியின் 5 சதவீத வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை இலக்காகக் கொண்டுள்ளதுடன், இது மேலும் மேம்படுத்தப்படும்.

நாடு கடந்த சில வருடங்களாக எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் எதிர்பாராத பிரச்சினைகள் காணப்பட்டபோதிலும் பொருளாதாரத்தின் வளர்ச்சி ஆற்றலினை அதிகரிப்பதற்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி தேவைகளையும் மற்றும் சில அத்தியாவசிய தேவைகளையும் சந்திப்பதற்கு அரசாங்கத்தின் தொழிற்பாட்டுச் செலவினங்கள் மற்றும் வளங்களை திரட்டுதல் மற்றும் அவற்றினை பிரயோகித்தல் தொடர்பாக காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மின் உற்பத்தி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள், நீர்ப்பாசனம், அதிவேகப் பாதை, தெருக்களும் பாலங்களும், போக்குவரத்து, நீர் வழங்கல், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற சில முக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வளங்களினூடாக நிதியளிப்பு செய்ததன் மூலம் புறக்கணிக்கப்பட்ட உட்கட்டமைப்பு தேவைகளை மிகவும் முடியுமான விரைவில் செய்து கொடுப்பது அரசாங்கங்கத்தின் முயற்சியாக காணப்பட்டதினால் முதலீடானது ஏறக்குறைய 6.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இவை அனைத்துடனும் பொருளாதார மற்றும் அரசியல் உறுதிப்பாடு மேம்பாடடைந்துள்ளதுடன், உயர் பொருளாதார வளர்ச்சியினை பேணும் வகையில் தனியார் துறை முதலீடுகளை அதிகரிப்பதற்கான உள்நாட்டு சூழ்நிலையினை மேலும் மேம்படுத்தல் வேண்டும்.

2009 இல் முழு மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது அழுத்தத்திற்குட்பட்ட சர்வதேச வர்த்தகம், விவசாயம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான மானியக்கடன் என்பவற்றின் மூலமான வரி தவணைக் கட்டணம், உலகப் பொருளாதார நிலைமை மற்றும் யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றல் மற்றும் கண்ணி வெடியகற்றல் என்பவற்றிற்கு தேவையான மேலதிக வளங்கள் என்பவற்றினால் ஏற்பட்ட சவால்களை முகாமை செய்வதற்கு தனியார் துறைக்கு உதவுவதற்கான கைத்தொழிலுக்கான சலுகை அடிப்படையிலான மின்சாரம் மற்றும் எரிபொருள் விலைகள் என்பவற்றின் மூலம் அரசிறை ஊக்குவிக்கப்படும். கடந்த காலத்திலும் காணப்பட்ட உயர் வட்டி விகித மிகையுடன் இணைந்த வட்டிச் செலவின அதிகரிப்பு உயர் பற்றாக்குறைக்கு பங்களிப்புச் செய்தது. 2008/2009 இல் காணப்பட்ட மோசமான வருமான செயலாற்றுகை சர்வதேசப் பொருளாதார வீழ்ச்சியின் போது இறக்குமதி பெறமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக பெறுமதிசேர் வரி, இறக்குமதித் தீர்வைகள் மற்றும் இறக்குமதிகளின் போது அறவிடப்பட்ட உற்பத்தித் தீர்வைகள் என்பவற்றிலிருந்து வருமான சேகரிப்பு தொடர்ந்தும் குறைவடைந்ததன் விளைவாக ஏற்பட்டதாகும். 2009 இல் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதமும் 86.2 சதவீதத்தினால் அதிகரித்தது. அரசிறைப் பற்றாக்குறை மற்றும் படுகடன் வீழ்ச்சிகளின் தற்காலிக வீழ்ச்சியானது 2010 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 8 சதவீதமாக இலக்கிடப்பட்டுள்ளதுடன், 2009 ஆம் ஆண்டினை விட 2 சதவீத புள்ளிகளினால் குறைவடைந்ததுடன், பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்களவு திருத்தமொன்று தேவைப்படுத்தப்பட்டுள்ள அதேநேரம் இது நடுத்தரக் கால அரசிறை அதிகரிப்புக்கும் பங்களிப்புச் செய்தது.

சர்வதேச வர்த்தகம் படிப்படியாக சாதாரண நிலையை நோக்கி திரும்புதல் மற்றும் இறக்குமதித் தீர்வைக் கட்டமைப்புக்கு ஏற்கனவே செய்யப்பட்ட திருத்தங்கள், மீண்டெழும் செலவினத்தில் குறைவுகள் மற்றும் உயர் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட மட்டத்தில் அரசாங்க முதலீட்டினை பேணிக் கொள்வதற்காக அரசாங்க செலவிடல்களை அதிகம் முன்னுரிமைப்படுத்துதல் என்பவற்றுடன் அரசாங்க வருமானத்தில் முழு மொத்த அரசிறை நிலைமையும் மேம்படுத்தப்படும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடியகற்றல் நடவடிக்கைகளில் முன்னேற்றத்தைக் கண்டதுடன், உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்கள் மீதான மீள் குடியேற்றம், புனர்வாழ்வு செலவினம், பாதுகாப்பு தொடர்பான கொள்வனவுச் செலவினங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி

மற்றும் வரவு செலவுத்திட்டம் மீதான வட்டிச் சுமையினை இலகுபடுத்தல் அண்மைக்கால அரசாங்கத்தின் படுகடன் மீள் கட்டமைப்பு என்பன 2010 இல் மீண்டெழும் செலவினத்தை குறிப்பிடத்தக்களவு குறைப்பதற்கு உதவியது.

மொ.உ.உற்பத்தியின் நடுத்தரக் காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான வளர்ச்சி இலக்கானது 8-10 சதவீத தேவைப்பாட்டில் நிலையான மேம்பாட்டினை ஏற்படுத்தியுள்ளதுடன், மொத்த முதலீட்டு விகிதம் ஏறக்குறைய 33-34 சதவீதமாக அதாவது தனியார் மற்றும் அரசாங்கத் துறையின் உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்க முதலீடானது மொ.உ.உற்பத்தியில் 6-7 சதவீதமாக பேணப்பட்ட அதேவேளை பின்தங்கிய பிராந்தியங்கள், சுகாதாரம் மற்றும் கல்வி, தனியார் முதலீடு என்பன போன்ற முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் பிரதான உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு வளர்ச்சிப் போக்கில் பாரியதொரு பங்களிப்பை வழங்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, தனியார் முதலீட்டு வகுதியானது மொத்த முதலீட்டில் ஏறக்குறைய 80 சதவீதமாக இருக்கும். எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சிப் பாதையினை அடைந்து கொள்வதற்கு தனியார் துறை முதலீடானது மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 28 சதவீத வளர்ச்சியடைவதற்கான தேவை கட்டாயமானதாகும். இப்பின்னணியில் உட்கட்டமைப்பு, வரி முறைமை, ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் மற்றும் அரசாங்க சேவை ஏற்பாடுகள் என்பவற்றில் மேலதிக மேம்பாட்டினூடாக உள்நாட்டு தனியார்துறை மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடு என்ற இரண்டும் அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படும்.

நடுத்தரக் காலத்தில் வரி முறைமையானது நட்பு ரீதியாகவும் ஒப்புரவு மிக்கதாகவும் அபிவிருத்தி செய்யப்படும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது. இலகுபடுத்தப்பட்ட, விரிந்த அடிப்படைக் கட்டமைப்பினைக் கொண்ட குறைந்த வரி கொள்கையினை நோக்கி செயலாற்றுவதுடன் பல்வகைப்பட்ட வரி விதிப்பனவுகள் மற்றும் மிதமிஞ்சிய வரி விலக்களிப்புகளின் தொழிற்பாடு நீக்கப்படும். இப்பின்னணியில் தேசியப் பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றாடல் மற்றும் சர்வதேச அர்ப்பணிப்புகள் என்ற வரையறைகளுக்குட்பட்ட விலக்களிப்புகளுடன் 0,5,15 மற்றும் 30 சதவீதத்தினை உள்ளடக்கியதாக நான்கு கட்டமைப்பான தீர்வை முறைமை அரசாங்கத்தினால் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இறக்குமதி மேலதிகக் கட்டணங்கள் இல்லாதாக்கப்பட்டதுடன், மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலாக பல பொருட்களுக்கு ஏற்புடையதான வரிகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன. புகைப்படக் கருவிகள், தொலைபேசிகள், கடிகாரங்கள் போன்ற கடத்தலுக்குட்படும் மற்றும் வரி ஏய்ப்புக்குட்படக்கூடிய இலங்கையில் தயாரிக்கப்படாத நுகர்வுப் பொருட்கள் மீதான மொத்த வரி விகிதங்களை அரசாங்கம் குறைத்துள்ளதுடன், அப்பொருட்கள் மீதான பல்வேறுபட்ட வரிகளை இல்லாதாக்குவதன் மூலம் 10 சதவீதத்திற்கு குறைவான விகிதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பானது சர்வதேச சந்தை வசதிகளை ஊக்குவிப்பதுடன் கடத்தல் மற்றும் வரி ஏய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் குறைவடையுமெனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. பல்வேறு அத்தியாவசியப் பொருட்கள் மீது பிரயோகிக்கப்பட்ட பல்வகையான வரிகள் விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டின் கீழ் ஒருமுகப்படுத்தப்பட்டதும் வரி நிர்வாகத்தினை மேலும் பயனுறுதி மிக்கதாகவும் வரி விதிப்பனவினை இலகுபடுத்துவதற்குமாக மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கையாக அமைகின்றது. நேரடி வரிகள் மீதான மிதமிஞ்சிய வரி விகிதங்கள் நடுத்தரக் காலாண்டின்போது மேலும் குறைக்கப்படும். அத்துடன் எழுந்தமான வரி விடுமுறைகள் உள்ளடங்கலாக அதிகரித்த வரிச்சலுகைகள் மற்றும் தீர்வை விலக்களிப்புகள் குறைக்கப்பட்டுள்ளதுடன், இல்லாதாக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபை ஊக்குவிப்பானது முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லாத அமைப்புக்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இரண்டாக பிரிவுபட்ட நிலையினை திருத்துவதற்காக ஒழுங்கமைக்கப்படுவதுடன், தனியார் துறை முதலீட்டாளர்களுக்கான ஒப்புரவு ஊக்குவிப்பு நிலையொன்றினை உருவாக்கும் வகையிலான தளமொன்றினை ஏற்படுத்தும். இலகுபடுத்தப்பட்ட, விரிந்த அடிப்படை தாங்கிக் கொள்ள முடியுமான வரி நிர்வாகம் முறையான பொருளாதாரத்தில் சிறப்பான பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்பதுடன், அதிகமான வருமானத்தினையும் பெற்றுத் தரும். உபாய அபிவிருத்திக் கருத்திட்டச் சட்டமானது பாரிய முதலீடுகளை மேற்கொள்ளும் வகையில் மேலும் ஒழுங்கமைக்கப்படும்.

நாட்டின் ஒருங்கிணைந்த அந்தஸ்தினைக் கவனத்திற் கொண்டு வரி வருமானங்கள், வர்த்தக வரிகள் தீர்மானிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியினை ஈடுசெய்யும் வகையில் திருத்தப்படுவதற்கு வருமானம் ஈட்டலுக்கான வெளிநாட்டு வர்த்தகத்துடன் பின்னிப் பிணைந்துள்ள நிலைமை மற்றும் உலகப் பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பு என்பவற்றினை ஏற்படுத்தல். இப்பின்னணியில் உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில்களுக்காக இறக்குமதி செய்யப்படுவதற்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் என்பன குறைந்த வரிக் கட்டமைப்பில் வைக்கப்பட்டுள்ள அதேநேரம் அபிவிருத்திக்கான ஒப்பீட்டு நன்மையொன்றினை இலங்கை பெற்றுக் கொள்ளும் பொருட்கள் அந்தக் கைத்தொழில்கள் நியாயமான போட்டித் தன்மையினை எதிர்நோக்கும் மற்றும் உறுதியான ஸ்தரத்தன்மையுடன் வளர்ச்சியடையும் என்ற வகையில் தீர்மானிக்கப்பட்ட விகிதமொன்றில் வைக்கப்படும். இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டுள்ள அதேவேளை பெரும்பாலான மூலப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள், செஸ் வரி மற்றும் மேலதிகக் கட்டணங்களினை நீக்குவதற்கு அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நுகர்வுப் பொருட்களுக்கு ஏற்புடையதான செஸ் வரி விகிதத்தினை உயர்த்துதல் அல்லது விதிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெறுமதி சேர்க்கப்பட்ட அமைப்பில் ஏற்றுமதிகளை

ஊக்குவிப்பதற்கு மூலப் பொருட்களில் செய்யப்படும் இறக்குமதிகள் வரி விதிப்பனவு தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படும்.

வரி விதிப்பனவு சிக்கல்கள், வித்தியாசமான துறைகளுக்கு வித்தியாசமான வரி விகிதங்கள், வரி மீள் கொடுப்பனவில் காணப்படும் இடைஞ்சல்கள், விசாலமானளவு விலக்களிப்புகள் மற்றும் காலத்திற்கு ஏற்ற பொறிமுறையின்மை போன்ற பலவீனங்களை இல்லாதாக்கும் வகையில் பெறுமதிசேர் வரி மற்றும் வருமான வரி முறைமைகளின் செயற்பாட்டு மாதிரிகளை இலகுபடுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. வரி நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்கான செயன்முறையொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி ஒத்துழைப்பு வழங்கப்படும் அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் கருத்திட்டத்தின் கீழ் வரி நிர்வாகத்தினை மேம்படுத்துவதற்கான செயன் முறையொன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நடபடி முறைகளையும் செயன் முறைகளையும் இலகுபடுத்தல், முகாமைத்துவ தகவல் முறைமையில் மேம்பாடு, மனித வளங்கள் அபிவிருத்தி, வரிக் கணக்காய்வு மற்றும் தகவல் தொழினுட்பத்தின் பயன்வலு மிக்க பயன்பாடு என்பவற்றிற்கு உதவுவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

செலவினத்தினைப் பொறுத்த வரையில், அரசாங்கத்தின் செயற்பாட்டுச் செலவினத்தினை முகாமை செய்வதற்கு உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அரசாங்க செலவிடலின் தரத்தினை மேம்படுத்துவதற்கு முன் உதாரணமற்ற முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டமைப்பு மற்றும் நிறுவன பிரச்சினைகளை இல்லாதாக்குவதற்கு தேவையான மறுசீரமைப்புகள் மற்றும் கொள்கை முன்னெடுப்புகளை செயற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பினை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அமைச்சுக்களின் மீள் உருவாக்கப்பட்ட கடமைகள் மற்றும் பணிகளின் கட்டமைப்பானது இது தொடர்பில் பிரதான பங்கொன்றினை வகிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், குறிப்பாக கிடைக்கும் படியான வளங்களுக்குள் அவற்றினது செயற்பாடுகள் அமைந்திருக்கும்.

கொள்கை செயற்படுத்துகையின் ஒருங்கிணைப்பானது அரசாங்கத்தினால் எற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை தனியார் துறை தொழில் முயற்சியானது அவற்றினது செயலாற்றுகையினை மேம்படுத்தும் நோக்கத்துடன் பிரதான அரசாங்கத்துறை நிறுவனங்களில் உட்புகுத்தப்பட்டுள்ளது. முழு மொத்தமாக நோக்குகையில் நடுத்தரக் கால உபாயமானது வர்த்தக ரீதியில் திறன் மிக்கதாக ஏற்படுத்தும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான அரசிறையை ஏற்படுத்தித் தருமென அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் மீதான அவர்களது நம்பக்கையினை குறைத்தல் மற்றும் தனியார் துறை செயற்பாடுகளுக்கான இலவச வளங்கள்கள் என்பவற்றினை ஏற்படுத்தக் கூடிய அரசாங்கத் தொழில் முயற்சிகளின் திறன் மற்றும் செயலாற்றுகை மேம்பாடு மீதான இறுக்கமான அழுத்தத்தினை நடுத்தர கால உபாயமானது ஏற்படுத்தும். விலைத் தீர்மானங்களுடன் கூடிய முகாமைத்துவ மேம்பாடு அவற்றினை நிதியியல் ரீதியாக உறுதிப்படுத்துமென அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நவீன மற்றும் வினைத்திறன் மிக்க நிருவாக முறைமை மற்றும் நடபடி முறைமைகள் என்பவற்றினை உருவாக்குவதற்கு அனைத்து நிர்வாக மற்றும் ஒழுங்குபடுத்தல் நடபடிகள், செயன் முறைகள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு சிபாரிசு செய்வதற்கான உப குழுவொன்றினை அமைச்சரவை நியமித்துள்ளது. அத்துடன் பயன்படுத்தப்படாத ஆதனங்களை வினைத்திறன் மிக்கதாக பயன்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் வளர்ச்சியடைந்து வரும் வர்த்தகத் தேவைகளுக்கு வசதியளிப்பதை ஊக்குவிக்கும் கண்ணோட்டத்துடன் தனியார் துறைக்கான தொடர்புடைய விடயங்களையும் துறைகளையும் இனங் காண்பதற்கு அனைத்து நிரல் அமைச்சுக்களும் வேண்டப்பட்டுள்ளன.

உற்பத்தித் திறனற்ற செலவினங்களைக் குறைப்பதற்கான முயற்சிகள் இடம் பெற்று வரும் அதேவேளை, நடுத்தரக் கால அரசிறை உபாயம் மற்றும் செயன் முறைகள் பாதிக்கப்பட்ட மற்றும் தேவையுடையவர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். அத்துடன் கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் விசேடமாக மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை இலக்காகக் கொண்ட சமூக செலவிடல்களை பாதுகாக்கும் அதேநேரம் குறைந்த பற்றாக்குறைக்கான அரசிறை சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பின்னணியில், கல்வி மற்றும் சுகாதாரம் மீதான செலவினம் மொ.உ.உற்பத்தியில் 2 - 3 என்ற மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றது. அத்துடன் வறுமையினை நீக்குவதற்கும் பிராந்திய முரண்பாடுகளை குறைப்பதற்குமான உற்பத்தித் திறன் மிக்க வாழ்வாதார அபிவிருத்தி முன்னெடுப்புகள் அரசாங்கத்தின் கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகளினூடாக மேற்கொள்ளப்படும். கிராமியப் பாதைகள், குடிநீர் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருத்திட்டங்கள், கிராமிய மின் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்கள், சிறிய குளங்கள் மற்றும் நீர்ப்பாசன முறைமைகள் போன்ற கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் “கம நெகும” நிகழ்ச்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு, யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பாதுகாத்தல் என்பவற்றின் நிலையான வளர்ச்சி உறுதிப்படுத்தப்படுவதுடன், போதிய வளங்கள் இதற்காக ஈடுபடுத்தப்பட்டு நாட்டின் மொத்த முறைமையும் உறுதியாக்கப்படும் கண்ணோட்டத்துடன் வசதியளிக்கப்படும்.

மதுவரிக் கொள்கையானது சிகரட்டுகள் மற்றும் மதுபானப் பாவனையினை குறைக்கும் வகையில் தூண்டப்பட்டுள்ளது. சட்ட ரீதியற்ற மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனைக்கெதிரான பிரச்சாரம் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்துவதினூடாக உறுதிப்படுத்தப்படும் அதேவேளை கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களினூடாகவும் இப்பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

அரசிறை முன்னரங்கில் பரந்தளவிலான முன்னெடுப்புக்களும் கொள்கை நடவடிக்கைகளும் இலங்கையின் அபிவிருத்தி கண்ணோட்டத்தினை அதிகரிக்கும் அதேவேளை, நிலையான அரசிறை ஒருங்கிணைப்பிற்கு பங்களிப்புச் செய்யும். இது வருமானம்/மொ.உ.உற்பத்தி விகிதம் நடுத்தரக் காலத்தில் ஏறக்குறைய 17 சதவீத வளர்ச்சியினை கொண்டிருக்குமென்பதுடன், வருமான மிகையினை உருவாக்குவதுடன் மொ.உ.உற்பத்தியில் ஏறக்குறைய 6.5 - 7 சதவீத அரசாங்க முதலீட்டினை பேணி வருமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்த அரசிறை உபாயத்தின் முழுமையான செயற்படுத்துகை மொத்த அரசிறைப் பற்றாக்குறையினை மொ.உ.உற்பத்தியில் 5 சதவீதமாக குறைக்குமென்பதுடன், அரசாங்கப் படுகடன் மட்டத்தினை 2016 ஆம் ஆண்டளவில் மொ.உ.உற்பத்தியில் 70 சதவீதத்திற்கு குறைந்த மட்டத்தினை ஏற்படுத்தும். அத்துடன் இது நீண்ட முதிர்ச்சிகளுடன் கூடிய குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினை கொண்டிருப்பதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி வழங்கலில் முறையான கலப்பொன்றினையும் ஏற்படுத்துவதுடன், வளர்ந்து வரும் நடுத்தர வருமான பொருளாதாரமொன்றின் சவால்களை திறன் மிக்க வகையில் முகாமை செய்வதற்கு அதன் ஸ்திரத்தன்மையினை அதிகரிக்கும் வகையில் இலங்கையின் பொருளாதாரம் உறுதிப்படுத்தப்படும்.

**அட்டவணை 1**

**நடுத்தர கால பேரண்ட அரசிறை வேலைச் சட்டகம் 2010-2013**
**(மொ.உ.உற்பத்தியின் விகிதாசாரமாக)**

| சுட்டி | 2009 | எதிர்வுகூறல்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | 2010 | 2011 | 2012 | 2013 |
| **வருமானம்** | **14.5** | **14.6** | **15.5** | **16.0** | **16.5** |
| வரி வருமானம் | 12.8 | **13.0** | **13.9** | **14.6** | **15.0** |
| வருமான வரி | 2.9 | **2.4** | **2.3** | **2.4** | **2.7** |
| பெறுமதிசேர் வரி | 3.6 | **4.0** | **4.9** | **5.1** | **5.4** |
| உற்பத்தி வரி | 2.0 | **2.3** | **2.5** | **2.3** | **2.2** |
| இறக்குமதித் தீர்வை | 3.4 | **2.8** | **2.9** | **3.2** | **3.2** |
| பிற | 1.0 | **1.5** | **1.3** | **1.6** | **1.5** |
| வரியல்லாத வருமானம் | 1.7 | **1.7** | **1.6** | **1.4** | **1.5** |
| **மானியங்கள்** | **0.5** | **0.3** | **0.4** | **0.3** | **0.1** |
| **செலவினம்** | **24.9** | **22.9** | **22.7** | **21.5** | **21.3** |
| நடைமுறைச் செலவினம் | 18.2 | **16.6** | **16.4** | **15.0** | **14.8** |
| சம்பளங்களும் கூலிகளும் | 5.6 | **5.4** | **5.4** | **5.3** | **5.2** |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 6.4 | **6.1** | **5.6** | **5.1** | **5.0** |
| உதவுதொகைகளும் மாற்றல்களும் | 3.9 | **3.6** | **3.2** | **3.0** | **3.0** |
| பிறபொருட்களும் சேவைகளும் | 2.2 | **1.6** | **2.1** | **1.6** | **1.5** |
| அரசாங்க முதலீடு | 6.8 | **6.5** | **6.5** | **6.5** | **6.5** |
| அதில்: | | | | | |
| பெருந்தெருக்கள் | 1.7 | **1.5** | **1.6** | **1.7** | **1.1** |
| துறைமுகம், விமானச்சேவை | 0.6 | **0.5** | **0.4** | **0.2** | **0.1** |
| மின்சாரம் | 0.7 | **0.4** | **0.5** | **0.5** | **0.1** |
| நீர் மற்றும் நீர்ப்பாசனம் | 0.8 | **0.7** | **0.8** | **1.1** | **1.1** |
| கல்வி மற்றும் சுகாதாரம் | 0.6 | **0.5** | **0.6** | **0.8** | **0.9** |
| கிராமியத்துறை | 0.3 | **0.3** | **0.6** | **0.6** | **0.4** |
| வருமானப்பற்றாக்குறை(-)/மிகை (+) (% மொ.உ.உ) | -3.7 | -2.0 | -0.9 | 1.0 | 1.7 |
| வ.செ.தி.பற்றாக்குறை(-)/மிகை(+)(% மொ.உ.உ) | -9.9 | -8.0 | -6.8 | -5.2 | -4.8 |
| அரசாங்கப் படுகடன்(% மொ.உ.உ) | 86.2 | 84.0 | 79.8 | 76.0 | 72.5 |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

# வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை -2011

## 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7,8,9 மற்றும் 10,11,12 ஆம் பிரிவுகளின் கீழ்

## கௌரவ நிதி அமைச்சரினால் வெளியிடப்பட்ட வரவு செலவுத்திட்ட பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை - 2011

வரவு செலவுத்திட்ட, பொருளாதார மற்றும் அரசிறை நிலைமை அறிக்கை 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புச்) சட்டத்தின் 7,8,9 ஆம் பிரிவுகளின் நியதிகளின் கீழ் வெளியிடப்பட்டது. இது அரசிறை உபாய கூற்றுக்கு எதிராக அரசாங்கத்தின் அரசிறை செயலாற்றுகையினை மதிப்பிடுவதற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு தேவைப்படுத்துவதுடன் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டமூலம் வாசிக்கப்படும் இரண்டாவது நாளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தி, நுகர்வோர் விலைகள், கொடுப்பனவு மீதி, வருமானம் மற்றும் செலவின மதிப்பீடுகளுக்கான அடிப்படை ஊகங்கள் என்பவற்றை இது உள்ளடக்கி இருக்கும்.

ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதம் முடிவடைவதற்குள் அல்லது குறித்த ஆண்டின் யூன் மாதத்தின் இறுதித் தினத்தில் இவையிரண்டிலும் பின்னையது அத்துடன் பாராளுமன்றத்தில் சமரப்பிப்பதற்கு முன்னரான திகதியில் பொது மக்களுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென தேவைப்படுத்தியுள்ள மேற்குறித்த சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கை அரசாங்கத்தின் வருமானம், செலவினம், காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் என்பவற்றினை உள்ளடக்கி உள்ளதுடன் 2010 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களின்போது பெறுகைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இற்றைப்படுத்தப்பட்ட தகவல், தகவல் கிடைப்பனவில் தங்கியுள்ளமை, பேரண்டப் பொருளாதார செயலாற்றுகை, விலை அபிவிருத்திகள், வெளிநாட்டு உதவி, அரசாங்கப்படுகடன், கொடுப்பனவு மீதிகள், பணம் மற்றும் வரவு அபிவிருத்திகள் என்பனவும் குறித்த சட்டத்தின் 11 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டள்ளது.

# அரசிறை அபிவிருத்தி

## மேன்நோக்கு

- சமாதானம் மற்றும் யுத்தத்திற்கு பின்னரான பொருளாதாரக் கண்ணோட்டங்களில் புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர்களின் நம்பிக்கை என்பவற்றின் மூலம் மீள் எழுச்சியானது பொருளாதாரத்தில் அவதானிக்கப்பட்டதுடன், 2009 இல் காணப்பட்ட குறைவான வருமான சேகரிப்புக்கும் உயர் பற்றாக்குறையினையும் ஏற்படுத்திய நிகழ்வுகள் இல்லாது போயின. அத்துடன் படிப்படியான உலகப் பொருளாதார மீட்சியானது வளர்ச்சிப் போக்கொன்றினை ஏற்படுத்தியது. 2009 இல் வருமான பெறுகை வீழ்ச்சியடைந்திருந்ததுடன், வருமான சேகரிப்பில் தொடர்ந்தேர்ச்சியான வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த அதேவேளை பிரதானமாக வரி அடிப்படை என்ற வகையில் இறக்குமதிகளின் பெறுமதி குறைவடைந்ததன் காரணமாக இறக்குமதியின் போது அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரி மற்றும் உற்பத்தித் தீர்வைகள் என்பனவும் வீழ்ச்சியடைந்திருந்த நிலை, வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட மேம்பாடு மற்றும் வரி முறைமையினை இலகுபடுத்தல், இணக்கப்பாடுகளை அதிகரித்தல் போன்ற அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொள்கை நடவடிக்கைகளினால் மாற்றம் அடைந்தது. எவ்வாறாயினும், உள்நாட்டு விலையில் நிலையான போக்கினைப் பேணுவதற்காக பெற்றோலிய உற்பத்திகள் மீதான இறக்குமதித் தீர்வைகளை இல்லாதாக்குவதற்கும் உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான போட்டி நிலைமையினை பேணுவதற்கும் விலை ஸ்திரத்தன்மையினை பேணுவதற்கும் அத்தியாவசியப் பொருட்கள் மீதான விசேட நுகர்வுப் பொருள் அறவீடு திருத்தப்பட்டது. பெற்றோலியப் பொருட்கள் மீதான தீர்வை விலக்களிப்பு காரணமாக மாத்திரம் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 25 பில்லியனை விட அதிகமாகும். அவ்வாறிருந்தபோதும், 2009 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்கத்தின் வருமானம் ரூபா 60 பில்லியனால் அல்லது 11 சதவீதத்தினால் அதிகரித்தது.

- 2010 இன் முதல் நான்கு மாதங்களுக்கான செலவினம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாக்குப் பணம் மீதான கணக்கினால் ஆளப்பட்டதுடன், தொடர்ந்து வந்த 03 மாதங்களும் அரசியலமைப்பின் 150 ஆவது உறுப்புரையின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை தொடர்ந்து 2010 இற்கான வரவு செலவுத்திட்டம் யூன் மாதத்தில் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. பிணக்குகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணி வெடியகற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதேவேளை, உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு செலவினங்களில் குறைவு ஏற்பட்டதுடன், பாதுகாப்பு தொடர்பான கொள்வனவுச் செலவினங்களில் வீழ்ச்சி, குறைந்த பணவீக்கம் காரணமாக சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வட்டிச்சுமை இலகுவாக்கப்பட்டமை மீளாய்வு காலப்பகுதியில் மீண்டெழும் செலவினத்தில் குறைவினை ஏற்படுத்துவதற்கு உதவியது. இப்பின்னணியில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமொன்றாக மீண்டெழும் செலவினம் 2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.5 சதவீதத்திலிருந்து 12.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.

- அண்மைய வருடங்களில் அரசாங்க முதலீட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட உந்துவிசையானது அரசாங்கத்தினால் சலுகையடிப்படையில் அர்ப்பணமொன்றாக முன்னேற்றத்தினை ஏற்படுத்தியதுடன், தேசியப் பொருளாதாரத்திற்கான அத்தகைய அரசாங்க முதலீடுகளில் நீண்ட கால நன்மையினை கவனத்திற் கொண்டு அரசிறை நெருக்கடிகள் மோசமாக அமையும் வகையில் அரசாங்க முதலீடு அங்கீகரிக்கப்படவில்லை. துறைமுகங்கள், பாதைகள் மற்றும் பாலங்கள், நீர் வழங்கல், நீர்ப்பாசனம், மின்சக்தி உற்பத்தி, கிராமிய உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை இலக்காகக் கொண்ட அரசாங்க முதலீடுகள் இக்காலப்பகுதியின் போது நாடு முழுவதும் தொடர்ந்து காணப்பட்டது. 2010 இன் முதல் 9 மாதங்களின்போது அரசாங்க முதலீடு ரூபா 207 பில்லியனாக அதாவது மொ.உ.உற்பத்தியில் 3.7 சதவீதமாக காணப்பட்டது.

- தரமான அரசாங்க செலவிடல் மீது உயர் அழுத்தம் கொடுக்கும் அதேவேளை, கட்டமைப்பு மற்றும் நிறுவன விவகாரங்களில் காணப்படும் பிரச்சினைகளை நீக்குவதற்கு தேவையான மறுசீரமைப்புக்கள் மற்றும் கொள்கை முன்னெடுப்புகளுக்கு அரசாங்கம் அதன் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியது. இந்த வகையில் அமைச்சுக்களின் பணிகளும் தொழிற்பாடுகளும் மீள் உருவாக்கம் செய்யப்பட்டன. அத்துடன், கொள்கை செயற்படுத்துகை ஒருங்கிணைப்பானது அரசாங்கத்துறை நிறுவனங்களுக்கு ஊக்கமளித்த அதேவேளை தனியார்துறை தொழில் முயற்சிகளும் உறுதிப்படுத்தப்பட்டன. நிருவாக மற்றும் ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள், நடைமுறைச் செயற்பாடுகள் மற்றும் தொடர்புடைய சட்டங்களை இலகுபடுத்துவதற்கு தேவையான சிபாரிசுகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது. அத்துடன் அனைத்து நிரல் அமைச்சுக்களும் பயன்படுத்தப்படாதிருக்கும் ஆதனங்களை உற்பத்தித் திறன் மிக்க வகையில் மேம்படுத்தும் நோக்கத்துடன் தனியார் துறைக்கான தொழிற்பாட்டு களம் ஒன்றினை திறப்பதற்கு முடியுமான வகையில் பிரத்தியேக விடயங்களை இனங் காண்பதற்கு வேண்டப்பட்டன.

- தளம்பல் வாய்ந்த வெளிநாட்டு சூழலொன்று காணப்பட்ட போதிலும், 2010 செப்டெம்பர் இறுதியளவில் மொத்த கருத்திட்டம் தொடர்பான வெளிநாட்டு நிதியளிப்பாக கொடை வழங்கும் முகவர்களினால் வழங்கப்பட்ட மொத்த அர்ப்பணிப்பு 956 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்த அதேவேளை, இக்காலப்பகுதியின்போது இலங்கைக்கான கடன் வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தொகை 2,469 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்ததுடன், 2009 இல் பதிவாகிய 2,222 மில்லியன் ஐ.அ.டொலர் அர்ப்பணிப்பு மட்டத்தினை விட உயர்வாகக் காணப்பட்டது.

- முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்தியதைத் தொடர்ந்து 10 வருட காலப்பகுதிக்கான கடன் பிணை மூலமாக 1,000 மில்லியன் ஐ.அ.டொலர்களினை அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்ததுடன், சேகரிக்கப்பட்ட நிதி உயர் செலவின ரூபாவாக பயன்படுத்தப்பட்டதுடன், வெளிநாட்டு மிகை படுகடன் வரவு செலவுத்திட்டம் மீதான வட்டி சுமையினை மேலும் இலகுவாக்கியது.

- அதிகரித்த வருமான செயலாற்றுகை மற்றும் மீண்டெழும் செலவினத்தில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சி என்பவற்றின் காரணமாக வருமானக் கணக்கின் பற்றாக்குறையானது ரூபா 129 பில்லியனாக வீழ்ச்சியடைந்ததுடன், 2009 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் காணப்பட்ட 3.6 சதவீத பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் இது மொ.உ.உற்பத்தியில் 2.3 சதவீதமாக இருந்தது. இதனைத் தொடர்ந்து மொத்தப் பற்றாக்குறையான ரூபா 323 பில்லியன் 2009 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 6.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் 5.8 சதவீதமாக இருந்தது.

**அட்டவணை 2**

**வரவு செலவுத் திட்டச் சுருக்கம் (ஜன-செப்) - பொருளாதார வகுப்பாக்கம்**

| | 2009 | 2010 |
|---|---|---|
| **வருமானமும் மானியங்களும்** | **542,791** | **592,484** |
| **வருமானம்** | **522,338** | **581,871** |
| வரி | 457,580 | 511,351 |
| வரியல்லாதவை | 64,759 | 70,520 |
| **மானியங்கள்** | 20,453 | 10,613 |
| **செலவினம்** | **862,691** | **915,818** |
| நடைமுறை | 698,141 | 710,998 |
| இதில்: சம்பளங்களும் கூலிகளும் | 208,370 | 228,597 |
| வட்டி | 253,619 | 278,456 |
| அரசாங்க முதலீடு | 180,550 | 207,102 |
| பிற | (8,000) | (2,242) |
| **வருமானப் பற்றாக்குறை(-) / மிகை(+)** | **(175,803)** | **(129,127)** |
| **மொத்தப் பற்றாக்குறை(-) /மிகை(+)** | **(319,900)** | **(323,334)** |
| **நிதியளிப்பு** | **319,900** | **323,334** |
| தேறிய வெளிநாட்டு நிதியளிப்பு | 3,013 | 44,750 |
| தேறிய உள்நாட்டு நிதியளிப்பு | 316,887 | 278,584 |
| வருமானம் / மொ.உ.உ (%) | 10.8 | 10.5 |
| நடைமுறைச் செலவினம்/ மொ.உ.உ(%) | 14.5 | 12.8 |
| பகிரங்க முதலீடு/மொ.உ.உ(%) | 3.7 | 3.7 |
| வருமானப் பற்றாக்குறை(-)/மிகை(+) மொ.உ.உ(%) | (3.6) | (2.3) |
| மொத்த வ.செ.தி. பற்றாக்குறை/மொ.உ.உ (%) | (6.6) | (5.8) |

*மூலம்:அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## அரசாங்க வருமானம்

2010 இன் முதல் ஒன்பது மாதங்களில் அரசாங்க வருமானம் ரூபா 60 பில்லியனால் வளர்ச்சியடைந்தது. இது ரூபா 581,871 மில்லியனாக இருந்ததுடன், 11 சதவீத வளர்ச்சியொன்றாகும். மொ.உ.பொருளாதார செயற்பாடுகளில் முன்னேற்றமடைந்த செயலாற்றுகை, விசாலமான பொருட்களுக்கு தடுக்கப்பட்ட உற்பத்தி வரிகளை நீக்குவதற்கான கொள்கைத் தீர்மானத்தின் மூலம் இறக்குமதிகளின் அதிகரிப்பு மற்றும் கடத்தலுக்குட்படக் கூடிய பொருட்கள் மற்றும் வரி ஏய்ப்பு என்பவற்றினை குறைவான வரி சேகரிப்பிற்கு காரணமாக மாற்றியதனால் அரசாங்கத்தின் வருமானத்தில் சிறந்த செயலாற்றுகையொன்றிற்று பங்களிப்புச் செய்தது.

உள்நாட்டு தயாரிப்புத் துறை மற்றும் சேவைகள் துறையில் முன்னேற்றமடைந்த செயலாற்றுகை உள்நாட்டு பெறுமதிசேர் வரி மற்றும் உற்பத்தித் தீர்வை சேகரிப்பில் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்ததுடன், வர்த்தகம் தொடர்பான வரி வருமானத்தை அதிகரிக்குமளவு 37 சதவீதமான அதிகரிப்பு இறக்குமதியில் காணப்பட்டது. இது அத்தகைய பொருட்கள் மீது ஏற்புடையதான உற்பத்தித் தீர்வையினை 50 சதவீதத்தினால் குறைத்ததன் மூலம் மோட்டார் வாகனங்களின் அளவு அதிகரிப்பிற்கு மேலும் காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும், சர்வதேச எண்ணெய் விலை மற்றும் நுகர்வுப் பொருட்களின் விலைகள் அதிகரித்த போது உள்நாட்டு பொருளாதார செயற்பாடுகளுக்கு பாதகமில்லாத வகையில் இறக்குமதிகளை அனுமதிப்பதன் மூலம் விலையினை ஸ்திரப்படுத்தும் நோக்குடன் இறக்குமதித் தீர்வைகளிலிருந்து இறக்குமதி வருமான வளர்ச்சி அதிகரித்தது.

**அட்டவணை 3**

**வருமான செயலாற்றுகை (ஜன-செப்)**

ரூபா.மில்

| | 2009 | 2010 | வளர்ச்சி |
|---|---|---|---|
| **வரி வருமானம்** | **457,580** | **511,351** | **11.8** |
| வருமான வரி | 109,628 | 101,506 | (7.4) |
| பெ.சே.வரி | 125,322 | 156,227 | 24.7 |
| உற்பத்தி வரி | 73,333 | 87,325 | 19.1 |
| தேசக் கட்டுமான வரி | 16,088 | 32,530 | 102.2 |
| து.மு.வி.நி.அபிவிருத்தி அறவீடு | 25,014 | 34,732 | 38.9 |
| இறக்குமதித் தீர்வை | 59,795 | 43,104 | (27.9) |
| பிற | 48,400 | 55,927 | 15.6 |
| **வரியல்லாத வருமானம்** | **64,759** | **70,520** | **8.9** |
| **மொத்த வருமானம்** | **522,338** | **581,871** | **11.4** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

**வரைபு 1**



## வருமான வரிகள்

தனியாள் வருமான வரி, நிறுவன வருமான வரி, பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் வட்டி வருமானம் மீதான வரி என்பவற்றை உள்ளடக்கிய வருமான வரிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 101,506 மில்லியனை பதிவாக்கியுள்ளதுடன், இது 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் 9 மாதங்களின் போது 7 சதவீத வீழ்ச்சியொன்றாகும். 2009 இன் ஆரம்ப பகுதியில் பாதிக்கப்பட்ட நிலையிலிருந்த பொருளாதார மறுமலர்ச்சியுடன் நிறுவன மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி 4 சதவீதத்தினால் அதாவது ரூபா 47 பில்லியனாக அதிகரித்த அதேநேரம் பொருளாதார சேவைக் கட்டணத்திலிருந்து ரூபா 13 பில்லியன் அதாவது 27 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டதுடன், இக் காலப்பகுதியின்போது உலகப் பொருளாதார நெருக்கடி காணப்பட்ட வேளை, சில துறைகளின் மீது வழங்கப்பட்ட சலுகைகளை நீக்கியமை மற்றும் அதிகரித்த புரள்வு என்பவற்றினால் அடையப்பட்ட நன்மையாகும். பொதுவாக, வருமான வரி வருமானத்தில் ஏற்பட்ட பாதிப்பு அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவு வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் வட்டி வருமானம் மீதான வரியில் பாரிய வீழ்ச்சியொன்றிற்கு காரணமாக அமைந்தது. திறைசேரி உண்டியல் விளைவு வீதமானது 3,6 மற்றும் 12 மாதங்களில் முறையே 257, 280 மற்றும் 374 என்ற அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்த அதேநேரம் திறைசேரி முறிகளின் வீதம் 2009 செப்டெம்பரிலிருந்து 2010 செப்டெம்பர் வரைக்கும் 425 இற்கு அதிகமான அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது.

**அட்டவணை 4**

**வருமான வரி வருமானச் செயலாற்றுகை (ஜன-செப்)**

ரூபா.மில்

| வரி அடிப்படை | 2009 | 2010 | வளர்ச்சி % |
|---|---|---|---|
| கம்பனி கம்பனியல்லாத | 44,864 | 46,521 | 4 |
| உ.பொ.செ.வரி | 11,078 | 12,250 | 11 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 10,164 | 12,860 | 27 |
| வட்டி மீதான வரி | 43,522 | 29,875 | (31) |
| **மொத்தம்** | **109,628** | **101,506** | **(7)** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

### பெறுமதிசேர் வரி

2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 125,322 மில்லியனாகக் காணப்பட்ட பெறுமதிசேர் வரி வருமானம் 2010 செப்டெம்பர் மாதத்தில் ரூபா 156,227 மில்லியனாக காணப்பட்டது. இது மீளாய்வு காலத்தில் 25 சதவீத அதிகரிப்பொன்றினை பதிவாக்கியது. உள்நாட்டு தயாரிப்பு மற்றும் சேவைகள் துறையில் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாக தேறிய அடிப்படை மீதான உள்நாட்டு பெறுமதிசேர் வரி சேகரிப்பு 2010 இன் முதல் ஒன்பது மாதங்களில் 14 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. 2009 உடன் ஒப்பிடுகையில் பெறுமதி அடிப்படையில் இறக்குமதிகளின் அதிகரிப்பு, உயர் பெற்றோலிய விலைகள் மோட்டார் வாகன இறக்குமதிகளில் அதிகரிப்பினை ஏற்படுத்தியதுடன், 2010 யூன் 1 ஆம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தீர்வைக் குறைப்பானது 2009 இல் காணப்பட்ட ரூபா 43 பில்லியனிலிருந்து ரூபா 63 பில்லியன் தேறிய அடிப்படை மீதான இறக்குமதிகள் மீது பெறுமதிசேர் வரி அதிகரிப்பிற்கு உதவியாக இருந்தது. யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் உள்நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட மேம்பாடு மற்றும் சுற்றுலாத்துறைச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மறுமலர்ச்சி என்பன பெறுமதிசேர் வரி வருமான சேகரிப்பில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது.

**அட்டவணை 5**

**பெறுமதி சேர் வரி செயலாற்றுகை (ஜன-செப்)**

| வரி அடிப்படை | ரூபா.மில் | | வளர்ச்சி % |
|---|---|---|---|
| | **2009** | **2010** | |
| உள்நாட்டு | 82,829 | 94,210 | 14 |
| இறக்குமதி | 47,205 | 68,213 | 45 |
| **மொத்த வருமானம்** | 130,034 | 162,423 | 25 |
| மீள் கொடுப்பனவுகள் | 4,712 | 6,196 | 32 |
| **தேறிய வருமானம்** | **125,322** | **156,227** | **25** |
| **மொத்த வருமானத்தில் மீள்கொடுப்பனவு %** | **3.6** | **3.8** | |

*மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## உற்பத்தி வரிகள்

சிகரட்டுகள், மதுபானம், பெற்றோலிய உற்பத்திகள், மோட்டார் வாகனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மீதான உற்பத்தி வரி வருமானம் 2010 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது ரூபா 87,325 மில்லியனாக காணப்பட்ட அதேவேளை 2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 19 சதவீத அதிகரிப்பொன்றாகும்.

**அட்டவணை 6**

**உற்பத்தி வரி செயலாற்றுகை (ஜன - செப்)**

| வரி அடிப்படை | ரூபா மில் | | வளர்ச்சி % |
|---|---|---|---|
| | 2009 | 2010 | |
| மதுபானம் | 21,077 | 26,045 | 24 |
| சிகரெட்டுகள் | 29,365 | 29,589 | 1 |
| பெற்றோலியம் | 16,971 | 19,123 | 12 |
| மோட்டார் வாகனங்கள் | 1,995 | 9,920 | 397 |
| பிற | 3,926 | 2,648 | -32 |
| மொத்தம் | 73,333 | 87,325 | **19** |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

சட்டரீதியற்ற நடவடிக்கைகளினை தடுப்பதற்காக உள்நாட்டு தயாரிப்பு கைத்தொழில்களுக்கான மதுபானத்தை வழங்குதல் மீது பின்பற்றப்பட்ட சில நடவடிக்கைகளின் மூலம் வன் மற்றும் மோல்ட் மதுபான உற்பத்திகள் முறையே 19 சதவீதம் மற்றும் 31 சதவீதத்தினால் அதிகரித்தது. மதுபானம் மீதான உற்பத்தித் தீர்வை வருமானம் 2009 இல் இதே காலப்பகுதியில் காணப்பட்டதனை விட 2010 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை ரூபா 26,045 மில்லியனாக அதாவது 24 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. சிகரட்டுகள் மீதான உற்பத்தித் தீர்வை ரூபா 29,589 மில்லியனாக பெறப்பட்டதுடன், 2010 யூனில் மேற்கொள்ளப்பட்ட உயர் வீத திருத்தங்களின் பாதகமான தாக்கத்தினால் வடக்கு மற்றும் கிழக்கில் உருவாக்கப்பட்ட சந்தைகளின் காரணமாக 2010 இல் சிகரட்டுகள் விற்பனை அதிகரித்தது.

அரசாங்கத்தின் மதுபானம் மற்றும் சிகரட்டுகள் பாவனையினை குறைப்பதற்கான உற்பத்தி கொள்கை காலத்திற்குக் காலம் தொடர்ந்து திருத்தப்பட்டதுடன், சிகரட் மற்றும் மதுபானத்தின் தீர்வை விகிதமும் திருத்தப்பட்டது. அத்துடன் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்பட்ட அதேவேளை சட்டரீதியற்ற மதுபானம், போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காக கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்பு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 7**

**சிகரட்டுகள் மீதான உற்பத்தித் தீர்வை வீத திருத்தங்கள்**

ரூபா. / 1,000 சிகரட்டுகள்

| வகுதி | 2007 நவம் | 2008 மார்ச் | 2008 செப் | 2009 ஜன | 2009 மார்ச் | 2010 யூன் | 2007 நவம்பர் முதல் 2010 யூன் வரை அதிகரிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| பென்சன் அன்ட் எச் | 8,868 | 9,840 | 10,870 | 11,170 | 12,170 | 13,170 | 49 |
| கோல்ட் லீவ் | 8,314 | 8,850 | 9,380 | 9,681 | 10,715 | 11,260 | 35 |
| விக்கறி | 7,219 | 7,219 | 7,745 | 7,991 | 8,485 | 9,028 | 25 |
| பிற | 3,722 | 4,520 | 5,048 | 5,215 | 5,706 | 6,246 | 68 |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

மோட்டார் வாகன இறக்குமதிகள் மீது ஏற்புடையதான உயர் உற்பத்தித் தீர்வைகளின் காரணமாக கடந்த சில வருடங்களின்போது மோட்டார் வாகன இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினைக் கவனத்திற் கொண்டு பொருளாதாரத்திற்கு சாதகமான நோக்கொன்றினை வழங்குவதற்கும் சுற்றுலாத்துறையில் எதிர்பார்க்கப்பட்ட மறுமலர்ச்சியினை ஏற்படுத்தவும், 2010 யூன் 1ஆம் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில் மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வை குறைக்கப்பட்டது. விலை வீத திருத்தத்தினால் ஏற்பட்ட நன்மை காரணமாக மோட்டார் வாகனங்கள் மீதான உற்பத்தித் தீர்வை 2009 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்டதனை விட 2010 இன் முதல் ஒன்பது மாதங்களில் ஏறக்குறைய 5 மடங்கான ரூபா 9,920 மில்லியனை பெற்றுக் கொண்டது. பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் பாதிக்கப்பட்டிருந்த பாதை வலையமைப்பு மேம்படுத்தப்பட்டமை என்பவற்றினால் மோட்டார் கார்களுக்கு மேலதிகமாக முச்சக்கர வண்டிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் என்பவற்றின் இறக்குமதிகளும் அதிகரித்தன.

**அட்டவணை 8**

**வாகன இறக்குமதிகள்**

| வியடம் | 2009 ஜன-செப் | 2010 ஜன-மே | 2010 யூன்-செப் | 2010 ஜன-செப் | வளர்ச்சி % 2009/2010 |
|---|---|---|---|---|---|
| ட்ரக்டர்கள் | 10,482 | 6,773 | 9,716 | 16,489 | 57 |
| பயணிகள் வான்கள் | 23 | 30 | 88 | 118 | 413 |
| பஸ்கள் | 422 | 547 | 819 | 1,366 | 224 |
| மோட்டார் கார்கள் | 1,282 | 1,300 | 10,515 | 11,815 | 822 |
| முச்சக்கர வண்டிகள் | 16,149 | 21,483 | 21,032 | 42,515 | 163 |
| அம்புலன்ஸ் | 23 | 27 | 17 | 44 | 91 |
| பிரேத வாகனங்கள் | 6 | 4 | 8 | 12 | 100 |
| பொருட்கள் போக்குவரத்துக்கான வாகனங்கள் | 3,797 | 6,001 | 7,646 | 13,647 | 259 |
| விசேட நோக்க வாகனங்கள் | 151 | 134 | 100 | 234 | 55 |

*மூலம்: இலங்கை சுங்கத் திணைக்களம்*

வடக்கு மற்றும் கிழக்கில் புதிய சந்தைகளைத் திறத்தல் பாரியளவு மோட்டார் வாகன இறக்குமதி விரிவாக்கம் மற்றும் பாரிய உட்கட்டமைப்பு கருத்திட்டங்களின் செயற்படுத்துகை என்பவற்றினால் ஏற்பட்ட கேள்வி அதிகரிப்பு காரணமாக குறித்த காலப்பகுதியின் போது பெற்றோலியம் மீதான உற்பத்தித் தீர்வையும் வளர்ச்சிப் போக்கொன்றினை பதிவாக்கியுள்ளது.

## இறக்குமதித் தீர்வை

2010 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது சேகரிக்கப்பட்ட இறக்குமதித் தீர்வை வருமானம் ரூபா 43,135 மில்லியனாகும். குறித்த காலப்பகுதியில் மொத்த இறக்குமதிகள் 37 சதவீதத்தினால் அதிகரித்தபோதும், மீளாய்வு காலத்தின்போது பெற்றோல், டீசல் மீது வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்புகள் மற்றும் முதல் நான்கு மாதங்களில் கோதுமை மா மீது வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு என்பன வருமான செயலாற்றுகை மீது பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. மேலும், இலங்கையினால் கைச்சாத்திடப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை உள்ளடக்கிய வகையில் காலப்பகுதி விரிவாக்கம் மற்றும் மொத்த இறக்குமதிகள் என்பன தீர்வையற்ற முறையில் அனுபவிக்கப்பட்டதுடன், சாதாரண தீர்வை நிலைமை இறக்குமதித் தீர்வை வருமானத்தில் பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. இந்த உடன்படிக்கைகளின் கீழ் வழங்கப்பட்ட சலுகைகள் காரணமாக இழக்கப்பட்ட வருமானம் 2010 ஜனவரி - செப்டெம்பர் காலப்பகுதியின்போது ஏறக்குறைய ரூபா 3 பில்லியனாக இருந்தது.

**அட்டவணை 9**

**பிரதான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளினால் வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகளின் கீழ் இறக்குமதிகளின் பெறுமதி - (2010 ஜன - யூன்)**

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | தீர்வைச் சலுகைக்குட்பட்ட உற்பத்திப் பொருட்களின் எண்ணிக்கை | இறக்குமதி ( ரூபா.மில்) |
|---|---|---|
| இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA) | 4,598 | 28,019 |
| பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA) | 5,318 | 4,464 |
| தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAPTA) | 4,801 | 1,209 |
| ஆசிய - பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA) | 579 | 450 |

*மூலம்: வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்*

இறக்குமதித் தீர்வை கட்டமைப்பினை இலகுபடுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இறக்குமதி மேலதிகக் கட்டணங்கள் இல்லாதாக்கப்பட்ட அதேநேரம் 0.5,15 மற்றும் 30 சதவீதத்தினைக் கொண்டதாக நான்கு மட்டத்தில் தீர்வைக் கட்டமைப்பு குறைக்கப்படும் வகையில் சுங்கத்தீர்வைக் கட்டமைப்பு குறைக்கப்பட்டது. உள்நாட்டு பெறமதிசேர் செயற்பாடுகளுக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 2.5 சதவீத இயந்திரங்கள் மற்றும்

மூலப் பொருட்கள் மீது ஏற்புடையதான இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டது. அத்துடன் சர்வதேச தரம் வாய்ந்த உற்பத்திப் பொருட்களுக்கான கவர்ச்சிகரமான கொள்வனவு நிலையமொன்றாக இலங்கையினை மேம்படுத்தும் வகையில் பெரும்பாலான மின்சார உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த இறக்குமதித் தீர்வை, பெறுமதிசேர் வரி, உற்பத்தித் தீர்வை மற்றும் செஸ் வரி என்பன நீக்கப்பட்டதுடன் 10 சதவீதத்திற்கு குறைந்த வினைத்திறன் மிக்க வரி வீதமொன்றாக அவை கொண்டு வரப்பட்டது.

## விசேட நுகர்வுப்பொருள் அறவீடு

தெரிவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் மீதான தனிப்பட்ட வரியொன்றாக காணப்படும் விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டிலிருந்து பெறப்பட்ட வருமானம் 2009 இல் அதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 15,680 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 ஜனவரி - செப்டெம்பர் காலப்பகுதியின்போது ரூபா 7,765 மில்லியனாகக் காணப்பட்டது. வருமான சேகரிப்பில் குறிப்பிடத்தக்களவான இந்த வீழ்ச்சி வாழ்க்கைச் செலவினையும் உள்நாட்டு வழங்கலின் கிடைப்பனவினையும் கவனத்திற் கொண்டு பருப்பு, சீனி, பெரிய வெங்காயம் என்பவற்றின் மீதான விகிதத்தில் ஏற்பட்ட குறைவடைவு காரணமாக ஏற்பட்டதாகும். உள்நாட்டு உற்பத்தியாளர் விலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் விசேட நுகர்வுப் பொருள் அறவீட்டு விகிதத்தினை அரசாங்கம் காலத்திற்குக் காலம் திருத்தியது.

**அட்டவணை 10**

**விசேட நுகர்வுப் பொருள் அறவீடு**

**தெரிவு செய்யப்பட்ட பொருட்கள் மீது ஏற்புடையதான வீதம்.**

| விடயம் | வீதம் (ரூபா கி.கி..ஒன்று) | |
|---|---|---|
| | ஒக். 2009 | 2010 ஒக். இறுதியில் |
| நெத்தலி | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 25 | 10 |
| சிவப்பு வெங்காயம் | 10 | 25 |
| பெரிய வெங்காயம் | 25 | 10 |
| வெள்ளைப்பூடு | 30 | 10 |
| பச்சைக் கடலை | 15 | 15 |
| பருப்பு - முழுமையானது | 15 | 10 |
| உடைத்தது | 20 | 15 |
| மிளகாய் - அரைக்காதது | 50 | 20 |
| அரைத்தது | 40 | 25 |
| தகரத்திலடைத்த மீன் | 85 | 85 |
| சீனி | 16 | 5 |

*மூலம்: வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்*

### பிற வரிகள்

இறக்குமதிகளின் பெறுமதியில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக 2010 இன் முதல் ஒன்பது மாதங்களில் துறைமுக விமான நிலைய அபிவிருத்தி அறவீடானது 39 சதவீதத்தால் அதாவது 34,732 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. செஸ் வரியானது இறக்குமதி வளர்ச்சியின் காரணமாக 2009 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட வளர்ச்சி 12 சதவீதத்தினால் அதாவது ரூபா 22,468 மில்லியனாக அதிகரித்தது. இதனால் நடைமுறையிலுள்ள செஸ் வரி விகிதங்களின் அளவு உயர்த்தப்பட்டதுடன், உள்நாட்டு பெறுமதிசேர்ப்புக்கான விலை ஊக்குவிப்புக்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் உள்ளடக்கம் விரிவுபடுத்தப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் குறைந்த விலைகள் மற்றும் துணை தரமுடைய இறக்குமதிகளிலிருந்து உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் விகிதங்கள் அதிகரிக்கப்படுவது மேற்கொள்ளப்பட்ட அதேவேளை உள்நாட்டுப் பெறுமதிசேர்க்கப்பட்ட கைத்தொழில்களுக்கு ஊக்கமளிப்பதற்காக 2010 யூன் மாதத்தில் பெரும்பாலான மூல பொருட்கள் மீது ஏற்புடையதாகவிருந்த செஸ் வரி நீக்கப்பட்டது.

2010 இன் மீளாய்வுக் காலத்தின்போது யுத்தத்திற்குப் பின்னரான புனரமைப்பு மற்றும் மீள் கட்டமைப்பு செலவினங்களை ஈடு செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தேசக் கட்டுமான வரி விகித திருத்தங்களின் காரணமாக ரூபா 32,530 மில்லியன் பெறப்பட்டது.

## வரியல்லாத வருமானம்

2009 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியிலிருந்த ரூபா 64,759 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 ஜனவரி - செப்டெம்பர் காலப்பகுதியில் வரியல்லாத வருமானம் ரூபா 70,520 மில்லியனாகும். இந்த அதிகரிப்பானது அரசாங்க வங்கிகளிலிருந்து மாற்றப்பட்ட இலாபங்களின் அதிகரிப்பு மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ரூபா 10 பில்லியன் அறவீடு மற்றும் அரசாங்க தாபனங்களிலிருந்து பெறப்பட்ட மேலதிக நிதிகளின் மாற்றல்கள் என்பனவற்றினால் ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், 2009 இல் ரூபா 20 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இலங்கை மத்திய வங்கியின் இலாப மாற்றல்கள் ரூபா 10 பில்லியனாக காணப்பட்டது.

## அட்டவணை 11

## அரசாங்க வருமானத்தின் மாறல் பகுப்பாய்வு (ஜனவரி - செப்டெம்பர்)

| வியடம் | 2009 | 2010 | காரணம் |
|---|---|---|---|
| வருமான வரி | **109,628** | **101,506** | அரசாங்கத்தின் பிணையங்களின் மீதான உற்பத்தி வீதத்தில் வீழ்ச்சியிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானத்தின் மீதான நிறுத்தி வைத்தல் வரியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான பிரதான காரணம் வருமானவரியில் வீழ்ச்சி ஏற்பட்டதாகும். எவ்வாறாயினும், பொருளாதார சேவைக்கட்டண சேகரிப்பில் அதிகரிப்பு சில துறைகளுக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புகளின் நீக்கம் என்பன சர்வதேசப் பொருளாதார பிரச்சினைகளில் பின்னடைவை ஏற்படுத்தியதுடன் நிறுவன வரிகளில் அதிகரிப்பு என்பனவும் பொருளாதார செயற்பபாடுகளின் வளர்ச்சியும் வருமானவரி சேகரிப்பில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது. |
| பெறுமதி சேர் வரி | **125,322** | **156,227** | யுத்தத்திற்குப் பின்னரான சூழ்நிலையில் உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளில் வளர்ச்சியானது உள்நாட்டு பெறுமதிசேர் வரி சேகரிப்பில் விரிவாக்கப்பட்டதுடன், பெறுமதி நியதிகளில் இறக்குமதிகளையும் அதிகரித்தது. உயர் பெற்றோலிய விலைகளில் இறக்குமதிகள் மீதான பெறுமதிசேர் வரியில் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது. யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் சுற்றுலாத்துறை வள்ச்சி பெற்றதுடன் மோட்டார் வாகனங்கள் மீதான உறபத்தித் தீர்வைகளின் குறைப்பினால் வாகன இறக்குமதிகள் அதிகரித்தமையும் பெறுமதிசேர் வரி வருமான சேகரிப்பில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. |
| உற்பத்தி வரி | **73,333** | **87,325** | அனைத்து வகையான சிகரட்டுகள் மற்றும் மதுபானத்தின் உயர் விகித திருத்தங்கள், மோட்டார் வாகனங்கள் மீது ஏற்புடையதான உயர் உற்பத்தித் தீர்வை குறைக்கப்பட்டதனால் இறக்குமதிகளின் அதிகரிப்பு மற்றும் வடக்கு கிழக்கில் புதிதாக திறக்கப்பட்ட சந்தைகளில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரிப்பு என்பன உற்பத்தி வரி சேகரிப்புக்கு சாதகமான பங்களிப்பைச் செய்தது. |
| இறக்குமதித் தீர்வை | **59,795** | **43,104** | பெற்றோலிய உற்பத்திகள் கோதுமைத் தானியம் மற்றும் இறக்குமதிகள் மீதான தீர்வை விலக்களிப்பானது தீர்வையற்ற வகையில் அனுபவிக்கப்பட்டது அல்லது இலங்கை அரசாங்கத்தினால் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் உள்ளடக்கத்தினால் சாதாரண தீர்வை அந்தஸ்தில் வரிச்சலுகை வழங்கப்பட்டமை இறக்குமதித் தீர்வை வருமானத்தில் பாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும், மோட்டார் வாகன இறக்குமதிகளின் அதிகரிப்பு மற்றும் கோதுமைத் தானியத்தின் மீதான தீர்வை விலக்களிப்பு நீக்கப்பட்டமை என்பன 2010 யூன் மாதத்திற்குப் பின்னர் இறக்குமதி தீர்வை சேகரிப்பில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. |
| துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு | **25,014** | **34,732** | துறைமுக மற்றும் விமான நிலைய அறவீட்டு வருமான சேகரிப்பின் மீது சாதகமான தாக்கமொன்றினை இறக்குமதிகளின் அதிகரிப்பு ஏற்படுத்தியது. |
| தேசக் கட்டுமான வரி | **16,088** | **32,530** | விகித மாற்றங்களின் முழுக் காலத்திற்குமான தாக்கம் பொருளாதாரத்தின் வளர்ச்சியுடன் ஏற்பட்டதுடன் தேசக் கட்டுமான வரி சேகரிப்பில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. |
| பிற வரிகள் | **48,400** | **55,927** | உள்நாட்டு செயற்பாடுகளில் மேம்பாடுகள், வங்கித் தொழில்துறையில் அதிகமான கடன் வழங்கல் பற்று வரி சேகரிப்பினை மேம்படுத்தியுள்ளதுடன் நிர்மாணத் துறையில் எழுச்சி மற்றும் தொடர்புடைய சேவைகள் முத்திரைத் தீர்வைகள் சேகரிப்பில் அதிகரிப்பொன்றுக்கு காரணமாக இருந்ததனால் ஈட்டுறுதிகள் மீது சாதகமான தாக்கமொன்று ஏற்பட்டது. மூலப் பொருட்கள் மீது ஏற்புடையதான செஸ் வரிகள் நீக்கப்பட்டதன் மூலம் பாதகமான தாக்கமொன்று ஏற்பட்டதுடன், உள்நாட்டு கைத்தொழில்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் சில பொருட்களை உள்ளடக்கியதாக இவை விரிவாக்கப்பட்டமை செஸ் வரி வருமானத்தின் அதிகரிப்புக்கு உதவியாக அமைந்தது. |
| வரியல்லாதவை | **64,759** | **70,520** | 2009 உடன் ஒப்பிடுகையில் மத்திய வங்கியிலிருந்தான குறைந்த இலாப மாற்றல்கள் காணப்பட்ட போதிலும், அரச வங்கிகளிலிருந்தான இலாபங்கள் அதிகரித்ததுடன், அரசாங்க நிறுவனங்களிலிருந்து மேலதிக நிதி மாற்றல்கள் மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலிருந்து ரூபா 10 பில்லியன் அறவீடு என்பன வரியல்லாத வருமானத்தின் அதிகரிப்பினை ஏற்படுத்தியது. |

*மூலம்: அரசிறைக் கொள்கைத் திணைக்களம்*

## அரசாங்க செலவினம்

முதல் நான்கு மாதங்களுக்கான அரசாங்கத்தின் செலவினம் பாராளுமன்றத்தால் கணக்கு வாக்குப் பணத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதனைத் தொடர்ந்த மூன்று மாதங்கள் அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்டிருந்தது. வாக்குப் பண கணக்கின் கீழ் செலவினங்களை ஒன்றிணைத்த செலவின மதிப்பீடுகள் மற்றும் 2010 இன் இறுதி காலப்பகுதிக்கான அரசியலமைப்பு ஏற்பாடு என்பன 2010 யூன் இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அங்கீகாரமும் வழங்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 6 சதவீத அசாதாரண வளர்ச்சியொன்றினை அதாவது ரூபா 915,815 மில்லியன் செலவினம் பதிவாகி உள்ளது. இது மீண்டெழும் செலவினமாக ரூபா 710,998 மில்லியனையும் அரசாங்க முதலீடாக ரூபா 207,102 மில்லியனையும் பதிவாக்கியிருந்தது.

2010 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது மீண்டெழும் செலவினமானது மிதமான வளர்ச்சியைக் காட்டியதுடன், மீண்டெழும் செலவினத்தினை விஞ்சும் வகையில் அரசாங்கத்தின் வட்டி மற்றும் சம்பள கொடுப்பனவுகள் நீங்கலாக மீண்டெழும் செலவின அதிகரிப்பொன்று ஏற்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் வட்டிச் செலவினமானது மொ.உ.உற்பத்தியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை அதாவது அரசாங்கத்தின் பிணையங்களின் மீதான வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டதன் பயனாக 2009 ஆம் ஆண்டில் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 5.3 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக வீழ்ச்சி ஏற்பட்டது.

2010 இன் முதல் ஒன்பது மாதங்களின் போது அரசாங்க முதலீடானது ரூபா 207 பில்லியனாக காணப்பட்டது. தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் அவை குறிப்பிட்ட காலத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் அர்ப்பணிப்பின் விளைவாக நீண்ட கால வளர்ச்சிக்கான பொருளாதார நன்மைகள் மின்சக்தி, துறைமுகங்கள், பாதைகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடரப்பட்ட அதேவேளை கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகளும் அதிகரித்த வளங்களுடன் மேற்கொள்ளப்பட்டன.

**அட்டவணை 12**

**அரசாங்க செலவின செயலாற்றுகை (ஜன-செப்)**

| | 2009 | 2010 (எதிர்வு கூறல்) |
|---|---:|---:|
| **நடைமுறைச் செலவினம்** | **698,141** | **710,998** |
| சம்பளங்களும் கூலிகளும் | 208,370 | 228,597 |
| வட்டி | 253,619 | 278,456 |
| சமுர்த்தி | 6,389 | 6,964 |
| உர மானியம் | 23,087 | 12,656 |
| ஓய்வூதியம் | 60,459 | 64,916 |
| பிற செலவினம் | 146,217 | 119,409 |
| **அரசாங்க முதலீடு** | **180,550** | **207,102** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

### சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவு

மாகாண சபைகள் மற்றும் பாதுகாப்புச் சேவைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளங்கள் மீதான செலவினம் 2010 இன் முதல் 9 மாதங்களில் ரூபா 228 பில்லியனாக அதாவது 2009 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்டதனைவிட 10 சதவீதத்தினால் அதிகரித்தது. வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 5,250 இனால் அதிகரித்ததுடன், 2009 நவம்பரில் பாதுகாப்பு படையினருக்கு மாதமொன்றுக்கு 1000 ரூபா விசேட கொடுப்பனவொன்று அறிமுகப்படுத்தப்பட்டதன் தாக்கம் மற்றும் அனைத்து படைவீரர்களுக்கும் யுத்தப் பிரதேச கொடுப்பனவு விரிவாக்கப்பட்டமை என்பன சம்பளச் செலவினத்தில் அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன.

2010 ஜனவரி - செப்டெம்பர் காலப்பகுதியின் போது மொத்த ஓய்வூதியக் கொடுப்பனவு ரூபா 65 பில்லியனாகும் என்பதுடன், 2009 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்டதைவிட 7 சதவீத அதிகரிப்பாகும். 2009 இல் ஏறக்குறைய 21,000 பேர் இளைப்பாறியதன் முழுமையான தாக்கம் மற்றும் 2010 இன் முதல் 9 மாதங்களின் போது 13,000 இளைப்பாறுநர்கள் சேர்ந்து கொண்டமை என்பன இந்த அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன. ஓய்வூதியம் பெறுநர் ஒருவருக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு மாதமொன்றுக்கு ரூபா 2,000 இலிருந்து ரூபா 2,375 ஆக அதிகரித்ததும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

**வட்டிச் செலவினம்**

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவு ரூபா 278,456 மில்லியனாகும். இது 2009 இன் முதல் 9 மாதங்களில் காணப்பட்ட தொகையை விட 10 சதவீத அதிகரிப்பொன்றாகும். எவ்வாறாயினும், உரிய காலப்பகுதியில் இக்காலப்பகுதியின் போதான வட்டிச் செலவினம் 2009 இல் காணப்பட்ட 5.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5 சதவீதமாக குறைவடைந்தது. வட்டிச் செலவினத்தின் வளர்ச்சியினைக் குறைப்பதற்கு உதவிய நீண்டகால முதிர்ச்சி படுகடன் மீள் கட்டமைப்புக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் என்ற வகையில் 2009 செப்டெம்பரிலிருந்து அரசாங்கப் பிணையங்கள் மீதான வட்டி விகிதத்தில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. இக்காலப்பகுதியின் போது வட்டிச் செலவினத்தின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்திய பாரிய வருமானப் பற்றாக்குறையின் பின்னணியில் மூலதன மற்றும் பிற செலவினங்களுக்கு தேவையான ரூபா நிதியத்திற்கு நிதியளிப்பதற்காக 2009 இன் பிற்பட்ட காலப்பகுதியில் விசேடமாக உள்நாட்டு சந்தையிலிருந்து பெறப்பட்ட பெறுகைகள் பாதிப்பினை ஏற்படுத்தியது.

**அட்டவணை 13**

**விளைச்சல் விகிதங்களின் பண்பு (%) - 2009-2010**

| காலப்பகுதி | திறைசேரி உண்டியல்கள் | | | திறைசேரி முறிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | 2 வருடம் | 3 வருடம் | 4 வருடம் | 5 வருடம் |
| 2009 செப் | 9.70 | 10.72 | 11.17 | - | 12.83 | 11.35 | 11.44 |
| 2009 டிசம் | 7.73 | 8.73 | 9.33 | 9.55 | 12.83 | 9.78 | - |
| 2010 மார்ச் | 8.41 | 9.15 | 9.47 | - | - | - | - |
| 2010 யூன் | 8.07 | 8.90 | 9.26 | - | 9.65 | - | - |
| 2010 செப் | 7.13 | 7.32 | 1.43 | - | 8.57 | - | 8.89 |
| சதவீத மாற்றம் (2009 செப் - 2010 செப்) | (257) | (340) | (374) | - | (426) | (255) | - |

*மூலம்: திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்*

**நலன்புரி மற்றும் உதவுத் தொகைக் கொடுப்பனவுகள்**

மதிப்பீட்டு தரவுகளின் அடிப்படையில் நலன்புரிக் கொடுப்பனவுகள் மற்றும் உதவுத்தொகைகள் மீதான மொத்தச் செலவினம் 2009 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூபா 65,098 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 ஜனவரி - ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 45,026 மில்லியனாகக் காணப்பட்டது. 2009 இன் பிற்பட்ட காலப்பகுதியில் சர்வதேச சந்தையில் சாதகமான உர விலையுடன் படிப்படியாக குறைக்கப்பட்ட உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நலன்புரி உதவிகள் மற்றும் இடம் பெயர்ந்தவர்கள் மீள் குடியேற்றத்தில் அடையப்பெற்ற முன்னேற்றம் மற்றும் கண்ணி வெடியகற்றல் செயற்பாடுகள் என்பன இந்த வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன.

அரசாங்கம் சமூகத்தில் மிகவும் வறுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பின்தங்கிய குழுக்களுக்கும் ரூபா 12,196 மில்லியன் வழங்கி ஒத்துழைத்ததுடன், இவ்வாறான உதவிகளை தொடர்ந்தும் வழங்கி வரும் அதேவேளை அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கான உதவியினை ரூபா 7,388 மில்லியனாக அதிகரித்தது. நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான செலவினம் ரூபா 1,629 மில்லியனாக இருந்ததுடன், இதன் மூலம் இலவச பாடப்புத்தகங்கள், சீருடைகள், பருவச் சீட்டுக்கள் மற்றும் இலவச சமயப் பாடசாலைப் புத்தகங்கள் என்பன வழங்கப்பட்ட அதேவேளை பாடசாலை போஷாக்குணவு நிகழ்ச்சித் திட்டத்திற்கான செலவினம் ரூபா 1,268 மில்லியனாக காணப்பட்டது. குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளுக்கு உதவும் நோக்கத்துடன் சிறிய விவசாய நிலச் சொந்தக்காரர்களை இலக்காகக் கொண்ட உர மானியத்திட்டத்திற்கான செலவினம் 2010 இன் முதல் 9 மாதங்களின் போது ரூபா 12,656 மில்லியனாகக் காணப்பட்டது. நெல் விவசாயிகள் அனைத்து வகையான உரங்களையும் 50 கி.கிராம் உறையொன்று ரூபா 350 என்ற மானிய விலையின் அடிப்படையில் தொடர்ந்தும் பெற முடியுமாக இருந்தது.

**அட்டவணை 14**

**நலன்புரிக் கொடுப்பனவுகளும் உதவுதொகைகளும் - (ஜன-ஆக)**

ரூபா. மில்

| விடயம் | 2009 | 2010 (எதிர்வு கூறல்) |
|---|---|---|
| **தாய் மற்றும் சேய்** | | |
| குழந்தைப் பாலுணவு உதவுதொகை | 112 | 79 |
| போஷண மல்ல | 336 | 225 |
| திரிபோஷா நிகழ்ச்சித்திட்டம் | 770 | 570 |
| இலவச பாடசாலைப் புத்தகங்களும் சீருடைகளும், உதவுத் தொகைகள் | 2,304 | 1,585 |
| தர்ம பாடசாலை புத்தகங்களும் சீருடைகளும் | 52 | 44 |
| பாடசாலை போஷாக்குணவு | 1,500 | 1,268 |
| **விவசாயம்** | | |
| விவசாயக் கடன்களுக்கான வட்டி மானியம் | 253 | 696 |
| உர மானியம் | 22,482 | 11,469 |
| **நலன்புரிக் கொடுப்பனவுகள்** | | |
| சமூர்த்தி நிவாரணம் | 6,389 | 6,964 |
| அங்கவீனமுற்ற படைவீரர்களுக்கான உதவி | 6,531 | 7,388 |
| உலக உணவு நிகழ்ச்சித்திட்ட உதவி | 6,552 | 4,055 |
| இடம் பெயர்ந்தவர்களுக்கான நலன்புரி உதவி | 962 | 881 |
| வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம் | 492 | 183 |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம்

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான மீள் குடியேற்றம் மற்றும் வடக்கு கிழக்கில் கண்ணி வெடியகற்றல் நடவடிக்கை அத்துடன் இப்பிரதேசங்களில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற சவால்களை அரசாங்கம் வெற்றிகரமாக எதிர் கொண்டது. யுத்தம் முடிவுற்று 18 மாதங்களுக்குள் எல்ரீரீஈ பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட ஏறக்குறைய 280,000 உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதற்கு அரசாங்கத்தினால் முடியுமாக இருந்ததுடன், தற்பொழுது ஏறக்குறைய 18,000 பேர் மாத்திரமே நலன்புரி நிலையங்களில் வாழுகின்றனர். 2010 இல் முதல் 9 மாதங்களின் போது இச்செயற்பாடுகளுக்காக ரூபா 8,803 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதுடன், அவற்றுள் சமைத்த உணவு மற்றும் பிற நலன்புரி உதவிகளுக்காக ரூபா 4,936 மில்லியன் செலவிடப்பட்ட அதேவேளை அடிப்படை உட்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகளை வழங்குவதற்காக மேலும் ரூபா 3,887 மில்லியன் பயன்படுத்தப்பட்டது.

## அரசாங்க முதலீடுகள்

“கம நெகும” மற்றும் “மக நெகும”, “வடக்கின் வசந்தம்” மற்றும் பிற வறுமைசார்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகளின் ஊடாக கிராமிய துறையினை இலக்காகக் கொண்டு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களினை துரிதப்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடங்களின் போது பாதைகள் மற்றும் பாலங்கள், மின் உற்பத்தி, துறைமுகங்கள், நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் மனித வள அபிவிருத்தி என்பவற்றினை உள்ளடக்கிய பிரதான தேசிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களில் பெறப்பட்ட உந்துவிசை குறித்த மீளாய்வு காலத்தின் போதும் பேணப்பட்டது. மொத்த அரசாங்க முதலீடு ரூபா 207 பில்லியனாகும். இது 2009 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் காணப்பட்டதனை விட 14 சதவீத அதிகரிப்பாகும்.

### அட்டவணை 15
### அரசாங்க முதலீடு - பிரதான முதலீட்டின் அடிப்படையில் (ஜன-செப்)

ரூபா.மில்

| | 2009 | 2010 |
|---|---|---|
| பாதைகளும் பாலங்களும் | 47,801 | 52,333 |
| மின்சாரம் | 18,589 | 18,568 |
| துறைமுக மற்றும் விமானசேவை | 15,338 | 18,028 |
| நீர்ப்பாசனம் | 8,775 | 5,005 |
| விவசாயமும் உற்பத்தியும் | 2,091 | 5,974 |
| நீர் வழங்கல் | 10,456 | 12,428 |
| கல்வி | 4,342 | 8,902 |
| சுகாதாரம் | 4,129 | 5,543 |
| கிராமிய உட்கட்டமைப்பு | 21,516 | 26,026 |
| போக்குவரத்து | 6,751 | 7,164 |
| நிர்வாகம் / நீதித்துறை/ பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பிற | 40,762 | 47,131 |
| **மொத்தம்** | **180,550** | **207,102** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## கிராமிய அபிவிருத்தி முன்னெடுப்புகள்

பாதைகள், குடிநீர், கிராமிய மின்சாரம், வீடமைப்பு போன்ற மீள் கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளினூடாக கிராமியத்துறை சனத்தொகைக்கு வலுவூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்ட “கம நெகும” நிகழச்சித் திட்டத்தின் கீழ் 11,918 கருத்திட்டங்கள் ஏறக்குறைய ரூபா 11 பில்லியன் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. நாடு பூராகவும் உள்ள கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமான “மக நெகும” நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான செலவினம் ஜனவரி - செப்டெம்பர் காலப்பகுதியின் போது ரூபா 1,700 மில்லியனாக இருந்ததுடன், 51,085 குடும்பங்கள் நன்மையடையும் வகையில் 704 கி.மீற்றர் கிராமியப் பாதைகள் புனரமைக்கப்பட்டன. இந்த வகையில் “மக நெகும” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 8,200 கி.மீற்றருக்கு மேற்பட்ட கிராமியப் பாதைகள் ஏறக்குறைய ரூபா 13,500 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டது.

### அட்டவணை 16
### “மக நெகும” கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-2010

| மாவட்டம் | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட மொத்த பாதைகளின் நீளம் (கி.மீ) | செலவினம் (ரூபா.மில்) | நன்மை பெறும் குடும்பங்கள் |
|---|---|---|---|---|
| கொழும்பு | 91 | 17 | 47 | 2,557 |
| கம்பஹா | 182 | 20 | 96 | 3,621 |
| களுத்துறை | 194 | 22 | 91 | 2,423 |
| கண்டி | 130 | 28 | 77 | 1,843 |
| மாத்தளை | 88 | 23 | 54 | 1,251 |
| நுவரெலியா | 36 | 21 | 50 | 918 |
| காலி | 39 | 12 | 32 | 979 |
| மாத்தறை | 329 | 64 | 180 | 4,519 |
| ஹம்பாந்தோட்டை | 929 | 129 | 612 | 11,888 |
| யாழ்ப்பாணம் | 8 | 4 | 10 | 212 |
| மன்னார் | 4 | 1 | 5 | 109 |
| வவுனியா | 11 | 10 | 15 | 332 |
| முல்லைத்தீவு | - | 0 | 0 | 0 |
| கிளிநொச்சி | - | 0 | 0 | 0 |
| மட்டக்களப்பு | 2 | 0 | 2 | 20 |
| அம்பாறை | 111 | 33 | 78 | 1,528 |
| திருகோணமலை | 4 | 0 | 2 | 42 |
| குருநாகல் | 341 | 219 | 256 | 11,400 |
| புத்தளம் | 88 | 23 | 60 | 1,863 |
| அனுராதபுரம் | 124 | 23 | 86 | 1,737 |
| பொலன்னறுவை | 84 | 36 | 60 | 1,320 |
| பதுளை | 25 | 3 | 15 | 256 |
| மொனராகலை | 162 | 4 | 43 | 1,106 |
| இரத்தினபுரி | 89 | 8 | 41 | 788 |
| கேகாலை | 43 | 4 | 28 | 373 |
| **மொத்தம்** | **3,114** | **704** | **1,940** | **51,085** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

**அட்டவணை 17**
**2010 யூலை 09 முதல் 2010 ஒக்டோபர் 25 ஆந் திகதி வரைக்குமான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக ஒதுக்கீடுகள்**

| தலைப்பு இல. | அமைச்சு/திணைக்களம் | நோக்கம் | செலவினம் (ரூபா.) | |
|---|---|---|---|---|
| | | | மீண்டெழும் | மூலதனம் |
| 1 | அதிமேதகு சனாதிபதி | வாகனங்கள் கொள்வனவு, போக்குவரத்து, சேவைகள், முன் இணைப்பு கட்டிடங்கள் நிகழ்ச்சித் திட்டம். | 416,000,000 | 1,758,040,000 |
| 2 | பிரதமர் அலுவலகம் | வாகனங்கள் கொள்வனவு, ஆளுக்குரிய வேதனாதிகள், வாகன பராமரிப்பு, புனரமைப்பு மற்றும் கட்டிடப் பராமரிப்பு | 14,000,000 | 29,250,000 |
| 3 | உயர் நீதிமன்ற நீதிபதிகள் | வெளிநாட்டுப் பிரயாணம், சேவைகள், வாகனப் பராமரிப்பு | 6,000,000 | |
| 8 | பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் | வாகனக் கொள்வனவு | | 8,850,000 |
| 17 | தேர்தல்கள் திணைக்களம் | வாகனக் கொள்வனவு | | 4,500,000 |
| 19 | நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் | வெளிநாட்டு பிரயாணம், போக்குவரத்து, வாடகை | 135,000 | |
| 22 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | ஆளுக்குரிய வேதனாதிகள், வாகனங்களுக்கான வரிக் கொடுப்பனவு, UNFPA இனால் வழங்கப்பட்ட மானிய கணக்கீடு | 12,900,000 | 9,315,114 |
| 101 | பௌத்த விவகார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு | வாகனக் கொள்வனவு, தஹம்பாய கட்டிட நிர்மாணம் | | 46,000,000 |
| 102 | நிதி திட்டமிடல் அமைச்சு | ஆளுக்குரிய வேதனாதிகள், வாகனக் கொள்வனவு, நிறுவன ஒத்துழைப்பு (சமூகப் பாதுகாப்புச் சபை, SLAAMB), வழங்கல்கள், கட்டிடங்கள், உபகரணங்கள் பராமரிப்பு, முன்னாள் திட்டச் செயற்படுத்துகை அமைச்சினால் உறப்பட்ட செலவினங்களுக்கான கணக்கீடு | 82,488,468 | 34,779,853 |
| 103 | பாதுகாப்பு அமைச்சு | நலன்புரி நிகழ்ச்சித் திட்டம், நிறுவன ஒத்துழைப்பு (நகர அபிவிருத்தி அதிகார சபை, சேவைகள், முன் இணைப்பு கட்டிடங்கள் நிகழ்ச்சித் திட்டம் | 58,600,000 | 400,731,954 |

**அட்டவணை 17 இன் தொடர்ச்சி……..**

| | | | | |
|---|---|---|---|---|
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | வெள்ளம் மற்றும் வரட்சி நிவாரணம், கரையோரப் பிரதேசங்களில் சுனாமி எச்சரிக்கை கோபுரங்களை நிறுவுதல், வாகனப்பராமரிப்பு, அனர்த்த முகாமைத்துவ நிலைய கட்டிடத்தின் முதலாவது கட்டத்தின் நிறைவு, வாகனக் கொள்வனவு, நிறுவன ஒத்துழைப்பு(NBRO) | 101,000,000 | 100,000,000 |
| 108 | தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 4,000,000 |
| 110 | நீதி அமைச்சு | வாகனக் பராமரிப்பு, தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம், சேவைகள், கட்டிடங்கள் மீட்பு, ஆளுக்குரிய வேதனாதிகள், நிறுவன ஒத்துழைப்பு (சட்ட உதவி ஆணைக்குழு), நடுத்தீர்ப்புச் சபை தலைவர் மற்றும் ஆணையாருக்கான கொடுப்பனவுகள் | 31,760,424 | 102,000,000 |
| 111 | சுகாதார அமைச்சு | இயந்திரம், உபகரணம் கொள்வனவு, ஆளுக்குரிய வேதனாதிகள், பிரயாணம், சேவைகள், வழங்கல்கள், கட்டிடங்கள், உபகரணம் பராமரிப்பு, ஆதனக் கடன் வட்டி, கட்டிடங்களின் புனரமைப்பு | 1,287,700,000 | 53,000,000 |
| 112 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | வெளிநாட்டிலுள்ள தூதரகங்களுக்கான வாகனக் கொள்வனவு | | 12,075,000 |
| 113 | துறைமுக மற்றும் விமானத்துறை அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 12,000,000 |
| 114 | போக்குவரத்து அமைச்சு | பலாலி மற்றும் காங்கேசன்துறைக்கிடையில் புகையிரதப் பாதை மீள் கட்டமைப்பு, இலங்கை சுங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்ட வாகனங்களின் கொள்வனவு | | 50,040,000 |
| 116 | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 12,200,000 |
| 117 | பெருந்தெருக்கள் அமைச்சு | மொனராகலை மாவட்டத்தில் பாதைகளின் மேம்பாடு, அலுவலக உபகரணம் கொள்வனவு, சேவைகள் | 490,000 | 1,001,610,000 |
| 118 | விவசாய அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 21,200,000 |
| 119 | மின்வலு சக்தி அமைச்சு | கிராமிய மின் வழங்கல் கருத்திட்டம் (கடன் அடிப்படையில்) | | 1,681,316,981 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு | நீர் மின்சாரம், போக்குவரத்து, யுனிசெப் சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம், வாகனக் கொள்வனவு | 4,000,000 | 21,000,000 |

**அட்டவணை 17 இன் தொடர்ச்சி……..**

| | | | | |
|---|---|---|---|---|
| 121 | பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 18,000,000 |
| 122 | ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சு | எரிபொருள், நிறுவன ஒத்துழைப்பு (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) | 4,000,000 | |
| 123 | நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | நிறுவன ஒத்துழைப்பு(NEMO), ஐ.நா.ஹபிராட் நிகழ்ச்சித் திட்ட செயற்படுத்துகை, ஆளுக்குரிய வேதனாதிகள், சேவைகள், வாகனப் பராமரிப்பு, அலுவலக உபகரணக் கொள்வனவு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணம், கட்டிடங்கள் புனரமைப்பு, ஆதனக் கடன் வட்டி, நிறுவன ஒத்துழைப்பு (நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபை), கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், வழங்கல்கள், சேவைகள் | 16,131,235 | 146,600,000 |
| 124 | சமுதாய சேவைகள் அமைச்சு | கட்டிட புனரமைப்பு, வாடகை, நிறுவன ஒத்துழைப்பு (அங்கவீனமுற்றவர்களுக்கான தேசியப் பேரவையும், செயலகமும், சமுதாய அடிப்படை புனரமைப்பு நிகழ்ச்சித் திட்டம், தேசிய ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம், வாகனக் கொள்வனவு, இலங்கை அரச நாட்டு நிகழ்ச்சித் திட்டம் | 9,800,000 | 22,670,000 |
| 127 | தொழிலாளர் உறவுகள் மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சு | உள்நாட்டுப் பிரயாணம், வாடகை, பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 2,000,000 | 8,000,000 |
| 128 | பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | மின்சாரம் மற்றும் நீர், நிறுவன ஒத்துழைப்பு (தேசிய கைவினைப் பேரவை) | 3,500,000 | |
| 130 | உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு | வாகன வாடகை, அனர்த்த பொறுப்பு வலையமைப்புக் கருத்திட்டம், கட்டிடங்களின் புனரமைப்பு | 700,000 | 301,000,000 |
| 133 | தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 11,500,000 |
| 134 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 6,000,000 |
| 135 | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு | பெருந்தோட்ட மறுசீரமைப்புக் கருத்திட்டம், நிறுவன ஒத்துழைப்பு (தெங்கு அபிவிருத்தி அதிகார சபை), வாகனக் கொள்வனவு | 6,000,000 | 381,000,000 |

**அட்டவணை 17 இன் தொடர்ச்சி……..**

| | | | | |
|---|---|---|---|---|
| 136 | விளையாட்டு அமைச்சு | வாகனக் கொள்வனவு , வாகனப் பராமரிப்பு, சேவைகள்,நிறுவன ஒத்துழைப்பு (சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி), எரிபொருள் | 18,400,000 | 4,000,000 |
| 138 | சுதேச வைத்தியத்துறை அமைச்சு | ஆயுர்வேத மருந்துகளுக்கான கொடுப்பனவு | | 3,000,000 |
| 139 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | வாகனக் கொள்வனவு , பேலியகொட மீன் சந்தைக் கட்டிடத் தொகுதி , துறைமுக இறங்குதுறை நிர்மாணம் (திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகம்) | | 1,081,000,000 |
| 140 | கால்நடை மற்றும் கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சு | தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | 75,000,000 |
| 143 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | இளைப்பாறல் நன்மைகள் | 15,000,000 | |
| 145 | மீள் குடியேற்ற அமைச்சு | வாடகை, மீள் குடியேற்ற செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பு | 3,403,000 | 42,625,600 |
| 149 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 6,300,000 |
| 153 | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | வாகனக் கொள்வனவு | | 15,500,000 |
| 156 | இளைஞர் விவகார அமைச்சு | தொழினுட்பக் கல்வி அபிவிருத்தி கருத்திட்டம், வாகனக் கொள்வனவு, நிறுவன ஒத்துழைப்பு, (NHRDC, CGTTI,NYSC, VTI, NAITA), ஆளுக்குரிய வேதனாதிகள், வெளிநாட்டுப் பிரயாணம், வழங்கல்கள், வாகனப் பராமரிப்பு, சேவைகள், கட்டிடம் மற்றும் வாகன புனரமைப்பு, தளபாடக் கொள்வனவு மற்றும் அலுவலக உபகரணம். | 162,500,000 | 414,500,000 |
| 160 | சுற்றாடல் அமைச்சு | வாகனக் கொள்வனவு , பயிற்சி மற்றும் திறன் விருத்தி, காகிதாதிகளும் அலுலவக உபகரணங்களும் | 800,000 | 13,949,850 |
| 166 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு | வாகனக் கொள்வனவு , போக்குவரத்து, மின்சாரம் மற்றும் நீர், ஆளுக்குரிய வேதனாதிகள், வாடகை | 8,600,000 | 14,000,000 |
| 171 | உயர் கல்வி அமைச்சு | விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆராய்ச்சி செயற்பாடுகளை மேம்படுத்துதல் | | 1,404,637 |
| 173 | பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | கட்டிடங்கள் புனரமைப்பு, தளபாடம் மற்றும் அலுவலக உபகரண கொள்வனவு | | 1,660,000 |

**அட்டவணை 17 இன் தொடர்ச்சி........**

| | | | | |
|---|---|---|---|---|
| 174 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு | பிழையாக வழி நடாத்தப்பட்டு சரணடைந்த இளைஞர்களின் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம், எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர், வாடகை, வாகனப் பராமரிப்பு, கட்டிடப் புனரமைப்பு, வாகனம், இயந்திரம் மற்றும் உபகரணக் கொள்வனவு | 3,000,000 | 334,623,000 |
| 175 | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | ஹிங்குறானை சீனிக் கைத் தொழில்கள் லிமிட்டெட்டின் நிலுவையிலுள்ள பொறுப்புக்களை தீர்த்தல் | | 80,000,000 |
| 201 | பௌத்த சமய அலுவல்கள் திணைக்களம் | தர்ம பாடசாலை பாடப் புத்தகங்கள் அச்சிடல், தர்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை, அகில இலங்கை தர்மப் பாடசாலை போட்டி, தர்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலக கொடுப்பனவு, வாகனக் கொள்வனவு (சுங்கம்) | 50,000,000 | 1,176,000 |
| 202 | முஸ்லீம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | சுங்கத் தீர்வை | 2,197,422 | |
| 203 | கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம் | தர்மப் பாடசாலைகளுக்கான நூலக கொடுப்பனவு | 4,796,000 | |
| 206 | கலாச்சார அலுவல்கள் திணைக்களம் | மின்சாரம் மற்றும் நீர்,கலாசார நிகழ்ச்சிகள் | 11,500,000 | |
| 209 | தேசிய சுவடிக் கூடங்கள் திணைக்களம் | வழங்கல்கள் | 500,000 | |
| 215 | தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள் | 6,600,000 | |
| 216 | சமுதாய சேவைகள் திணைக்களம் | நிறுவன ஒத்துழைப்பு (வயோதிபர்களுக்கான தேசிய செயலகம்) | 6,000,000 | |
| 219 | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் | தேசிய விளையாட்டு விழா | 25,000,000 | |
| 221 | தொழில் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், வாகனப் பராமரிப்பு, சேவைகள், வழங்கல்கள், ஆதனக் கடன் வட்டி | 20,525,000 | |
| 222 | இலங்கை இராணுவம் | நட்டஈட்டுக் கொடுப்பனவு, போக்குவரத்து, வழங்கல்கள், சேவைகள், ஆதனக் கடன் வட்டி, கட்டிடப் பராமரிப்பு, மூலதன சொத்துக்களின் கொள்வனவு, போக்குவரத்து, வாகனப் பராமரிப்பு, கட்டிட மீள் கட்டமைப்பு, வாகனங்கள், இயந்திரங்கள் | 2,287,400,000 | 600,000,000 |

## அட்டவணை 17 இன் தொடர்ச்சி……..

| | | | | |
|---|---|---|---|---|
| 223 | இலங்கைக் கடற்படை | நிறுத்தி வைத்தல் கொடுப்பனவுகள், உணவும் சீருடையும், நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆதனக் கடன் வட்டி, வாகனக் கொள்வனவு, வாகனங்கள் மற்றும் இயந்திரப் புனரமைப்பு, பயிற்சி மற்றும் திறன் விருத்தி, கப்பல்கள் மற்றும் படகுகளின் புனரமைப்பு, உள்நாட்டு பிரயாணம், வழங்கல்கள், வாகனம் மற்றும் இயந்திரப் பராமரிப்பு | 1,122,000,000 | 1,409,459,175 |
| 224 | இலங்கை விமானப்படை | நிறுத்தி வைத்தல் கொடுப்பனவுகள், உணவும் சீருடையும், உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் உபகரண கொள்வனவும் பராமரிப்பும், எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர் | 675,000,000 | 879,322,300 |
| 225 | பொலிஸ் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணம், எரிபொருள், மருத்துவ வழங்கல்கள், மின்சாரம் மற்றும் நீர், ஆதனக் கடன் வட்டி | 685,000,000 | |
| 228 | நீதிமன்ற நிர்வாகம் | வாகன குத்தகைக் கொடுப்பனவு, வெளிநாட்டு பிரயாணம், வட கிழக்கு நீதி மன்றங்கள் மற்றும் நீதிபதிகளின் வதிவிட கட்டிடத் தொகுதிகளை புனரமைத்தல், நிறுவன ஒத்துழைப்பு (உயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி), யுனிசெப் இனால் வழங்கப்பட்ட மானிய கணக்கீடு | 11,942,180 | 117,041,096 |
| 229 | சட்டமா அதிபர் திணைக்களம் | வெளிநாட்டுப் பிரயாணம், கட்டிடங்களின் புனரமைப்பு | 5,300,000 | 8,930,000 |
| 230 | சட்ட வரைஞர் திணைக்களம் | மின்சாரம் மற்றும் நீர் | 1,100,000 | |
| 231 | கடன் இணக்கச்சபை திணைக்களம் | கொடுப்பனவுகள் | 765,000 | |
| 233 | அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் | பயிற்சி மற்றும் திறன் விருத்தி, ஆளுக்குரிய வேதனாதிகள், சேவைகள் | 2,000,000 | 2,500,000 |
| 234 | உயர் நீதிமன்றப் பதிவாளர் | வெளிநாட்டு பிரயாணம், வாகனம் மற்றும் உபகரணக் கொள்வனவு, ஆளுக்குரிய வேதனாதிகள், காகிதாதிகளும் அலுவலக உபகரணங்களும் | 4,480,000 | 5,914,000 |
| 235 | சட்ட ஆணைக்குழு திணைக்களம் | மின்சாரம் மற்றும் நீர் | 200,000 | |
| 237 | தேசிய திட்டமிடல் திணைக்களம் | வாகனப் பராமரிப்பு | 500,000 | |
| 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், வெளிநாட்டுப் பிரயாணம், ஆதனக் கடன் வட்டி, வாகனங்கள் பராமரிப்பும் புனரமைப்பும், கல்வித்துறை அபவிருத்திக் கருத்திட்டம் | 5,330,000 | 1,170,000 |
| 241 | பொது தொழில் முயற்சிகள் திணைக்களம் | பணிக்கொடைக் கொடுப்பனவு | | 417,391 |
| 246 | வருமான வரித் திணைக்களம் | கட்டிடங்கள் பராமரிப்பும் புனரமைப்பும், வாடகை | 82,500,000 | 267,100,000 |

**அட்டவணை 17 இன் தொடர்ச்சி……..**

| | | | | |
|---|---|---|---|---|
| 249 | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கான கடன் வசதி, கடன் மிதப்புச் செலவினம் | 805,000,000 | 50,000,000 |
| 250 | அரச கணக்குகள் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், | 1,525,000 | |
| 251 | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு, தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணம் கொள்வனவு | 3,900,000 | 10,000,000 |
| 252 | சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களம் | 2011 ஆம் ஆண்டில் சனத்தொகை மற்றும் வீட்டுத் தொகுதி கணக்கெடுப்புக்காக பயன்படுத்துவதற்கு 250 மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு | | 28,750,000 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், வாகனப் பராமரிப்பு | 1,000,000 | |
| 264 | மாவட்டச் செயலகம்/கச்சேரி யாழ்ப்பாணம் | சாவகச்சேரி வைத்தியசாலையில் சிறுவர் மருத்துவப் பிரிவினை நிர்மாணித்தல் | | 5,650,000 |
| 280 | வெளிநாட்டு உதவி மற்றும் வரவு செலவுத்திட்ட கண்காணிப்பு திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள்,சேவைகள், கட்டிடப் புனரமைப்பு | 2,420,000 | 150,000 |
| 290 | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | உள்நாட்டுப் பிரயாணம், சேவைகள், நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் | 5,500,000 | |
| 298 | அளவை கூறுகள், தராதரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் | சேவைகள் | 42,000 | |
| 308 | தபால் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், சேவைகள் | 250,000,000 | |
| 309 | கட்டிடங்கள் திணைக்களம் | ஆளுக்குரிய வேதனாதிகள், உள்நாட்டு பிரயாணம், சேவைகள் | 9,400,000 | |
| 314 | தென் மாகாண சபை | காலி அனைத்து சாந்த கல்லூரிக் கட்டிட நிர்மாணத்திற்கான அவுஸ்திரேலிய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மானிய கணக்கீடு | | 2,841,887 |
| 315 | வட மாகாண சபை | ஆளுக்குரிய வேதனாதிகள், | 300,000,000 | |
| 317 | வட மத்திய மாகாண சபை | மாகாண விசேட அபிவிருத்தி மானியம், மாகாணப் பாதைகள் கருத்திட்டம் | | 497,500,000 |
| 318 | ஊவா மாகாண சபை | சுகாதாரத்துறை அபிவிருத்திக் கருத்திட்டம், மாகாணப் பாதைகள் கருத்திட்டம் | | 853,230,000 |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | கட்டிடங்கள் மற்றும் இயந்திரப் புனரமைப்பு, இயந்திரக் கொள்வனவு | | 78,000,000 |
| 323 | சட்ட அலுவல்கள் திணைக்களம் | உள்நாட்டுப் பிரயாணம், தபால் மற்றும் தொடர்பாடல் | 90,000 | |
| | | **மொத்தம்** | **8,658,420,729** | **13,163,393,838** |

*மூலம்: தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்*

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

### அரசாங்க காசுப்பாய்ச்சல் தொழிற்பாட்டுச் செயலாற்றுகை

2010 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான காலப்பகுதிக்கான எதிர்வு கூறப்பட்ட ரூபா 559 பில்லியன் வருமானத்திற்கு எதிராக அதிகரிப்பொன்று காணப்பட்டது. இந்த அதிகரிப்பானது இதே காலப்பகுதியின் இறுதியுடன் ஒப்பிடுகையில் குறைந்த தேறிய காசுப் பற்றாக்குறைக்கு காரணமாக இருந்தது. தொழிற்பாட்டு செயற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கான வெளிப்பாய்ச்சலுக்குப் பின்னரான காசுப் பற்றாக்குறை ரூபா 297.4 பில்லியனாக இருந்ததுடன், 2009 ஆம் ஆண்டிற்கான தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 15.1 பில்லியன் குறைவாகக் காணப்பட்டது. காசு பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் காரணம் கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9 மாத காலத்தில் சேகரிக்கப்பட்ட வருமானத்தினை விட அதிகமாகும். மொத்த இறுதிக் காசு மீதி (பற்றாக்குறை) ரூபா 62.1 பில்லியனாக இருந்ததுடன், 2009 இல் இதே காலப்பகுதியின் இறுதியில் காணப்பட்ட காசு மீதியின் ரூபா 2.1 பில்லியனால் அதிகமானதாகும்.

**அட்டவணை 18**

**அரசாங்க காசுப்பபாய்ச்சல் தொழிற்பாடுகள் மீதான கூற்று - 2009 மற்றும் 2010 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை**

ரூபா. பில்

| விடயம் | உண்மை 2009 ஜன - செப் | 2010 ஜன - செப் | |
|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு | உண்மை காசுப்பாய்ச்சல் |
| வருமானத்திலிருந்து மொத்தக் காசு உட்பாய்ச்சல் | 507.9 | 559.0 | 571.0 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கான மொத்த காசு வெளிப்பாய்ச்சல் | (636.3) | (687.7) | (690.2) |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளுக்கான தேறிய காசுப்பாய்ச்சல் | (128.4) | (128.7) | (119.2) |
| முதலீட்டு செயற்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல் | (184.1) | (176.0) | (178.2) |
| தேறிய காசு மிகை (பற்றாக்குறை) | (312.5) | (304.7) | (297.4) |
| ஆரம்ப காசு மீதி | (69.1) | (75.9) | (75.9) |
| மொத்தப் பெறுகைகள் | 730.8 | 679.7 | 667.9 |
| படுகடன் கொடுப்பனவுகள் | (411.9) | (356.9) | (357.1) |
| தேறிய பெறுகைகள் | 318.9 | 322.8 | 310.8 |
| சரிப்படுத்தல் கணக்கு மீதி (TEB, RFA, Deposits, etc) | 2.7 | 1.5 | 0.4 |
| இறுதி காசு மீதி | (60.0) | (56.3) | (62.1) |

*மூலம்: தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்*

### அரசாங்க படுகடன் முகாமைத்துவம்

அரசாங்க படுகடன் தொழிற்பாடுகள் 2010 ஜனவரி முதல் செப்டெம்பர் வரையான காலப்பகுதிக்கு ரூபா 667.9 பில்லியன் மொத்தப் பெறுகையொன்றினை சுட்டிக் காட்டியுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கிய அரசாங்கப் படுகடன் மீள் கொடுப்பனவுகள் 357.1 பில்லியன் ரூபாவாகும் என்பதுடன், இதன் தேறிய பெறுகை வரையறையானது 310.8 பில்லியன் ரூபாவாகும். 2010 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் மொத்தப் பெறுகைகள் ரூபா 980.0 பில்லியனாகும்.

### திறைசேரி உத்தரவாதங்கள் மீதான நானாவிதப் பொறுப்புக்களை வெளிப்படுத்தல்

2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க அரசிறை முகாமைத்து (பொறுப்புச்) சட்டத்தின் 3 (உ) ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு 2010.9.30 ஆம் திகதி அன்றுள்ளவாறு வெளியிடப்பட்ட மற்றும் தற்பொழுதிருக்கும் வங்கி உத்தரவாதங்களின் பெறுமதி ரூபா 184.2 பில்லியனாகும். இது மொ.உ.உற்பத்தியில் 4.5 சதவீதத்தினை விஞ்சமாட்டாது. 2010.9.30 அன்று வரைக்கும் பொதுத்திறைசேரியினால் வெளியிடப்பட்ட வங்கி உத்தரவாதங்களின் பட்டியல் III ஆக இங்கு தரப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நிதியளிப்பு

## வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள்

2010 ஜனவரி முதல் செப்டெம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு கொடை வழங்கும் முகவர்கள் மற்றும் கடன் வழங்குநர்களினால் வழங்கப்பட்ட மொத்தம் 2,481.9 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இவற்றுள் கருத்திட்டக் கடன்கள் 2,402 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டதுடன், மானியங்கள் 79.9 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது.

**அட்டவணை 19**
**வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள்**
**(2010 ஜனவரி முதல் செப்டெம்பர் இறுதி வரை)**

ஐ.அ.டொ.மில்

| கொடை வழங்குநர் | கடன் | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|
| **இருதரப்பு** | **528.0** | **65.1** | **593.0** |
| ஜப்பான் | 396.6 | 27.7 | 424.3 |
| இந்தியா | 67.4 | | 67.4 |
| அவுஸ்திரேலியா | | 10.5 | 10.5 |
| பிரான்ஸ் | 16.3 | | 16.3 |
| ஜேர்மனி | 1.6 | | 1.6 |
| சவூதி நிதியம் | 46.1 | | 46.1 |
| நெதர்லாந்து | | 0.1 | 0.1 |
| ஐக்கிய அமெரிக்கா | | 26.7 | 26.7 |
| **ஏற்றுமதிக் கடன்** | **1,265.3** | | **1,265.3** |
| அவுஸ்திரேலியா | 105.2 | | 105.2 |
| அவுஸ்திரியா | 45.3 | | 45.3 |
| ஈரான் | 111.2 | | 111.2 |
| ரஷ்யா | 300.0 | | 300.0 |
| எச்எஸ்பிசி வங்கி - ஐ.இ | 35.0 | | 35.0 |
| சீனா | 668.6 | | 668.6 |
| **பல்தரப்பு** | **608.7** | **14.8** | **623.5** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 366.7 | 3.0 | 369.7 |
| உலக வங்கி | 217.8 | | 217.8 |
| விவசாய அபி. சர். நிதியம் | 24.2 | | 24.2 |
| ஐ.நா.முகவராண்மைகள் | | 11.8 | 11.8 |
| **மொத்தம்** | **2,402.0** | **79.9** | **2,481.9** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

2009 இல் பதிவாகியிருந்த முன் எப்பொழுதும் இல்லாத உயர்ந்த வெளிநாட்டு அர்ப்பணிப்புத் தொகையான 2,221.7 மில்லியன் ஐ.அ.டொலர்களை விட அதிகமாக இவ்வருடத்தின் முதல் 09 மாதங்களில் செய்யப்பட்ட புதிய அர்ப்பணிப்புகள் உள்ளடங்கலான வெளிநாட்டு நிதி வழங்கல்களை கொண்ட குறிப்பிடத்தக்க வருடமாக 2010 ஆம் ஆண்டு காணப்படுகின்றது. 2010 இல் அர்ப்பணிப்பு செய்யப்பட்ட புதிய நிதி ஏற்பாடுகளில் 70 சதவீதத்திற்கு அதிகமானது துறைமுக அபிவிருத்தி, பாதைகள் மற்றும் பாலங்கள் அத்துடன் மின்சக்தி வழங்கல் போன்ற உற்பத்தித் திறன் உட்கட்டமைப்புகளின் அபிவிருத்திக்காக வழங்கப்பட்டதாகும். 2010 ஜனவரி முதல் செப்டெம்பர் வரை கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளின் பட்டியல் அட்டவணை 20 இல் காட்டப்பட்டுள்ளது.

### வரைபு 2




### அட்டவணை 20
### 2010 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 30 ஆம் திகதி வரைக்குமான வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள்

| கொடை வழங்குனர் | கருத்திட்டத்தின் பெயர் | கடன்/மானியம் நாணயம் | மானியம் ஐ.அ.டொ | கடன் ஐ.அ.டொ | மொத்தம் ஐ.அ.டொ |
|---|---|---|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி | வாழ்வாதாரம் மற்றும் ஆண் பெண் பால் பாகுபாடு சமத்துவத்திற்கான ஒத்துழைப்பு தொடர்பினை மேம்படுத்துதல் | ஐ.அ.டொ. 3,000,000 | 3,000,000 | | 3,000,000 |
| | அரசிறை முகாமைத்துவ திறன் கருத்திட்டம் | ஐ.அ.டொ. 50,000,000 | | 50,000,000 | 50,000,000 |
| | வட கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டம் - 11 - குறைநிரப்பல் | விசேட பெறுகை உரிமை 8,333,000 | | 12,267,731 | 12,267,731 |
| | யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிராந்திய அவசர கருத்திட்டம் | ஐ.அ.டொ. 150,000,000 | | 150,000,000 | 150,000,000 |
| | கருத்திட்டம் | ஐ.அ.டொ. 130,000,000 | | 130,000,000 | 130,000,000 |
| | | விசேட பெறுகை உரிமை | | 24,408,211 | 24,408,211 |
| | வடக்குப் பாதை இணைப்புக் கருத்திட்டம் | 16,080,000 | | | |
| அவுஸ்திரேலியா | அம்பாறை மாவட்டத்தில் பின்தங்கிய பிரதேசங்களுக்கான ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம் - கட்டம் 111 | ஐ.அ.டொ. 105,190,000 | | 105,10,000 | 105,190,000 |
| | அவசர வடக்கு மீள் கட்டமைப்புக் கருத்திட்டம் | ஐ.அ.டொ. 10,539,070 | | 10,539,070 | 10,539,070 |

**அட்டவணை 20 இன் தொடர்ச்சி……..**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அவுஸ்திரியா | பழைய லக்சபான நீர் மின் உற்பத்தி பொறித்தொகுதி புனரமைப்பு | யூரோ 24,141,348 | | 34,776,820 | 34,776,820 |
| | கிழக்கு புகையிரதப் பாதை புனரமைப்பு | யூரோ 8,500,000 | | 10,540,002 | 10,540,002 |
| சீனா | மாத்தள - ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலைய கருத்திட்டம் | சீன யென் 1,300,000,000 | | 190,785,771 | 190,785,771 |
| | இலங்கை புகையிரதத்திற்கான 13 டீசல் இயந்திரங்களை வழங்கல் கருத்திட்டம் | சீன யென் 700,000,000 | | 102,730,800 | 102,730,800 |
| | எம்ஏ - 60 விமானங்கள் இரண்டினை வழங்குதல் | சீன யென் 280,000,000 | | 41,114,296 | 41,114,296 |
| | வட மாகாண மின் உற்பத்தித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான மூலப் பொருட்கள் கொள்வனவு | ஐ.அ.டொ. 31,659,392 | | 31,659,392 | 31,659,392 |
| | வடக்கு பாதை புனரமைப்புக் கருத்திட்டம் - ஏ9 (கல்குமையிலிருந்து 280 கி.மீ.கல் வரை) | ஐ.அ.டொ. 71,021,514 | | 71,021,514 | 71,021,514 |
| | வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் - ஒப்பந்தம் 11ஏ | ஐ.அ.டொ. 42,777,300 | | 42,777,300 | 42,777,300 |
| | வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் - ஒப்பந்தம் 11பி | ஐ.அ.டொ. 42,509,700 | | 42,509,700 | 42,509,700 |
| | வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் - (ஏபி 20), (ஏபி 32), (ஏபி 16) மற்றும் (ஏபி 18) | ஐ.அ.டொ. 75,420,000 | | 75,420,000 | 75,420,000 |
| | வடக்குப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம் - ஏ9 (230 கி.மீ.கல்லிலிருந்து யாழ்ப்பாணம் வரை) | ஐ.அ.டொ. 70,583,452 | | 70,583,452 | 70,583,452 |
| உணவு மற்றும் விவசாய அமைப்பு | கோமாரி நோயிலிருந்து விடுபட்டதனை உறுதிப்படுத்துவதற்கான கண்காணிப்பு | ஐ.அ.டொ. 184,000 | 184,000 | | 184,000 |
| | பாற்பண்ணை கால்நடை மற்றும் எருது மேம்பாட்டுக் கருத்திட்டம் | ஐ.அ.டொ. 335,000 | 335,000 | | 335,000 |
| | வடக்கில் விதைகள் மற்றும் பிற அத்தியாவசிய விவசாய உள்ளீடுகள் | ஐ.அ.டொ. 876,000 | 876,000 | | 876,000 |
| | மீன்பிடிக்கான பின் அறுவடை மேம்பாடு மற்றும் நிலையான சந்தை அபிவிருத்தி | ஐ.அ.டொ. 85,800 | 85,800 | | 85,800 |
| | உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான அவசர விவசாய மற்றும் உணவுப் பாதுகாப்பு உதவி | ஐ.அ.டொ. 4,283,361 | 4,283,361 | | 4,283,361 |
| | விவசாய தொழில் முயற்சி அபிவிருத்திக் கருத்திட்டம் | ஐ.அ.டொ. 405,000 | 405,000 | | 405,000 |
| | வட இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாடு | ஐ.அ.டொ. 1`,483,435 | 1,483,435 | | 1,483,435 |
| பிரான்ஸ் | பாரிய திருகோணமலை நீர் வழங்கல் கருத்திட்டம் - குறை நிரப்பல் | யூரோ 2,500,000 | | 3,385,375 | 3,385,375 |

**அட்டவணை 20 இன் தொடர்ச்சி……..**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுனாமியினால் பாதிக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய பிரதேச வைத்தியசாலைகளுக்கான சத்திர சிகிச்சைக் கூடங்கள், ஒட்சிசன் கொள்கலன்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்குதல் கருத்திட்டம் | யூரோ 9,529,000 | | 12,901,316 | 12,901,316 |
| ஜேர்மனி | காலி மாவட்டத்தில் நீர் வழங்கல் மீள் கட்டமைப்பு | யூரோ 1,258,204 | | 1,604,273 | 1,604,273 |
| இந்தியா | கொழும்பு மாத்தறை புகையிரதப் பாதை தரமுயர்த்தல் - கட்டம் 11 | ஐ.அ.டொ. 67,400,000 | | 67,400,000 | 67,400,000 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | விசேட பெறுகை உரிமை 15,550,000 | | 24,245,264 | 24,245,264 |
| ஈரான் | கிராமிய மின் வழங்கல் கருத்திட்டத்தினை செயற்படுத்தல் -8 | யூரோ 77,140,574 | | 111,217,410 | 111,217,410 |
| ஜப்பான் | மாகாண/கிராமியப் பாதை அபிவிருத்தி கருத்திட்டம் (மத்திய மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணம்) | ஜப்.யென் ஆயிரம் 9,156,000 | | 99,047,097 | 99,047,097 |
| | மாகாண/கிராமியப் பாதை அபிவிருத்தி கருத்திட்டம் (கிழக்கு மாகாணம்) | ஜப்.யென் ஆயிரம் 3,965,000 | | 42,892,283 | 42,892,283 |
| | கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம் | ஜப்.யென் ஆயிரம் 4,904,000 | | 53,050,127 | 53,050,127 |
| | கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | ஜப்.யென் ஆயிரம் 14,087,000 | | 152,389,303 | 152,389,303 |
| | மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டம் (11) | ஜப்.யென் ஆயிரம் 4,552,000 | | 49,242,288 | 49,242,288 |
| | கிழக்கு மாகாணத்தில் 05 பாலங்களின் மீள் கட்டமைப்பு (முழுமையான வடிவமைப்பு) | ஜப்.யென் ஆயிரம் 29,000 | 319,980 | | 319,980 |
| | யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் மத்திய தொழிற்பாட்டினை மேம்படுத்துவதற்கான கருத்திட்டம் | ஜப்.யென் ஆயிரம் 2,298,000 | 24,859,134 | | 24,859,134 |
| | மனித வள அபிவிருத்தி புலமைப் பரிசில்களுக்கான கருத்திட்டம் | ஜப்.யென் ஆயிரம் 229,000 | 2,539,600 | | 2,539,600 |
| நெதர்லாந்து | இலங்கையின் தேசிய சுவடிக் கூடத்திலுள்ள டச்சு பதிவுகளை புதுப்பித்தல், பாதுகாத்தல் மற்றும் பிரசுரித்தல் | இலங்கை ரூபா 12,990,000 | 114,336 | | 114,336 |

**அட்டவணை 20 இன் தொடர்ச்சி........**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரஷ்யா பெடரேசன் | ரஷ்யா கடன் திட்டம் | ஐ.அ.டொ. 300,000,000 | | 300,000,000 | 300,000,000 |
| சவூதி நிதியம் | களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | ச.அ.றியால் 172,500,000 | | 46,056,262 | 45,996,347 |
| ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | ஐ.நா.அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கண்ணிவெடியகற்றல் கருத்திட்டத்திற்கான பங்களிப்பு | ஐ.அ.டொ. 3,250,000 | 3,250,000 | | 3,250,000 |
| | தெற்கு ஒத்துழைப்பிற்கான திறன் விருத்தி | ஐ.அ.டொ. 360,000 | 360,000 | | 360,000 |
| ஐக்கிய அமெரிக்கா | இலங்கையில் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றத்திற்கான உதவி | ஐ.அ.டொ. 13,689687 | 13,689,687 | | 13,689,687 |
| | சர்வதேச சந்தை நிலைமை மேம்பாட்டில் போட்டித் தன்மையினை அதிகரித்தல் | ஐ.அ.டொ. 300,000 | 300,000 | | 300,000 |
| | சமாதானம், சிறந்த ஆளுகை மற்றும் பிரஜைகள் உரிமை - தர மேம்பாடு | ஐ.அ.டொ. 589,365 | 589,365 | | 589,365 |
| | சமாதான செயன்முறை ஒத்துழைப்பு - தர மேம்பாடு | ஐ.அ.டொ. 12,130,000 | 12,130,000 | | 12,130,000 |
| எச்எஸ்பிசி வங்கி - ஐ.இ. | ஜாயா இறங்குத்துறை - கொள்கலன் இறக்கல் உபகரணங்களின் அவசரக் கொள்வனவு | ஐ.அ.டொ. 35,000,000 | | 35,000,000 | 35,000,000 |
| உலக வங்கி | மாகாணப் பாதைக் கருத்திட்டம் | விசேட பெறுகை உரிமை 66,100,000 | | 103,238,346 | 103,238,346 |
| | யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சமுதாய வாழ்வாதாரத்திற்கான மேலதிக நிதியளிப்பு | விசேட பெறுகை உரிமை 7,600,000 | | 11,870,067 | 11,870,067 |
| | அவசர வடக்கு மீள் கட்டமைப்பு கருத்திட்டம் | விசேட பெறுகை உரிமை 40,900,000 | | 63,879,703 | 63,879,703 |
| | 21 ஆம் நூற்றாண்டுக்கான உயர் கல்வி கருத்திட்டம் | விசேட பெறுகை உரிமை 25,600,000 | | 38,839,873 | 38,839,873 |
| | **மொத்தம்** | | **79,874,555** | **2,402,043,976** | **2,481,918,531** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

## செலவிடப்படாத மீதி

2010 ஆகஸ்ட் 31 ஆம் திகதி அன்றுள்ளவாறு அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதி வழங்கப்பட்டு செலவிடப்படாது இருக்கும் மொத்த மீதி ஏறக்குறைய 7 பில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்தது. இக் காலப்பகுதியில் கருத்திட்ட செயற்படுத்தலானது 2-5 வருட இடைவெளி கொண்டதாக காணப்பட்டதினால் அதன் பயன்பாடும் அவ்வளவிலேயே காணப்பட்டது. கொடை வழங்கப்பட்டு பயன்படுத்தப்படாத மீதி வகுப்பாக்கம் துறை ரீதியாக அட்டவணை 21 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 21**

**2010 ஆகஸ்ட் 31 அன்றுள்ளவாறு அர்ப்பணிக்கப்பட்டு செலவிடப்படாத மீதி**

| துறை | ஐ.அ.டொ. மில் | மொத்தம் % |
|---|---|---|
| பாதைகளும், போக்குவரத்தும் | 1701.7 | 24.4 |
| துறைமுகங்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தி | 662.3 | 9.5 |
| நீர் வழங்கலும் துப்பரவேற்பாடும் | 887.3 | 12.7 |
| சுனாமி புனரமைப்பு | 160.1 | 2.3 |
| பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு | 387.4 | 5.6 |
| சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி | 261.5 | 3.8 |
| மின்வலு சக்தி | 1,156.6 | 16.6 |
| தனியார்துறை அபிவிருத்தி | 75.8 | 1.1 |
| விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம் மற்றும் காணி | 698.5 | 10.0 |
| கிராமிய அபிவிருத்தி | 100.4 | 1.4 |
| சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் | 115 | 1.7 |
| தகவல் தொழினுட்பம், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் | 28.2 | 0.4 |
| வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 41.1 | 0.6 |
| பிற | 692.89 | 9.9 |
| மொத்தம் | **6,968.79** | |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

## வெளிநாட்டு நிதி செலவிடல்கள்

2010 செப்டெம்பர் இறுதி வரைக்கும் மொத்த வெளிநாட்டு நிதிச் செலவிடல்கள் 1,460.3 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது. இவற்றுள் கருத்திட்டக் கடன்கள் 1,387 மில்லியன் ஐ.அ.டொலர்களாக (95 சதவீதம்) காணப்பட்டதுடன், மானியங்கள் 73.3 மில்லியன் ஐ.அ.டொலர் (5 சதவீதம்) ஆகக் காணப்பட்டது.

அட்டவணை 22

வெளிநாட்டு நிதியளிப்பு செலவிடல்

2010 ஜனவரி 01 முதல் 2010 செப்டெம்பர் 30 வரை (ஐ.அ.டொ.மில்லியனில்)

| கொடை வழங்குனர் | கடன் | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|
| **இருதரப்பு** | **386.8** | **30.1** | **416.9** |
| சீனா | 98.7 | | 98.7 |
| டென்மார்க் | 2.5 | | 2.5 |
| பிரான்ஸ் | 25.2 | | 25.2 |
| ஜேர்மனி | 6.6 | 0.5 | 7.1 |
| இந்தியா | 10.9 | | 10.9 |
| ஜப்பான் | 223.5 | 13.6 | 237.1 |
| கொரியா | 14.4 | 1.1 | 15.5 |
| குவைற் | 3.7 | | 3.7 |
| நெதர்லாந்து | | 13.4 | 13.4 |
| பிற இருதரப்பு | 1.3 | 1.5 | 2.8 |
| **பல்தரப்பு** | **286.5** | **43.2** | **329.7** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 169.9 | 17.2 | 187.1 |
| உலக வங்கி | 110.6 | 9.9 | 120.5 |
| விவசாய அபி.சர்.நிதியம் | 5.5 | | 5.5 |
| ஐ.நா.முகவராண்மைகள் | | 9.9 | 9.9 |
| பிற பல்தரப்பு | 0.5 | 6.2 | 6.7 |
| **ஏற்றுமதிக் கடன்கள்** | **713.7** | | **713.7** |
| அவுஸ்திரேலியா | 0.6 | | 0.6 |
| அவுஸ்திரியா | 7.1 | | 7.1 |
| சீனா* | 545.0 | | 545.0 |
| டென்மார்க் | 26.9 | | 26.9 |
| பிரான்ஸ் | 12.9 | | 12.9 |
| எச்எஸ்பிசி வங்கி - ஐ.இ | 35.0 | | 35.0 |
| ஜப்பான் | 5.2 | | 5.2 |
| நெதர்லாந்து | 39.7 | | 39.7 |
| சுவீடன் | 24.4 | | 24.4 |
| ஐக்கிய இராச்சியம் | 16.9 | | 16.9 |
| **மொத்தம்** | **1,387.0** | **73.3** | **1,460.3** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

** இ.மி.சபைக்கு பெற்றுக் கொடுத்த ஐ.அ.டொ.மில்.445.5 உம் உள்ளடங்கலாக.*

சீனா, ஜப்பான் அரசாங்கங்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்ற மூன்றும் 2010 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் 30 ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதியின் போது அதி கூடிய செலவிடல்களை செய்த பிரதான கொடை வழங்குனர்களாகும். இந்த மூன்று கொடை வழங்குனர்களும் 1,073 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அல்லது மொத்த செலவிடலில் 73.5 சதவீதத்தினை பங்களிப்புச் செய்துள்ளன.

வரைபு 3




சீனா அரசாங்கமானது 643.7 மில்லியன் ஐ.அ.டொலர்களை செலவிட்டுள்ளது. பிரதானமாக புத்தளம் அனல்மின் கருத்திட்டம்(544.2 மில்லியன் ஐ.அ.டொலர்), ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் (87.4 மில். ஐ.அ.டொ) மற்றும் இலங்கை புகையிரத சேவைக்கான 13 டீசல் இயந்திரங்கள் (29.9 மில்.ஐ.அ.டொ) என்பனவாகும். குறித்த ஆண்டின் முதல் 9 மாதங்களின் போது ஜப்பானினால் வழங்கப்பட்ட மொத்தச் செலவிடல் 242.3 மில்.ஐ.அ.டொலர்களாகும். இவற்றுள் கடனாகப் பெறப்பட்டது 228.7 மில். ஐ.அ.டொலர்களும் மீதி 13.6 மில்.ஐ.அ.டொலர் மானியமாகவும் பெறப்பட்டது. நீர்த்துறை அபிவிருத்திக் கருத்திட்டம் (40.9 மில்.ஐ.அ.டொலர்), பாரிய கொழும்பு போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் (35.1 மில்.ஐ.அ.டொ), மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டம் (41.2 மில்.ஐ.அ.டொ), கொழும்பு நகர மின்சார பகிர்வு அபிவிருத்திக் கருத்திட்டம் (19.6 மில்.ஐ.அ.டொ) மற்றும் தெற்கு அதிவேகப் பாதை நிர்மாணக் கருத்திட்டம் (24.5 மில்.ஐ.அ.டொ) என்பன 2010 இல் உரப்பட்ட அதி கூடிய செலவினங்களான ஜப்பானிய கருத்திட்டங்களாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி செலவிடலானது 187.1 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இது 169.9 மில்.ஐ.அ.டொலர் கடன்களையும் 17.2 மில்.ஐ.அ.டொலர் மானியங்களையும் உள்ளடக்கி உள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி செலவிடல்களானது பிரதானமாக கொழும்புத் துறைமுக விரிவாக்கல் கருத்திட்டம் (47.9 மில்.ஐ.அ.டொ), தேசியப் பெருந்தெருக்கள் துறைக் கருத்திட்டம் (21மில்.ஐ.அ.டொ), யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு (16.4 மில்.ஐ.அ.டொ), சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு கருத்திட்டம் (22.7 மில்.ஐ.அ.டொ) மற்றும் தெற்கு அதிவேகப் பாதைக் கருத்திட்டம் (15.3 மில்.ஐ.அ.டொ) என்பவற்றையும் உள்ளடக்கி உள்ளது. 10 மில்.ஐ.அ.டொலர்களுக்கு மேற்பட்ட செலவிடல்களைக் கொண்ட கருத்திட்டங்களின் பட்டியல் அட்டவணை 23 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவண 23**

**2010 இல் 10 மில்லியன் ஐ.அ.டொலர்களை விட அதிக செலவிடல்களைக் கொண்ட கருத்திட்டங்கள்**

**(செப்டெம்பர் இறுதி வரை)**

| கருத்திட்டம் | கொடை வழங்குநர்/கடன் வழங்குனர் | தொகை ஐ.அ.டொ.மில் |
|---|---|---|
| கொழும்பு துறைமுக விரிவாக்கல் கருத்திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 47.9 |
| பிணக்கினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்பு | | 16.4 |
| தேசிய பெருந்தெருக்கள் துறை கருத்திட்டம் | | 21.0 |
| தெற்கு அதிவேகப் பாதை நிர்மாணக் கருத்திட்டம் | | 15.3 |
| சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் கட்டமைப்பு கருத்திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கி/ஐரோப்பிய ஆணைக்குழு | 22.7 |
| ஹம்பாந்தோட்டையில் குதப்படுத்தல் வசதி மற்றும் தாங்கிப் பண்ணைக் கருத்திட்டம் | சீனா | 12.1 |
| இலங்கைக்கு 13 புகையிரத டீசல் இயந்திரங்களை வழங்குதல் | | 29.9 |
| ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் | | 87.4 |
| புத்தளம் அனல் மின் உற்பத்திக் கருத்திட்டம்-கட்டம் 1 | | 98.7 |
| புத்தளம் அனல் மின் உற்பத்திக் கருத்திட்டம்-கட்டம் 11 | | 445.5 |
| ஒலுவில் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் | டென்மார்க் | 15.8 |
| விமலசுரேந்திர மற்றும் புதிய லக்சபான மின் உற்பத்தி நிலையங்களின் புனரமைப்பு | பிரான்ஸ் | 14.2 |
| திருகோணமலை ஒருங்கிணைந்த உட்கட்டமைப்பு கருத்திட்டம் | | 25.2 |
| ஜாயா இறங்குதுறைக்கு கொள்கலன் இறக்கல் உபகரணங்களின் அவசரக் கொள்வனவு | எச்எஸ்பிசி வங்கி - ஐ.இ | 35.0 |
| கொழும்பு நகர மின்வழங்கல் அபிவிருத்திக் கருத்திட்டம் | ஜப்பான் | 19.6 |
| பாரிய கொழும்பு போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் | | 35.1 |
| லுணாவ சுற்றாடல் மேம்பாட்டுக் மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டம் | | 12.7 |
| பொருளாதார வறுமைசார் மேம்பாடு மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டம் | | 12.9 |
| தெற்கு அதிவேகப் பாதை அபிவிருத்திக் கருத்திட்டம் | | 24.5 |
| மேல் கொத்மலை நீர்மின் கருத்திட்டம் | | 41.2 |
| நீர்த்துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | | 40.9 |
| திக்ஓவிட்ட மீன்பிடித்துறைமுகத்தின் அபிவிருத்தி | நெதர்லாந்து | 22.3 |
| இரத்மலானை மற்றும் ஜாஎல நீர் சுத்திகரிப்பு வசதிகள் | சுவீடன் | 15.9 |
| பிராந்திய பாலங்கள் கருத்திட்டம் | ஐக்கிய இராச்சியம் | 16.9 |
| மாகாணப் பாதைகள் கருத்திட்டம் | உலக வங்கி | 14.6 |
| அவசர வடக்கு மீள் எழுச்சி கருத்திட்டம் | | 23.4 |
| இரண்டாவது சமுதாய அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார மேம்பாட்டுக் கருத்திட்டம் | | 15.2 |
| **மொத்தம்** | | **1,182.3** |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**வெளிநாட்டு படுகடன் மற்றும் சேவைக் கொடுப்பனவுகள்**

2010 செப்டெம்பர் 30 ஆந் திகதி அன்றுள்ளவாறு அரசாங்கத்தின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பு 14.5 பில்லியன் ஐ.அ.டொலர்களாக (ரூபா 1,631.7 பில்லியன்) காணப்பட்டது. இது 2009 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு படுகடன் இருப்புக்களுடன் ஒப்பிடுகையில் 7.4 சதவீதம் அல்லது 1 பில்லியன் ஐ.அ.டொலர் அதிகரிப்பொன்றாக இருந்தது. எவ்வாறாயினும், இதே காலப்பகுதியின் போது படுகடன் இருப்புக்களின் ரூபா பெறுமதி 5.7 சதவீதத்தினால் அல்லது ரூபா 87.6 பில்லியனால் அதிகரித்துள்ளது. ரூபா நியதிகளில் குறைந்த விகித அதிகரிப்பானது ஏனைய பிரதான நாணயங்களுக்கெதிரான இலங்கையின் ரூபாவின் அதிகரிப்பினால் எற்பட்டதாகும்.

2010 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரைக்குமான மொத்த வெளிநாட்டுப் படுகடன் சேவைக் கொடுப்பனவு 530 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டது. இவற்றுள் 368.6 மில்.ஐ.அ.டொலர் மூலதனக் கொடுப்பனவுகளுக்காகவும் மீதி 161.4 மில். ஐ.அ.டொலர் வட்டிக் கொடுப்பனவுகளுக்குமாக இருந்தது. 2010 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த வெளிநாட்டு படுகடன் சேவைக் கொடுப்பனவு 815.7 மில்.ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டதுடன் அவற்றுள் 2010 செப்டெம்பர் 30 ஆம் திகதியளவில் 65 சதவீதம் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது.

**அட்டவணை 24**

**2010 - 2015 இலிருந்து படுகடன் சேவை எதிர்வு கூறல் (ஐ.அ.டொ.மில்லியனில்)**

| | 2010 | 2011 | 2012* | 2013 | 2014 | 2015* |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | 570.6 | 614.2 | 1,179.6 | 721.4 | 732.8 | 1,284.6 |
| வட்டி | 245.1 | 287.7 | 282.0 | 230.0 | 218.7 | 194.3 |
| மொத்தம் | 815.7 | 901.9 | 1,461.6 | 951.4 | 951.5 | 1,478.9 |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்*

**குறிப்பு:*

1. *2012 மற்றும் 2015 க்கான அதி கூடிய படுகடன் சேவை எதிர்வு கூறல் 2007 மற்றும் 2009 இல் வெளியிடப்பட்ட சர்வதேச முறிகள் ஒவ்வொன்றும் 500 மில்.ஐ.அ.டொலர் முதிர்ச்சியின் காரணத்தினாலாகும்.*
2. *சர்வதேச நாணய நிதிய விசேட உடன்படிக்கையின் கீழ் செலவிடப்பட்ட நிதிகளுடன் தொடர்பான படுகடன் சேவைகள் இத்துடன் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.*

# பொருளாதாரம்

## மேன்நோக்கு

இலங்கையின் பொருளாதாரம், 2010 இன் முதல் அரையாண்டின் போது 7.8 சதவீத சிறந்த வளர்ச்சியொன்றினை பதிவாக்கியிருந்ததுடன், 2009 இல் காணப்பட்ட அழுத்தத்திற்குட்பட்ட வளர்ச்சியிலிருந்து மீட்சி ஒன்றினை பிரதிபலிப்பதுடன், பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் ஏற்பட்ட புதிய சூழ்நிலையில் புதிய வளர்ச்சிப் போக்கும் அவதானிக்கப்பட்டது. பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை, உள்நாட்டுப் பொருளாதார நோக்கு என்பன சர்வதேசப் பொருளாதாரத்தினை படிப்படியாக மீட்சி பெறச் செய்தது. 2010 ஆம் ஆண்டின் முழுக் காலப்பகுதிக்குமான மொ.உ.உற்பத்தி வளர்ச்சி 7.5 சதவீதத்திலிருந்து 8.0 சதவீதமான வீச்சொன்றாகக் காணப்பட்டது. பொருளாதாரத்தின் பெரும்பாலான துறைகளில் எதிர்வு கூறப்பட்ட உயர் வளர்ச்சி விகிதத்துடன் இவ்வளர்ச்சி விரிந்த அடிப்படையினைக் கொண்டிருந்தது.

2009 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 1.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியின் போது உள்நாட்டுப் பொருளாதாரமானது 7.8 சதவீத வளர்ச்சியினைக் காட்டியது. பொருளாதாத்தின் அனைத்து துறைகளும் 2010 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியின் போது உயர் பொருளாதார வளர்ச்சிக்காக உறுதியாக பங்களிப்புச் செய்தன. சர்வதேச மற்றும் உள்நாட்டுக் கேள்வியில் படிப்படியான எழுச்சி காணப்பட்டு கைத்தொழிற்துறை 8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த அதேவேளை, விவசாயத்துறையானது 7.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சேவைத்துறையானது 2009 இன் முதல் அரையாண்டின் போது ஆகக் குறைந்த துறை வளர்ச்சியினை பதிவாக்கியிருந்ததுடன், 2010 இன் முதல் அரையாண்டில் 7.8 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டதன் பிரதான காரணம் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான செயற்பாடுகள் வளர்ச்சியடைந்ததன் பிரதிபலிப்பாகும்.

**வரைபு - 4**




### விவசாயம்

விவசாயம், காடாக்கம் மற்றும் மீன்பிடித்துறையானது 2010 இன் முதல் அரையாண்டின் போது 7.2 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டதுடன், கடந்த ஆண்டின் மீளாய்வு காலப்பகுதியில் இது 4.2 சதவீதத்தினை அடையப் பெற்றிருந்தது. இத்துறையானது மொ.உ.உற்பத்தியில் 12 சதவீதமாக 5.1 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்திருந்தது. பல காரணிகளினால் விவசாயத்துறையானது அதிகரித்த வளர்ச்சியினைக் கொண்டிருந்தது. புதிய பயிர்ச்செய்கைக்கான நிலங்கள் விரிவாக்கப்பட்டமை, சிறந்த உணவுப் பொருள் விலைகள், உர மானியத் திட்டம், வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தத்திற்குப் பின்னரான நிலைமை அதே போன்று அரசாங்கத்தினால் விவசாய அபிவிருத்தி தொடர்பாக பின்பற்றப்பட்ட சாதகமான உபாயங்கள் என்பன இந்த வளர்ச்சிக்கு பிரதானமாக பங்களிப்புச் செய்த காரணிகளாக எடுத்துக் காட்டப்படலாம். காலநிலை நிலைமையும் பெரும்பாலும் சாதகமாக காணப்பட்டதுடன் பெருந்தோட்ட மற்றும் பெருந்தோட்டமல்லாத இரண்டு துறைகளிலும் விவசாயத்தில் அதிக வளர்ச்சிக்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டதும் இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக தேயிலை, இறப்பர், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் நெல் என்பன குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினை பதிவாக்கி உள்ளன. எவ்வாறாயினும், தெங்குத் துறையின் விளைவானது 2010 இன் முதல் அரையாண்டில் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கம் மற்றும் சுழற்சித் தாக்கம் என்பன இதற்குப் பிரதான காரணிகளாகும். வடக்கு கிழக்கில் மீன்பிடி மீது விதிக்கப்பட்டிருந்த வரையறைகள்

நீக்கப்பட்டதனால் அடையப்பட்ட நன்மையின் காரணமாக ஆழ்கடல் மீன்பிடித்துறை சிறந்த செயலாற்றுகையினைக் காட்டியது. அத்துடன் வடக்கு கிழக்கிலுள்ள மீனவர்களுக்கான படகுகள் மற்றும் வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டதும் வாழ்வாதார ஒத்துழைப்புகள் வழங்கப்பட்டதுடன், மீன்பிடித் துறைமுகங்கள் புனரமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டதும் இதற்கு முக்கிய காரணமாகும்.

மொத்த நெல் உற்பத்தியானது, 2009 இல் 3.65 மில்.மெற்றிக் தொன்களை பதிவாக்கியிருந்ததனை ஒப்பிடுகையில் 2010 இல் மதிப்பீடு செய்யப்பட்டதனை விட 15 சதவீதத்தினால் அதாவது 4.18 மில்லியனால் அதிகரித்துள்ளது. இது இலங்கையில் சுதந்திரத்துக்குப் பின்னரான அதி கூடிய நெல் விளைச்சலாகும். இது மதிப்பீடு செய்யப்பட்டதை விட 1.56 மில்லியன் மெற்றிக் தொன் அதிகரிப்பாகும். இது எதிர்வரும் 2010 பெரும்போகத்தில் வடக்கு கிழக்கில் பாரியளவில் விவசாயம் செய்யப்பட்டு, அதிகரிப்பினை ஏற்படுத்தும். இந்த அதிகரிப்பானது ஏறக்குறைய 8 சதவீதத்தினால் பயிர்ச்செய்கை விரிவாக்கம் அதிகரித்ததனாலும் குறித்த காலப்பகுதியில் நிலவிய சாதகமான காலநிலையினால் உற்பத்தித் திறன் அதிகரித்ததும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உர மானியம் தொடர்ந்து வழங்கப்பட்டதுடன், சாதகமான வரிக்கொள்கை பின்பற்றப்பட்டதும் உள்நாட்டு உற்பத்திக்கு உதவியதுடன் அரசாங்கத்தின் நெற் கொள்வனவுத் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதும் உற்பத்தியாளர் விலைகளை ஸ்திரப்படுத்தியது.

வட மாகாணத்தில் புதிதாக செய்கை பண்ணப்பட்ட மொத்தக் காணிகள் 2009/2010 பெரும்போகத்தின் போது 4,424 ஹெக்டேயர்களாக காணப்பட்டதுடன், இதில் யாழ்ப்பாணத்தில் 1406 ஹெக்டேயர்களும், மன்னார் மாவட்டத்தில் 2,741 ஹெக்டேயர்களையும் உள்ளடக்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் 2009/2010 பெரும்போகத்தில் நெல் உற்பத்தியானது ஏறக்குறைய 10 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டதுடன் 150,696 ஹெக்டேயர்கள் வளர்ச்சியினை பதிவாக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கமைவாக, 2009/2010 பெரும்போகத்தில் மாத்திரம் பயிர்ச் செய்கைக்குட்பட்ட மொத்த நிலப்பரப்பு 6.4 சதவீதத்தினால் அதாவது 646,001 ஹெக்டேயர்களினால் அதிகரித்ததுடன், சராசரி விளைச்சலானது 2008/2009 பெரும்போகத்தின் போது பதிவு செய்யப்பட்டிருந்த ஹெக்டேயர் ஒன்றிற்கு 4.421 கிலோ கிராமுடன் ஒப்பிடுகையில் ஹெக்டேயர் ஒன்று 4,583 கிலோ கிராம் அதிகரிப்பாக சராசரி விளைச்சல் காணப்பட்டது.

**வரைபு -5**




தேயிலை பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் காணப்பட்ட சாதகமான காலநிலை, உறுதியான விலைகள், ஊழியர் கலவரங்கள் தொடர்ந்தும் காணப்படாமை, சிறந்த தானிய முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றப்பட்டமை என்பவற்றின் காரணமாக சிறு பற்றுநில சொந்தக்காரர்களினாலும் தேயிலை செய்கை பண்ணப்பட்டமை விரிவாக்கப்பட்டதுடன், உயர் விலைகள் கிடைக்கப் பெற்றமையும் 2010 இன் முதல் அரையாண்டில் தேயிலை உற்பத்தியில் அதிகரிப்பொன்றினை ஏற்படுத்தியது. தேயிலை உற்பத்தியானது 2009 இன் இதே காலப்பகுதியில் காணப்பட்ட 26 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டில் தேயிலை உற்பத்தியானது 167 மில்லியன் கிலோ கிராம்களை பதிவாக்கியது.

தேயிலை சிறு பற்றுநில சொந்தக்காரர்கள் தேயிலை உற்பத்தியின் பிரதான பங்காளர்களாக தொடர்ந்து காணப்பட்டதுடன் 2005 இலிருந்து 2010 வரையும் 6 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்ட சிறு பற்றுநில சொந்தக்காரர்களினால் செய்கை பண்ணப்பட்டவை 2010 இன் முதல் அரையாண்டின் போது மொத்த உற்பத்தியில் 75 சதவீதமாக பங்களிப்புச் செய்யும் அளவிற்கு தேயிலை உற்பத்தியில் சிறு பற்றுநில சொந்தக்காரர்கள் பிரதான பங்காளர்களாக தொடர்ந்தும் இருந்தனர். அத்துடன் 2010இல் மதிப்பீடு செய்யப்பட்ட தேசிய விளைச்சலான ஹெக்டேயர் ஒன்றிற்கு 1,419 கி.கிராமுக்கு எதிராக ஹெக்டேயர் ஒன்றிற்கு ஏறக்குறைய 2,154 கி.கிராம்களாக மதிப்பீடு செய்யப்பட்டதாக விளைச்சல் காணப்பட்டது. அதேவேளை 2010 இன் முதல் அரையாண்டின் தேயிலை உற்பத்தியில் ஏறக்குறைய 58 சதவீதம் குறைந்த வளர்ச்சி தேயிலை உற்பத்தியினால் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், 2010 இன் முதல் அரையாண்டில் 23 சதவீத வளர்ச்சியினை பதிவாக்கி உள்ளது.

தேயிலை ஏற்றுமதிகள் 2010 இன் முதல் அரையாண்டில் 626 மில்லியன் ஐ.அ.டொலராக 20 சதவீதத்தினால் அதிகரித்ததுடன், உயர் விலைகள் மற்றும் உற்பத்தி என்பன நன்மையடையப் பெற்றன. கொழும்பு தேயிலை ஏல விற்பனையில் விலைகளானது 2010 இன் முதல் அரையாண்டில் காணப்பட்ட உயர் விலையில் தொடர்ந்து இருப்பதுடன், 2009 இன் முதல் அரையாண்டில் கி.கிராம் ஒன்று ரூபா 323 உடன் ஒப்பிடுகையில் அதிகரிக்கப்பட்ட சராசரி விலையானது கி.கிராம் ஒன்று ரூபா 374 ஆக அதாவது 15 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்குக் காரணம் மத்திய கிழக்கு மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து கேள்வி அதிகரித்ததுடன், குளிர் கால பருவக் கால தேவையும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியது. தரச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம், தனிப்பட்ட ஒப்பந்தங்களினூடாக தேயிலை விற்பனையினை நிறுத்தி வைத்தல் என்பவற்றினால் ஏல விற்பனைகளின் விலையினை உறுதிப்படுத்தல் மீள் நடுகைக்கான உதவுத் தொகைகள் உயர் உற்பத்தி மற்றும் விலைகளுக்கான தரத்தினைப் பேணுவதற்கான கண்காணிப்பு பொறிமுறை என்பவற்றினூடாக இக் காலப்பகுதியின் போது அரசாங்கம் பல்வேறுபட்ட முன்னெடுப்புகளை அறிமுகப்படுத்தியது.

**வரைபு - 6**




2010 இன் இரண்டாவது காலாண்டில் காணப்பட்ட பாதகமான காலநிலை நிலவியபோதும் 2010 இன் முதல் அரையாண்டில் இறப்பர் உற்பத்தியானது 8 சதவீதத்தினால் அதாவது 75 மில்லியன் கி.கிராமினால் அதிகரித்தது. இதன் மூலம் அதிகரித்த எண்ணெய் விலை காரணமாக இயற்கை இறப்பருக்கான கேள்வி அதிகரித்த அதேவேளை உலகப் பொருளாதார நிலைமை மேம்பாடடைந்ததனால் வாகனக் கைத்தொழில்களுக்கு ஏற்பட்ட அதிக கேள்வி என்பவற்றினால் இந்நிலைமை அடையப் பெற்றது. 2010 இன் முதல் அரையாண்டில் அனைத்து வகையான இறப்பர்களின் விலைகளும் இலங்கையில் எப்பொழுதும் இல்லாதளவு உயர்ந்த விலைகளை பதிவாக்கியது. சில பிரதான உற்பத்தி நாடுகளில் ஏற்பட்ட அதிக மழை வீழ்ச்சி, குளிர் காலத்தினால் ஏற்பட்ட சர்வதேச சந்தையில் இயற்கை இறப்பரின் வழங்கல் பற்றாக்குறை மற்றும் சீனா, மலேசியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து இயற்கை இறப்பருக்கான அதிக கேள்வி இயற்கை இறப்பரின் விலைகளை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. 2010 இன் முதல் அரையாண்டில் ஆர்எஸ்எஸ் இல.1 மற்றும் இல.2 இரண்டினதும் சராசரி விலைகள் முறையே 128 சதவீதம் அதாவது கி.கிராம் ஒன்று ரூபா 381 மற்றும் கி.கிராம் ஒன்று ரூபா 375 ஆக அதிகரித்த அதேவேளை சீரப் இறப்பரின் சராசரி விலை 139 சதவீதத்தினால் அதாவது கி.கிராம் ஒன்று 390 ரூபாவினால் அதிகரித்தது. ஏல விற்பனைகளில் இந்த விலை அதிகரிப்பின் விளைவாக இறப்பர் ஏற்றுமதிகள் 2010 இன் முதல் அரையாண்டில் 83 சதவீதமாக அதாவது 84 மில்.ஐ.அ.டொலராக அதிகரித்தது.

2009 இன் மீளாய்வு காலப் பகுதியில் பதிவாகியிருந்த 1,719 மில்லியன் தேங்காய்களுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் 07 மாதங்களில் தெங்கு உற்பத்தியானது 10 சதவீதத்தினால் அதாவது 1,553 மில்லியனால் வீழ்ச்சியடைந்திருந்தது. 2009 இன் முதல் அரையாண்டில் கம்பஹா, குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் காணப்பட்ட குறைந்த மழை வீழ்ச்சி மற்றும் உயர் வெப்பநிலை என்பவற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்டதினால் தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்ததுடன், வரட்சி காலப்பகுதியில் பசளைப் பிரயோகம் குறைந்தளவு காணப்பட்டதுடன் “வெலிகமை தெங்கு வதங்கல் நோய்” இன் தாக்கத்தினால் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் உற்பத்தி வீழ்ச்சி என்பன இதற்குக் காரணமாகும்.

சோளம், குரக்கன், பச்சைக் கடலை, வெங்காயம், பயறு, உருளைக்கிழங்கு மற்றும் மரவள்ளி போன்ற பெரும்பாலான பிற களப்பயிர்கள் 2009/2010 பெரும்போகத்தில் வளர்ச்சிப் போக்கினை பதிவாக்கியுள்ளதுடன் உள்நாட்டு நுகர்வு அதிகரிப்பு, சாதகமான காலநிலை, உற்பத்தியாளர் அளவையில் அதிகரித்த காசுப்பயிருக்கு விவசாயிகளின் மாற்றம் என்பவற்றினால் இந்நிலை அடையப் பெற்றது. வரிக் கொள்கையின் மூலம் உள்நாட்டு செய்கையாளர்களுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. சோளம் உற்பத்தியானது, முன்னைய வருடத்தின் பெரும்போகத்தில் பதிவாக்கியிருந்த 114,660 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 2009/2010 பெரும்போகத்தின் போது 127,760 மெற்றிக் தொன்களாக அதாவது 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. சிவப்பு வெங்காய உற்பத்தி 2008/2009 பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. சிவப்பு வெங்காய பயிர்ச்செய்கை விரிவாக்கலானது வடக்கு கிழக்கில் உற்பத்தியினை மீண்டும் ஆரம்பித்ததுடன் 2009/2010 பெரும்போகத்தின் போது 350 ஹெக்டேயர்களால் அதிகரித்தது. எவ்வாறாயினும், மிளகாய் உற்பத்தியானது 2009/2010 பெரும்போகத்தின் போது 4.2 சதவீதத்தினால் அதாவது 31,842 மெற்றிக் தொன்களால் வீழ்ச்சியடைந்தது. இதற்குப் பிரதான காரணம் விவசாயிகள் சோளம் மற்றும் சோயா அவரை போன்ற உயர் இலாபம் கொண்ட தானியங்களை நோக்கிச் சென்றதாகும்.

சிறிய ஏற்றுமதிகள் தானியத் துறையானது 2010 இன் முதல் அரையாண்டில் 60 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டதுடன், அதன் பிறகு 2009 இன் மீளாய்வு காலப்பகுதியில் 3.4 சதவீதத்தை கொண்டிருந்ததுடன், அதிகரித்த ஏற்றுமதி விலைகளுடன் சர்வதேசக் கேள்வி அதிகரித்ததிலிருந்து இந்நன்மை ஏற்பட்டது. இது கடந்த 10 வருடங்களில் பதிவாகியுள்ள அதி உயர்ந்த செயலாற்றுகை ஒன்றாகும். மானியங்கள், நிதியுதவி வழங்குதல், விரிவாக்கல் மற்றும் ஆராய்ச்சி போன்ற அரசாங்கத்தின் தலையீடு மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் உயிரியல் விவசாயத்திற்கான உதவிகளும் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு உதவியது.

கால்நடைத் துறையானது 2009 இன் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த 4.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டில் 3.8 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்துள்ளது. உள்ளூர் பால் உற்பத்தி 120 மில்லியன் லீற்றர்களால் அதாவது 7 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த வளர்ச்சி திரவப் பாலுக்கான உற்பத்தியாளர் விலைகளின் அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம் பெயர்ந்த கால்நடைகளை சுற்றி வளைத்து அத்தகைய விலங்குகளை விவசாயிகளுக்கு கையளித்தல், பாற் பொருள் கிராமங்களை விரிவாக்குதல் மற்றும் செயற்கையான சினைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன பாலுற்பத்தியின் அதிகரிப்புக்கு உதவியது. எவ்வாறாயினும், 2010 இன் முதல் அரையாண்டில் முட்டை மற்றும் இறைச்சிக் கோழி உற்பத்தியானது முறையே 479 மில்லியன் மற்றும் 46,190 மெற்றிக் தொன்களாக அதாவது 19 மற்றும் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஏற்றுமதி நாடுகளில் காணப்பட்ட பறவைக் காய்ச்சல் அச்சத்தின் காரணமாக தாய்க்கோழி இருப்புக்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்ததுடன், ஒரு நாள் கோழிக்குஞ்சுகளின் வழங்கல்களும் பாதிக்கப்பட்டதுடன், அவற்றின் அதிகூடிய விலையின் காரணமாக இவ்வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்தது. மேலும், முட்டை விலையேற்றம் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் கோழியின் விலையேற்றம் என்பதற்கு காரணமாகியது. உள்நாட்டு சந்தை விலைகளை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் மற்றும் முட்டைகளின் இறக்குமதித் தீர்வைகளை குறைத்தது. அத்துடன் வெதுப்பக உற்பத்திகள் மற்றும் விசுக்கோத்து தயாரிப்பு கைத்தொழில்களுக்கான இறக்குமதிகளை ஊக்குவிக்கும் கண்ணோட்டத்துடன் தூளாக்கப்பட்ட முட்டைகளின் தீர்வைகள் குறைக்கப்பட்டதுடன், அதன் மூலம் அத்தகைய கைத்தொழில்களுக்கான மூலப்பொருள் முட்டை கேள்வி குறைக்கப்பட்டதன் மூலம் பாவனையாளர்களுக்கான அதிக முட்டை வழங்கலுக்கு உதவியாக இருந்தது.

நாடு முழுவதிலுமான உணவு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தல், உர மானியத் திட்டத்தினை தொடர்ந்து மேற்கொள்ளுதல், அரசாங்க நெற் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்தல், நெல் மற்றும் பாலுக்கான உத்தரவாத விலைகள் என்பன கடந்த வருடங்களில் விவசாயத்துறை அபிவிருத்திக்கு உதவியாக இருந்தது. விவசாயத்துறை அபிவிருத்தியினை நோக்கிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை எடுத்துக் காட்டுதலுடன், நீர்ப்பாசனம் மீதான முதலீடுகளுக்கு வளங்களை ஈடுபடுத்தல் விவசாய இயந்திரங்களுக்கான ஏற்பாடு, உபகரணம் மற்றும் விதைகள், விவசாயக் கடன் வசதிகள் மற்றும் வட்டி உதவுத் தொகைகளுடன் கூடிய விரிவாக்கற் சேவைகள் என்பன இத்துறையினை மேம்படுத்துவதற்கு சாதகமான சூழ்நிலையொன்றினை உருவாக்குவதற்கு காரணமாகியது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களை பாதுகாப்பதற்காக வரிக்கட்டமைப்பொன்றினையும் அரசாங்கம் செயற்படுத்தியது.

## அட்டவணை 25

## மொத்த உள்நாட்டு உற்பத்தி - நிலையான விலைகளில் துறை ரீதியான வகுதி (2002)

ரூபா மில்.

| துறை | | | | முதல் காலாண்டு | |
|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2009 | 2010 * |
| **விவசாயம், காடாக்கமும் மீன்பிடியும்** | **265,870** | **285,897** | **294,921** | **153,717** | **164,732** |
| **விவசாயம், கால்நடையும் காடாக்கமும்** | **241,285** | **258,881** | **266,033** | **139,943** | **149,432** |
| தேயிலை | 26,494 | 27,601 | 25,154 | 11,480 | 14,018 |
| இறப்பர் | 5,205 | 5,743 | 6,198 | 2,139 | 2,297 |
| தெங்கு | 30,403 | 31,975 | 33,646 | 16,830 | 14,981 |
| சிறிய ஏற்றுமதிப் பயிர்கள் | 10,706 | 10,478 | 11,028 | 4,308 | 6,877 |
| நெல் | 35,261 | 43,406 | 41,179 | 27,440 | 30,267 |
| மலைநாட்டு தானியங்கள் | 28,428 | 29,439 | 31,368 | 16,305 | 17,349 |
| பழங்கள் | 1,826 | 1,900 | 1,995 | 1,001 | 1,034 |
| மரக்கறிகள் | 55,249 | 58,197 | 62,436 | 35,377 | 36,361 |
| கால்நடை | 19,415 | 20,495 | 21,761 | 10,020 | 10,405 |
| பிற விவசாயம் | 14,755 | 15,147 | 15,911 | 7,879 | 8,356 |
| விறகும் காடாக்கமும் | 13,544 | 14,499 | 15,357 | 7,164 | 7,488 |
| **மீன்பிடி** | **24,585** | **27,016** | **28,888** | **13,774** | **15,300** |
| **கைத்தொழில்** | **635,199** | **672,791** | **701,129** | **334,425** | **361,097** |
| **சுரங்கமறுத்தலும் அகழ்வும்** | **42,631** | **48,090** | **52,030** | **22,985** | **25,772** |
| **தயாரிப்பு** | **394,233** | **413,681** | **427,334** | **205,460** | **220,402** |
| பதப்படுத்தற் கைத்தொழில் | 14,150 | 14,897 | 14,995 | 7,455 | 8,376 |
| தொழிற்சாலைக் கைத்தொழில் | 355,611 | 373,215 | 385,927 | 184,750 | 198,072 |
| சிறிய கைத்தொழில்கள் | 24,472 | 25,570 | 26,412 | 13,254 | 13,954 |
| **மின்சாரம், வாயு மற்றும் நீர்** | **55,339** | **56,847** | **58,974** | **27,088** | **28,991** |
| மின்சாரம் | 48,303 | 50,184 | 52,017 | 23,877 | 25,589 |
| வாயு | 4,525 | 4,062 | 4,280 | 2,010 | 2,160 |
| நீர் | 2,512 | 2,601 | 2,677 | 1,201 | 1,242 |
| **நிர்மாணம்** | **142,996** | **154,173** | **162,790** | **78,892** | **85,932** |
| **சேவைகள்** | **1,331,587** | **1,406,813** | **1,453,254** | **698,408** | **752,685** |
| **வியாபாரம், ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள்** | **555,345** | **580,653** | **580,053** | **273,359** | **293,816** |
| இறக்குமதி வர்த்தகம் | 203,105 | 212,651 | 198,603 | 84,752 | 92,751 |
| ஏற்றுமதி வர்த்தகம் | 103,926 | 104,861 | 99,450 | 49,344 | 49,660 |
| உள்நாட்டு வர்த்தகம் | 239,115 | 254,400 | 272,099 | 135,895 | 146,638 |
| ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் | 9,199 | 8,741 | 9,901 | 3,368 | 4,767 |
| **போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்** | **286,764** | **310,029** | **330,390** | **157,539** | **175,905** |
| போக்குவரத்து | 241,648 | 256,954 | 272,422 | 131,465 | 145,899 |
| சரக்கு கையாளல் - துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து | 14,773 | 15,951 | 16,494 | 7,095 | 8,353 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 30,343 | 37,124 | 41,475 | 18,979 | 21,653 |
| **நிதியியற் சேவைகள், ஆதன விற்பனை மற்றும் வியாபார சேவைகள்** | **265,720** | **279,185** | **291,870** | **144,479** | **152,517** |
| வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி, ஆதன விற்பனைகள் | 193,375 | 206,048 | 217,819 | 107,520 | 115,230 |
| வாடகை மற்றும் வியாபார சேவைகள் | 72,345 | 73,137 | 74,051 | 36,959 | 37,287 |
| **அரசாங்க மற்றும் பிற சேவைகள்** | **223,759** | **236,947** | **250,942** | **123,032** | **130,448** |
| பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு | 171,259 | 181,051 | 191,778 | 93,427 | 99,067 |
| சமுதாய மற்றும் பிற சேவைகள் | 52,500 | 55,896 | 59,164 | 29,605 | 31,381 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **2,232,656** | **2,365,501** | **2,449,304** | **1,186,550** | **1,278,513** |

*மூலம்: சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களம்*

** மதிப்பீடு*

## கைத்தொழில்

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை சார்ந்த கைத்தொழில்களின் வளர்ச்சி காரணமாக 2009 இன் இதே காலப்பகுதியில் 2.4 சதவீத குறைவளர்ச்சியினை ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டில் கைத்தொழில் துறையானது 8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கனிப்பொருள் மற்றும் சுரங்கமறுத்தல், தயாரிப்பு, மின்சாரம், வாயு மற்றும் நீர் அத்துடன் நிர்மாணம் போன்ற நான்கு உப துறைகளும் 2009 இனை விட உயர்ந்த வளர்ச்சியினைக் காட்டியது.

தயாரிப்பு உப துறையானது மொ.உ.உற்பத்தியில் 17 சதவீத பங்கினை வகித்ததுடன், 2009 இன் முதல் அரையாண்டில் காணப்பட்ட 1.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.3 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்தது. இதற்கு சாதகமான உள்நாட்டு பொருளாதார சூழ்நிலை, அதிகரித்த சுற்றுலாச் செயற்பாடுகள், அனைத்து நாடுகளுடனான தொடர்பு மற்றும் வெளிநாட்டு கேள்வியின் படிப்படியான வளர்ச்சி என்பவற்றின் காரணமாக தொழிற்சாலைக் கைத்தொழில்களில் மேம்பாடு காணப்பட்டது. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் மற்றும் உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் என்பன கைத்தொழில்கள் சார்ந்த உள்நாட்டு சந்தை வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தன.

உணவு மற்றும் குடிபானங்களின் உற்பத்தி விளைவு 2009 இன் குறித்த காலப்பகுதியின் போது காணப்பட்ட 5.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டில் 6.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், விசுக்கோத்துகள், தகரத்திலடைத்த பழங்கள், குடிபானங்கள் மற்றும் பாற் பொருட்கள் உற்பத்தி அதிகரித்தது. சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட அபரிமிதமான வளர்ச்சி, உள்நாட்டு சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட மேம்பாட்டின் காரணமாக உள்நாட்டுக் கேள்வி விரிவாக்கல் செஸ் வரி போன்ற அரசாங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளினால் ஒத்துழைப்பு வழங்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் அறிமுகம் என்பன இத்துறையின் துரித வளர்ச்சிக்கு உதவியாக இருந்தது.

சர்வதேச சவால் நிறைந்த சூழ்நிலை மற்றும் ஜிஎஸ்பி+ திட்டத்தின் தற்காலிக பின்னடைவு காாணப்பட்ட போதிலும் ஆடை மற்றும் புடவைக் கைத்தொழில் கடந்த வருடத்தில் மீளாய்வு காலப்பகுதியின் போது காணப்பட்ட 1.4 சதவீதத்திற்கு மாற்றமாக 2010 இன் முதல் அரையாண்டில் 3.9 சதவீதத்தினை பதிவாக்கியிருந்தது. புடவை மற்றும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி 2010 இன் முதல் அரையாண்டில் 1,500 மில்லியன் ஐ.அ.டொலர்களை அடைந்தது. தர மேம்பாடுகள், சூழல் நட்பு தயாரிப்பு, திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் குறைந்த காபண் புகை மற்றும் நிச் சந்தைகளின் ஊடுருவல் என்பவற்றினூடாக போட்டித் தன்மையினை ஏற்படுத்தக் கூடிய புதிய நிலைமைகளை முகங் கொடுப்பதற்கு நீண்ட கால தயார்படுத்தல்களை இக் கைத்தொழில் வேண்டி நிற்கின்றது.

**வரைபு - 7**




இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகளின் உப வகுதியானது 2009 இன் மீளாய்வுக் காலப்பகுதியில் 0.3 சதவீதத்தினை கொண்டிருந்ததுடன், 2010 இன் முதல் அரையாண்டில் 11.6 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. குறிப்பாக, இதன் மூலம் உலகக் கேள்வி அதிகரித்தது. சர்வதேச சந்தையில் ரயர்கள் மற்றும் கையுறைகள் என்பவற்றிற்கான கேள்வி 2009 இன் பிற்பட்ட காலப்பகுதியில் அதிகரித்ததுடன், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய தொழிற்சாலைக்

கைத்தொழில்கள் வளர்ச்சி பெற்றதுடன் 2010 இன் முதல் அரையாண்டில் இவ்வதிகரிப்பு தொடர்ந்தும் காணப்பட்டது. பிவிசி, வர்ணப் பூச்சுக்கள் மற்றும் பிளாஸ்திரிக் உற்பத்திகள் இப்பொருட்கள் மீதான அண்மைய தீர்வைக் குறைப்பினைத் தொடர்ந்து உள்நாட்டு நிர்மாணக் கைத்தொழிலில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சி காரணமாக உயர் உற்பத்தியினையும் பதிவாக்கியுள்ளது. இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், கனிப்பொருட்கள், இணைக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்ற கைத்தொழில்கள் 2010 இன் இரண்டாவது காலாண்டில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியினைப் பதிவாக்கியது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (எஸ்எம்ஈ) துறையும் 2010 இன் முதல் 06 மாதத்தில் 5.2 சதவீத வளர்ச்சியினை பதிவாக்கி உள்ளது. அனைத்துமாக, உலகப் பொருளாதார வளர்ச்சி அத்துடன் நிர்மாணக் கைத்தொழில் விரிவாக்கம், யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தி மற்றும் குறைந்த வட்டி விகிதங்கள் என்ற அனைத்தும் தயாரிப்புத் துறையில் சாதகமான வளர்ச்சியொன்றினை ஏற்படுத்தின.

மீளாய்வு காலத்தில் மொ.உ.உற்பத்தி வளர்ச்சி குறிப்பிடத்தக்களவு பதிவாகி இருந்ததுடன், மின்சாரம், வாயு மற்றும் நீர் என்பன 2009 இன் இதே காலப்பகுதியில் 1.1 சதவீதத்தினை பதிவாக்கியிருந்ததுடன், 2010 இன் முதல் ஆறு மாதங்களில் 7.8 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. மின் உற்பத்தியின் அடிப்படையில் தனியார் மற்றும் அரசாங்கத் துறையினால் பிறப்பிக்கப்பட்ட மொத்த மின் வலு 2010 இன் ஜனவரி - யூலை காலப்பகுதியில் 6.122 Gwh ஆக அதாவது 8.5 சதவீதத்தினால் அதிகரித்தது. இலங்கை மின்சார சபையினால் பிறப்பிக்கப்பட்ட நீர் மின் உற்பத்தி நீரேந்து பிரதேசங்களில் காணப்பட்ட அதிக மழை வீழ்ச்சியின் காரணமாக 41 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட அனல் மின் உற்பத்தியானது 2010 இன் முதல் 07 மாதங்களில் 28 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. தனியார் துறையினால் பிறப்பிக்கப்பட்ட மொத்த மின்வலு 6.5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

நிர்மாணத் துறை வளர்ச்சியானது 2009 இன் முதல் அரையாண்டின் போது 4.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததிலிருந்து 2010 இன் முதல் அரையாண்டில் 8.9 சதவீதமாக அதிகரித்தது. அதேவேளை 2010 இன் முதல் அரையாண்டின் போது 11.8 சதவீதத்தினால் உள்நாட்டுக் கட்டிடப் பொருட்கள் உற்பத்தி வளர்ச்சியில் நிர்மாண செயற்பாடுகளின் மட்டம் அதிகரித்தது. துறைமுகங்கள் அபிவிருத்தி, மின்சார உற்பத்தி, பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கலும் துப்பரவேற்பாடும் போன்ற பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்களில் அரசாங்கத்தின் அர்ப்பணிப்புடன் அரசாங்கத்துறை நிர்மாண செயற்பாடுகள் 2010 இன் முதல் அரையாண்டிலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை மீளாய்வு காலத்தின் போது நிர்மாண செயற்பாடுகளில் தனியார் துறையின் பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**சேவைகள்**

சேவைகள் துறையானது ஒரு வருடத்திற்கு முன்னர் பதிவாகியிருந்த 1.1 சதவீதத்திலிருந்து 2010 இன் முதல் 06 மாதங்களின் போது 7.8 சதவீத விரைவான வளர்ச்சியொன்றினைப் பதிவாக்கியது. இத்துறையானது 2010 இன் முதல் அரையாண்டின் போது மொ.உ.உற்பத்தியில் 60 சதவீதத்தினை பிரதிநிதிப்படுத்தியதுடன், சேவைத்துறை செயலாற்றுகைக்கான பிரதான பங்களிப்பாளர்களாக ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பாடல், வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி மற்றும் வளர்ந்து வரும் வர்த்தகத்துறை என்பன பங்களிப்புச் செய்தன.

**அட்டவணை 26**

**சேவைத்துறை விரிவாக்கலில் தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்**

| சுட்டி | 2007 | 2008 | 2009 | 2009 ஜன-யூலை | 2010 ஜன-யூலை |
|---|---|---|---|---|---|
| **துறைமுக சேவைகள்** | | | | | |
| வருகை தந்த கப்பல்கள் | 4,710 | 4,814 | 4,456 | 2,635 | 2,351 |
| கையாளப்பட்ட மொத்த சரக்கு (MT ‘000) | 46,344 | 50,582 | 48,777 | 26,887 | 35,210 |
| கை. மொ. கொள்கலன்கள் (TEU ‘000) | 3,381 | 3,687 | 3,464 | 1,929 | 2,375 |
| கப்பற் பொருள் மாற்றல்கள் (TEU ‘000) | 2,578 | 2,785 | 2,633 | 1,478 | 1,774 |
| **தொலைதொடர்பாடல் துறை** | | | | | |
| நிரந்தர தொ.பேசி இணைப்புகள் ('000) | 932 | 934 | 871 (அ) | 325 | 350 |
| கையடக்கத் தொ.பேசி (‘000) | 7,983 | 11,083 | 13,950 | 12,640 | 15,868 |
| கம்பியல்லாத தொ.பேசி (‘000) | 1,810 | 2,513 | 2,560 | 2,378 | 2,616 |
| இணையம் மற்றும் மின்னஞ்சல் (‘000) | 202 | 234 | 240 | 240 | 260 |
| **சுகாதாரத் துறை** | | | | | |
| தனியார் வைத்தியசாலை | 212 | 220 | 220 | 161 | 161 |
| அரசாங்க வைத்தியசாலை | 619 | 619 | 555(ஆ) | 555 | 555 |
| கட்டில்களின் எண். (அரசாங்க) | 62,197 | 65,835 | 68,897 | 68,905 | 68,905 |
| வைத்தியர்களின் எண். (அரசாங்க ) | 11,442 | 13,026 | 13,633 | 13,666 | 14,961 |
| தாதிமார் எண். (அரசாங்க ) | 22,088 | 22,996 | 25,549 | 25,795 | 26,674 |
| **நிதியியற் துறை** | | | | | |
| வங்கிக் கிளைகள், பிற நிலையங்கள் | 4,951 | 5427 | 5,703 | 5,632 | 5,803 |
| விநியோகிக்கப்பட்ட கடன் அட்டைகள் | 889,338 | 917,418 | 840,509 | 867,499 | 829,716 |
| பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் | 32 | 34 | 35 | 35 | 36 |
| பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கம்பனிகள் | 76 | 78 | 74 | 74 | 70 |
| **சுற்றுலாத் துறை** | | | | | |
| வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் | 494,008 | 438,500 | 447,890 | 229,956 | 341,991 |
| சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்) | 385 | 342 | 350 | 179 | 301 |
| அறை ஒதுக்கீடுகள் வீதம் | 46.2 | 43.9 | 48.4 | 40 | 66.3 |
| **போக்குவரத்துத் சேவைகள் (புதிய பதிவு)** | | | | | |
| பஸ்கள் | 2,637 | 1,180 | 739 | 310 | 1,101 |
| கார்கள் | 22,595 | 20,237 | 5,762 | 3,854 | 4,069 |
| லொறிகள் | 18,408 | 14,038 | 8,202 | 3,540 | 7,273 |
| மோட்டார் சைக்கிள்கள் | 182,508 | 155,952 | 135,471 | 72,315 | 113,953 |
| முச்சக்கர வண்டிகள் | 43,076 | 44,804 | 37,164 | 19,144 | 45,044 |
| ட்ரக்டர்கள் | 23,476 | 26,132 | 15,278 | 8,644 | 10,282 |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*
*நிதி திட்டமிடல் அமைச்சு*

(அ) *இந்த வீழ்ச்சியானது சில வாடிக்கையாளர்கள் கையடக்கத் தொலைபேசிப் பாவனைக்கு மாறியதனாலாகும்.*

(ஆ) *அரசாங்க வைத்தியசாலைகள் 2009 இல் மீள வகுப்பாக்கம் செய்யப்பட்டது. இதன் விளைவாக, 64 வைத்தியசாலைகள் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகுகளாக பெயர் மாற்றப்பட்டது.*

ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலை உப துறையானது பயங்கரவாத செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் விளைவாக சுற்றுலாத்துறை வளர்ச்சியடைந்ததுடன், 2009 இன் இதே காலப்பகுதியில் பதிவான 8.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் 06 மாதங்களில் 41.5 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. விமானப் போக்குவரத்து, பிரயாண தொழிற்பாடுகள், சுற்றுலா உட்கட்டமைப்பு அபிவிருத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலா விரிவாக்கல் போன்ற பிரயாணம் தொடர்பான செயற்பாடுகளின் மேம்பாடு இத்துறையில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியொன்றினை பதிவாக்குவதற்கு முடியுமாக இருந்தது. இந்த மேம்பாடானது ஹோட்டல் கட்டணங்களில் அதிகரித்த போக்கினால் ஏற்பட்டதாகும் என்பது தெளிவு. சுற்றுலாத்துறையின் ஆற்றல்களை உணர்ந்து கொள்வதுடன் அதனோடு தொடர்பான களியாட்டக் கைத்தொழில்களின் மூலம் 2010 ஜனவரி - ஆகஸ்ட் காலப்பகுதியின் போது 397,889 சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை

47 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மேற்கு ஐரோப்பா மற்றும் தென்னாசிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை முறையே 45 சதவீதம் மற்றும் 53 சதவீதமாக அதிகரித்திருந்தது. இலங்கை 2016 ஆம் ஆண்டளவில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகளை கவருவதன் மூலம் ஏறக்குறைய 2.8 பில்லியன் ஐ.அ.டொலர்களை சம்பாதிக்க முடியுமென திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நிர்மாணக் கைத்தொழில், உள்நாட்டு விவசாயம், களியாட்டம், உணவு மற்றும் குடிபானக் கைத்தொழில் மற்றும் பாரம்பரிய ஆயுர்வேத சிகிச்சைகள் போன்ற புதிய வழிவகைகளும் திறக்கப்படுகின்றன.

## அட்டவணை 27

## வளர்ந்து வரும் சுற்றுலாத்துறை

| மாதம் | சுற்றுலாப் பயணிகளின் வருகை | | | | சுற்றுலா சம்பாத்தியம் (ஐ.அ.டொ.மில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 | 2007 | 2008 | 2009 | 2010 |
| ஜனவரி | 56,751 | 56,916 | 38,468 | 50,757 | 49.1 | 44.4 | 30.0 | 44.7 |
| பெப்ரவரி | 43,033 | 40,551 | 34,169 | 57,300 | 37.3 | 36.1 | 26.7 | 50.4 |
| மார்ச் | 35,031 | 38,049 | 34,065 | 52,352 | 30.4 | 29.7 | 26.5 | 46.1 |
| ஏப்ரல் | 33,039 | 29,747 | 26,054 | 38,300 | 14.0 | 23.2 | 20.4 | 33.7 |
| மே | 26,307 | 31,140 | 24,739 | 35,213 | 20.5 | 24.3 | 19.3 | 31.0 |
| யூன் | 30,810 | 27,960 | 30,234 | 44,730 | 24.0 | 21.8 | 23.5 | 39.3 |
| யூலை | 44,202 | 32,982 | 42,227 | 63,339 | 34.5 | 25.7 | 33.0 | 55.8 |
| ஆகஸ்ட் | 44,682 | 30,672 | 41,207 | 55,898 | 34.9 | 24.0 | 32.1 | 49.1 |
| செப்டெம்பர் | 37,104 | 29,529 | 37,983 | | 28.9 | 23.0 | 30.2 | |
| ஒக்டோபர் | 39,656 | 35,103 | 37,571 | | 30.05 | 27.4 | 28.7 | |
| நொவம்பர் | 42,548 | 36,901 | 44,311 | | 34.05 | 28.8 | 34.6 | |
| டிசம்பர் | 61,116 | 48,950 | 56,862 | | 47.6 | 38.1 | 79.1 | |
| **மொத்தம்** | **494,008** | **438,500** | **447,890** | **397,889** | **385.3** | **342** | **349.5** | **350.1** |

*மூலம்: இலங்கை சுற்றுலாச் சபை*

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தின் உறுதியான செயலாற்றுகை சர்வதேசப் பொருளாதாரப் பின்னடைவினை இலகுவாக்கியதுடன், நாட்டில் சமாதானமான பாதுகாப்பு நிலைமையினை சாதகமான நிலைமையில் பாதுகாத்ததுடன் மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்துறை 2009 இன் மீளாய்வு காலப்பகுதியில் 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் 2010 இன் முதல் அரையாண்டில் 7.1 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவாக்கியுள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகத் துறையானது 2010 இன் இரண்டாவது காலாண்டில் பின்னடைவை சந்தித்ததுடன் அவை முறையே 5.0 சதவீதம் மற்றும் 13.2 சதவீத வளர்ச்சியினை பதிவாக்கி உள்ளது. ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் 3,624 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதாவது 13.7 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இறக்குமதிச் செலவினமானது 2010 இன் முதல் அரையாண்டில் 6,468 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 42 சதவீதத்தினால் அதிகரித்தது. தேயிலை, இறப்பர் அடிப்படைப் பொருட்கள், இரத்தினக்கல் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மீள் உருவாக்கப்பட்ட ஏற்றுமதி வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணிகளாகும். பெற்றோலியம், உரம், கட்டிடப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் என்பவற்றின் மீதான அதிகரித்த செலவினத்தின் காரணமாக இறக்குமதி செலவினம் அதிகரித்தது. குறிப்பாக மோட்டார் வாகனங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தீர்வைகளும் மற்றும் பிற வரிகளும் நீக்கப்பட்டதனால் இந்நன்மை அடையப் பெற்றது. விவசாயம் மற்றும் கைத்தொழில் உபகரணங்களின் அதிகரித்த வழங்கலுடன் யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில் தொடர்பாடல் மற்றும் அசைவு என்பன அதிகரித்ததுடன் உள்நாட்டு வர்த்தகத்துறை 2009 இன் மீளாய்வு காலத்தின் போது பதிவாக்கியிருந்த 5.8 சதவீதத்திற்கெதிராக 2010 இன் முதல் அரையாண்டில் 7.9 சதவீதத்தினால் வளர்ச்சி அடைந்தது.

தொலைத்தொடர்பாடல் துறையானது பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள், போட்டி விகிதங்கள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் என்பவற்றின் காரணமாக சேவை வழங்குநர்களினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் 2009 இன் இதே காலப்பகுதியில் அடையப் பெற்ற 10.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டில் 14.1 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. கையடக்கத் தொலைபேசி இணைப்புக்கள் 15.8 மில்லியனாக அதாவது 25 சதவீதத்தினால் அதிகரித்த அதேவேளை 2010 இன் முதல் அரையாண்டில் நிலையான தொலைபேசி இணைப்புக்கள் 3.5 மில்லியனால் அதாவது 3.1 சதவீத வளர்ச்சியினைப் பெற்றது. கம்பியல்லாத இணைப்புக்கள் 2009 இன் மீளாய்வுக் காலப்பகுதியில் பதிவாகியிருந்த 2.5 மில்லியனிலிருந்து 2010 இன் முதல் 06 மாதங்களில் 2.6 மில்லியனாக அதாவது 3.8 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டது. இது 2009 இல் மீளாய்வு காலத்தில் பதிவாகியிருந்த 78 இலிருந்து 2010 இன் இரண்டாவது அரைவாசியில் 94 ஆக தொலைபேசி அடர்த்தி (100 பேருக்கான தொலைபேசி) அதிகரிப்பதற்கு வழி அமைத்தது. இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல் பதியுனர்களின் எண்ணிக்கையும் மீளாய்வு காலத்தின் போது 260,000 ஆக 8.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

போக்குவரத்துத் துறையானது 2009 இன் அதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த 5 சதவீதத்திற்கு எதிராக 2010 இன் முதல் 06 மாதங்களில் 12 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு 71 சதவீதத்தினால் 185,595 ஆக அதிகரித்ததுடன், இதற்குக் காரணம் மோட்டார் வாகனங்களின் மீதான இறக்குமதித் தீர்வைகளை ஏறக்குறைய 50 சதவீதத்தினால் குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்த முன்னெடுப்பாகும். பஸ்களின் புதிய பதிவு 255 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் 2010 இன் ஜனவரி - யூலை காலப்பகுதியின் போது 1,101 பஸ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முச்சக்கரவண்டிகளின் புதிய பதிவு பொருட்கள் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் 2010 இன் முதல் 07 மாதங்களின் போது முறையே 135 சதவீதம், 105 சதவீதம் மற்றும் 58 சதவீதமாக அதிகரித்துள்ளன. இலங்கை போக்குவரத்துச் சபையில் தற்பொழுதுள்ள பஸ்களில் 280 இனை புனரமைப்புச் செய்வதன் மூலம் போக்குவரத்துச் சேவையினை தரமுயர்த்துவதற்கான அரசாங்கத்தின் முயற்சி தொடர்ந்து இடம் பெற்றது. புகையிரதப் பாதைகளை புனரமைப்புச் செய்வதற்கும் மீள் கட்டமைப்புச் செய்வதற்குமாக 2010 இல் இலங்கை புகையிரத சேவையும் பல்வேறுபட்ட கருத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. கொழும்பு - மாத்தறை புகையிரதப் பாதை புனரமைப்பு பணிகள் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளை வடக்கு புகையிரத உட்கட்டமைப்பு மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் மதவாச்சியிலிருந்து தலைமன்னாருக்கும் ஓமந்தையிலிருந்து பலாலிக்கும் இந்தியா மற்றும் சீனாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 28

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியின் துறை ரீதியான பகிர்வு (%)

| துறை | 2007 | 2008 | 2009 | 2009 முதல் அரையாண்டு | 2010 முதல் அரையாண்டு* |
|---|---|---|---|---|---|
| **விவசாயம்** | **3.4** | **7.5** | **3.2** | **4.2** | **7.2** |
| தேயிலை | -1.8 | 4.2 | -8.9 | -22.8 | 22.1 |
| நெல் | -6.2 | 23.1 | -5.1 | 12.2 | 10.3 |
| சிறு ஏற்றுமதிகள் | 5.1 | -2.1 | 5.2 | -3.4 | 59.6 |
| கால்நடை | 7.9 | 5.6 | 6.2 | 4.7 | 3.8 |
| உணவு தானியங்கள் | 4.4 | 4.7 | 7.0 | 6.9 | 3.9 |
| மீன்பிடி | 15.6 | 9.9 | 6.9 | 6.8 | 11.1 |
| | | | | | |
| **கைத்தொழில்** | **7.6** | **5.9** | **4.2** | **2.4** | **8.0** |
| விவசாய பதனிடல் | 2.4 | 5.3 | 0.7 | -4.2 | 12.3 |
| தொழிற்சாலை கைத்தொழில் | 6.7 | 5.0 | 3.4 | 2.1 | 7.2 |
| சி.ந.தொழில் முயற்சிகள் | 5.6 | 4.5 | 3.3 | 3.0 | 5.3 |
| மின்சாரம் | 4.6 | 3.9 | 3.7 | 1.1 | 7.0 |
| நிர்மாணம் | 9.0 | 7.8 | 5.6 | 4.2 | 8.9 |
| | | | | | |
| **சேவைகள்** | **7.1** | **5.6** | **3.2** | **1.1** | **7.8** |
| வியாபாரம் | 6.1 | 4.7 | -0.3 | -3.7 | 7.1 |
| ஹோட்டல்கள் | -2.3 | -5.0 | 13.3 | -8.6 | 41.5 |
| கப்பற் சரக்கேற்றல் | 8.8 | 8.0 | 3.4 | -4.4 | 17.7 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு | 21.5 | 22.3 | 11.7 | 10.3 | 14.1 |
| நிதியியற் சேவைகள் | 8.7 | 6.6 | 5.7 | 4.6 | 7.2 |
| அரசாங்க சேவைகள் | 6.0 | 5.7 | 5.9 | 5.2 | 6.0 |
| தனியார் சேவைகள் | 7.8 | 6.5 | 5.8 | 5.2 | 6.0 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **6.8** | **6.0** | **3.5** | **1.9** | **7.8** |

*மூலம்:சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களம்*

** மதிப்பீடு*

உலகப் பொருளாதார மற்றும் அதிகரித்த உள்நாட்டு செயற்பாடுகள், துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் 4.4 சதவீதமாக இருந்ததுடன் 2010 இன் முதல் அரையாண்டில் 17.7 சதவீதமாக விரிவாக்கப்பட்டதன் காரணமாக சர்வதேச வியாபாரத்தில் குறிப்பிடத்தக்களவு செயலாற்றுகை காணப்பட்டது. எவ்வாறாயினும், 2009 இன் முதல் எட்டு மாதத்தில் இலங்கைத் துறைமுகத்திற்கு வருகை தந்த கப்பல்களின் மொத்த எண்ணிக்கை 3,138 உடன் ஒப்பிடுகையில் 2,681 ஆக காணப்பட்டது. 2010 இன் முதல் எட்டு மாதங்களில் கையாளப்பட்ட மொத்த கொள்கலன்களின் எண்ணிக்கை 2.7 மில்லியனால் அதாவது 21.2 சதவீதத்தினால் அதிகரித்தது. கையாளப்பட்ட மொத்த சரக்குப் பொருட்களும் 41 மில்லியன் மெற்றிக் தொன்களாக அதாவது 28 சதவீதத்தினால் அதிகரித்தது.

வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் ஆதன விற்பனைத் துறையானது முழு மொத்தப் பொருளாதார செயற்பாடுகளின் மேம்பாட்டின் காரணமாக 2009 இன் அதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த 4.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் அரையாண்டில் 7.2 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. சந்தை வட்டி விகிதமானது 2009 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை நிலையிலிருந்து விலகியதன் விளைவாக

சந்தை வட்டி விகிதமானது தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. குத்தகை விகிதங்களை படிப்படியாக குறைப்பதன் மூலம் குத்தகை விகிதங்களுக்கு சேர்க்கப்பட்ட முகத்தோற்றமளவிலான ஆபத்து குறைப்புக்கு இந்த நாட்டில் அவதானிக்கப்பட்ட வலுவான பேரண்டப் பொருளாதார நிலைமை உதவியாக இருந்தது. இந்த வகையில் இலங்கை மத்திய வங்கி வீடமைப்புக் கடன்களுக்கான வட்டி விகிதத்தினை வருடமொன்றிற்கு 14 சதவீதத்தினால் குறைப்பதற்கும் கடன் அட்டை முற்பணங்களை 24 சதவீதத்தினால் குறைப்பதற்கும் அனைத்து வங்கிகளையும் இலங்கை மத்திய வங்கி கேட்டுக் கொண்டது. வட்டி விகிதங்கள் குறைக்கப்பட்டதன் காரணமாக வங்கிகளின் வட்டி வருமானம் ஏறக்குறைய 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், வட்டி மீதான செலவினம் அனைத்து நிதியியல் நிறுவனங்களினதும் தேறிய வருமானத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட்டதனால் ஏறக்குறைய 27 சதவீதத்தினால் வட்டி மீதான செலவினங்கள் வீழ்ச்சியடைந்தன. குறித்த காலப்பகுதியில் நிதித்துறையில் மேலதிக விரிவாக்கலுக்கு இது காரணமாக இருந்தது. அரசாங்க மற்றும் தனியார் சேவைகள் இரண்டும் 2010 இன் முதல் அரையாண்டில் 6.0 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது.

## நாணயத்துறை அபிவிருத்திகள்

உலகப் பொருளாதார பிரச்சினைகளின் பின்னணியில் நிலையான நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்காக முக்கியமான மறுசீரமைப்புக்கள் செயற்படுத்தப்பட்டமை 2010 இன் முதமல் அரையாண்டின் போது வங்கித்தொழில் முறைமையின் நிலையான தன்மையினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சிறந்த வங்கித்தொழிற் துறையொன்றுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. வங்கித்தொழில் முறைமையின் செயலாற்றுகையானது சிறந்த ஆதன வளர்ச்சி, கடன் மற்றும் ஆதன தரத்தின் மேம்பாடு, ஒப்புரவின் சிறந்த விளைவுகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவான மூலதன மயமாக்கல் என்பவற்றினை பண்புகளாகக் கொண்டிருந்தது.

**வரைபு - 8**




2009 இலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக்கொள்கை நிலைப்பாடு இலகுவாக்கப்பட்டது பொருளாதார செயற்பாடுகளின் ஒத்துழைப்புடன் 2010 இல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. பணவீக்க முன்னரங்கில் சாதகமான அபிவிருத்தியும் ஒப்பீட்டு ரீதியில் நிலையான பணவீக்க கண்ணோட்டமும் கடந்த காலத்தில் காணப்பட்ட உயர் பணவீக்க விகிதங்களுடன் ஒப்பிடுகையில் பூட்கை வட்டி வீதங்கள் 2010 இன் யூலையில் குறைக்கப்பட்டது. 2009 பெப்ரவரியிலிருந்து 325 அடிப்படையினால் 7.25 சதவீத புள்ளிகளினால் மீள் கொள்வனவு வீதம் குறைக்கப்பட்ட அதேவேளை பின்னோக்கிய மீள் கொள்வனவு வீதம் 300 அடிப்படையினால் 9 சதவீத புள்ளிகளுக்கு குறைக்கப்பட்டிருந்தது. இது சந்தை வட்டி வீதங்களில் செய்யப்பட்ட பின்னோக்கிய மறுசீரமைப்புக்களுடன் இரண்டாம் நிலைச் சந்தையில் அரசாங்க பிணையங்களுக்கான உற்பத்தி வளையிகளின் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காணப்பட்டது.

நியதிச் சட்ட ஒதுக்கு தேவைப்பாடுகள் 7 சதவீதமாக தொடர்ந்து காணப்பட்ட அதேவேளை வட்டி விகிதமானது 2009 மே மாதத்தில் முழுமையாக நீக்கப்பட்டது தனியார் துறை கடன் வளர்ச்சியில் மீட்புக்கான சைகையாக காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடானது பொருளாதார செயற்பாடுகளின் விரிவாக்கலுக்கு தூண்டுதலை அளிக்கும் வகையில் பிற சந்தை வட்டி வீதங்களை குறைப்பதற்கு காரணமாகியது. சராசரி நிறை அழைப்புப் பண வீதமானது கொள்கை வட்டி வீத வழியமைப்பிற்குள் காட்டப்பட்டதுடன், முன்னைய வருடங்களை விட ஒப்பீட்டு ரீதியில் குறைவான வீழ்ச்சியினைக் காட்டியது. முதலீடு மற்றும் கடன் வழங்கல் வீதங்களும் 2010 இல் வீழ்ச்சிப் போக்கினை நிலைப்படுத்திக் கொண்டது. சராசரி நிறை வைப்பு வீதமானது (AWDR) 2010 ஆகஸ்ட் மாதமளவில் ஏறக்குறைய 115 அடிப்படைகளாக

அதாவது 6.86 சதவீத புள்ளிகளால் வீழ்ச்சியடைந்த அதேவேளை சராசரி நிறை நிலையான வைப்பு வீதம் (AWFDR) 174 அடிப்படைகளுக்கு மேல் அதாவது 9.17 சதவீதப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தது. சராசரி நிறை ஆரம்ப கடன் வீதம் தெரிவு செய்யப்பட்ட கடன் வழங்கல் விகிதங்களுக்கான முக்கிய விடயமாக செயற்பட்டதுடன் ஏறக்குறைய 100 அடிப்படைகளில் அதாவது 10.13 சதவீத புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்தது. சந்தை வட்டி வீதத்தில் மேலுமொரு குறைப்பானது தனியார் முதலீடுகள் மற்றும் பொருளாதார செயற்பாடுகளில் நிலையான மேம்பாடொன்றுக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

**வரைபு - 9**




ஒதுக்குப் பணமானது 2010 செப்டெம்பர் இறுதியிலுள்ளவாறு ரூபா 339 பில்லியனால் அதாவது 23.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன் விளைவாக தேறிய வெளிநாட்டு ஆதனங்களின் அதிகரிப்பு மற்றும் தனியார் துறை கடன் வளர்ச்சி, விரிந்த பணம் என்பன 2010 ஆகஸ்ட் இறுதியளவில் ரூபா 1,940 பில்லியனால் அதாவது 14 சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. அதிகரித்த கடன் நிலைமைகள் காரணமாக தனியார் துறைக்கான கடன் தொடர்ந்தும் அதிகரித்தது. வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தனியார் துறைக்கான கடன் 2010 ஆகஸ்ட் இறுதியளவில் ஏறக்குறைய 13சதவீதத்தினால் விரிவாக்கப்பட்டது. உலகப் பொருளாதார பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்ட பொருளாதார செயற்பாடுகளின் மீட்சியின் காரணமாக உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடுகளின் தாக்கம் உள்நாட்டுப் பொருளாதார சூழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தியதுடன் தனியார் துறைக் கடனை விரிவாக்கியது. இதற்கு மேலதிகமாக வர்த்தக செயற்பாடுகள் தொடர்பான மேம்பாட்டுக்கு கொள்கை ஒத்துழைப்பு வழங்கப்பட்டமை தேவையற்ற பணவீக்க அழுத்தத்தினை ஏற்படுத்தாது அடைந்து கொள்ள முடியுமான கடன் கேள்வியில் மேலதிக வளர்ச்சிக்கு காரணமாகியது. மொ.உ.உற்பத்தி கண்ணோட்டத்தினை 7.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாக ஆக்குவதுடன் தனியார் துறைக்கான கடன் மேலதிக விரிவாக்கலொன்று இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**வேலையின்மையின் வீழ்ச்சிப்போக்கு**

வெளிநாட்டுக் கேள்வி குறைவடைந்ததன் காரணமாக 2009 இல் 5.8 சதவீதமாக அதிகரித்திருந்த வேலையின்மை வீதமானது பொருளாதார செயற்பாடுகளின் அபிவிருத்தி காரணமாக 2010 இன் இரண்டாவது காலாண்டில் 5.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதார செயற்பாடுகளில் ஏற்பட்ட விரிவாக்கம் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்தில் அடையப் பெற்ற வளர்ச்சி என்பன வேலையின்மையினை குறைப்பதற்கு பங்களிப்புச் செய்தன.

வேலைவாய்ப்புப் பெற்ற சனத்தொகையானது 2009 இன் இரண்டாவது காலாண்டில் 7.47 மில்லியனிலிருந்து 2010 இன் இரண்டாவது காலாண்டில் 7.61 மில்லியனாக அதிகரித்தது. வேலைவாய்ப்புப் பெற்ற மொத்த சனத்தொகையில் 44.4 சதவீதம் சேவைத்துறையிலும் விவசாயத் துறையில் 32.0 சதவீதத்தினாலும் கைத்தொழிற் துறையில் 23.6 சதவீதமாகவும் 2010 இன் முதல் காலாண்டில் அவதானிக்கப்பட்டது. சர்வதேச பொருளாதார நெருக்கடிகளின் தாக்கத்தினால் 2009 காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு கேள்வியானது சிறிது அதிகரித்ததுடன், 2010 இன் முதல் காலாண்டிலிருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் அதிகரிப்பும் வேலைவாய்ப்பின்மையில் இந்த வீழச்சிக்கு பங்களிப்புச் செலுத்தின.

### அட்டவணை 29
### வேலையின்மையின் வீழ்ச்சிப் போக்கு

| வகுதி | 2008* | 2009* | | | 2010* | |
|---|---|---|---|---|---|---|
| | | கா.1 | கா.2 | வருடாந்த | கா.1 | கா.2 |
| ஊழியப்படை ('000) | 8,082 | 8,160 | 7,961 | 8,074 | 8,130 | 8,051 |
| தொழில் வழங்கப்பட்ட ('000) | 7,648 | 7,710 | 7,465 | 7,602 | 7,726 | 7,613 |
| வேலையின்மை வீதம் (%) | 5.4 | 5.5 | 6.2 | 5.8 | 5.0 | 5.4 |

*மூலம்: சனத்தொகைப் புள்ளி விபரத் திணைக்களம்*

*வடமாகாணம் நீங்கலாக

## பணவீக்கம் ஒற்றை எண்ணில் தொடர்ந்தும் காணப்படுதல்

2008 இல் காணப்பட்ட உயர் பணவீக்க விகிதங்களானது 2009 இன் இறுதியில் 4.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. விசேடமாக விவசாய உற்பத்திகளின் சர்வதேச சந்தைகள் மற்றும் வழங்கல் மேம்பாடுகளில் பிரதான நுகர்வுப் பொருள் விலைகள் குறைவடைந்தமை இதற்குக் காரணமாகும். இந்த வருடத்தில் முதல் 9 மாதங்களின் போது சில அதிகரிப்புகள் காணப்பட்ட போதிலும் ஆண்டுக்காண்டு பணவீக்கமானது 5.8 சதவீதமாகக் இருந்தது. அதேவேளை வரலாற்று ரீதியாக உயர் பணவீக்க வீதத்துடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைந்த முகாமை செய்ய முடியுமானதாக உள்ளது. அதேநேரம், கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டியில் உணவல்லாத மற்றும் சக்தி அல்லாத பொருட்களின் விலை அசைவு நடவடிக்கைகளானது மத்திய பணவீக்கத்தில் ஆண்டுக்காண்டு அடிப்படையில் முன்னைய வருடத்தில் 5.9 சதவீதத்திலிருந்து 2010 ஆகஸ்ட் மாதத்தில் 5.5 சதவீதமாகக் குறைவடைந்தது. அதேநேரம் வருடாந்த சராசரி மத்திய பணவீக்கத்தினை உறுதிப்படுத்துவதுடன் மூன்றாவது மாதத்தில் 6.3 சதவீதமாகும். இது முன்னெச்சரிக்கையான நாணயக் கொள்கை, ஒத்துழைப்பு அரசிறை நடவடிக்கைகள் மற்றும் அதிகரித்த உள்நாட்டு வழங்கல் நிலைமை என்பவற்றிற்கு காரணமாக இருந்ததுடன் சில பணவீக்க நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானதாக இருந்த அதேவேளை மிகவும் குறைந்த வேலையின்மையுடன் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தில் நீக்கப்பட முடியாதிருந்தது.

### அட்டவணை 30
### இலங்கையில் முகப்பு பணவீக்கமும் உள்ளக பணவீக்கமும்

| மாதம் | முகப்பு பணவீக்கம் | | | | உள்ளக பணவீக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | புள்ளிக்கு புள்ளி | | வருடாந்த சராசரி | | புள்ளிக்கு புள்ளி | | வருடாந்த சராசரி | |
| | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 | 2009 | 2010 |
| ஜனவரி | 10.7 | 6.5 | 21.6 | 3.1 | 15.5 | 7.9 | 14.3 | 8.6 |
| பெப்ரவரி | 7.6 | 6.9 | 20.3 | 3.1 | 14.1 | 8.0 | 14.8 | 8.1 |
| மார்ச் | 5.3 | 6.3 | 18.6 | 3.2 | 14.2 | 6.7 | 15.2 | 7.5 |
| ஏப்ரல் | 2.9 | 5.8 | 16.7 | 3.4 | 13.5 | 6.4 | 15.5 | 7.0 |
| மே | 3.3 | 5.3 | 14.7 | 3.6 | 13.5 | 6.5 | 15.8 | 6.4 |
| யூன் | 0.9 | 4.8 | 12.5 | 3.9 | 7.7 | 6.7 | 15.2 | 6.3 |
| யூலை | 1.1 | 4.3 | 10.4 | 4.2 | 6.0 | 5.9 | 14.2 | 6.3 |
| ஆகஸ்ட் | 0.9 | 5.0 | 8.5 | 4.5 | 6.4 | 5.5 | 13.2 | 6.3 |
| செப்டெம்பர் | 0.7 | 5.8 | 6.6 | 5.0 | 5.4 | 5.7 | 12.1 | 6.3 |
| ஒக்டோபர் | 1.4 | | 5.2 | | 5.1 | | 11.0 | |
| நொவம்பர் | 2.8 | | 4.1 | | 5.1 | | 9.9 | |
| டிசம்பர் | 4.8 | | 3.4 | | 5.9 | | 9.2 | |

*மூலம்: சனத்தொகை புள்ளி விபரத் திணைக்களம்*

வரைபு - 10




**தலைக்குரிய வருமானத்தில் வளர்ச்சி**

கடந்த 5 வருடங்களின் போது மொ.உ.உற்பத்தியின் வருடாந்த வளர்ச்சி வீதம் 6.04 சதவீதத்திலிருந்து 2009 இல் 2,053 ஐ.அ.டொலர்களை அடைந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட உயர் வளர்ச்சி வீதம் குறைந்த பணவீக்கம் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான நாணய மாற்று விகிதம் என்பன 2010 இல் ஏறக்குறைய 2,450 ஐ.அ.டொலர்களை அடைந்தது.

## வெளிநாட்டுத் துறை

2009 இன் இரண்டாவது அரையாண்டிலிருந்து அவதானிக்கப்பட்ட சாதகமான வெளிநாட்டுத்துறை அபிவிருத்தி 2010இலும் தொடர்ந்ததுடன் யுத்தத்தின் முடிவுடன் முதலீட்டாளர் நம்பிக்கையினால் அதிகரித்த அதேவேளை அண்மைக் கால சர்வதேசப் பொருளாதார சிக்கல்கள் பாதிக்கப்பட்டது நிறுத்தப்பட்டமை, நிதிச் சந்தை நிலைமைகளின் மேம்பாடு மற்றும் உறுதியான பேரண்டப் பொருளாதார சூழ்நிலை என்பன வெளிநாட்டு வர்த்தகத்தை விருத்தியடையச் செய்தது. ஏற்றுமதிகளிலிருந்து வருமானம் மற்றும் இறக்குமதிகள் மீதான செலவினம் என்ற இரண்டும் 2010 இன் முதல் 8 மாதங்களின் போது குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தது. இடைநிலை மற்றும் மூலதனப் பொருட்களினால் உந்தப்பட்ட இறக்குமதிகள் வர்த்தகப் பற்றாக்குறையின் ஏற்றுமதி விரிவாக்கலிலிருந்து வருமானத்தை அதிகரிக்கச் செய்தது. துறைமுகம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான செயற்பாடுகளில் ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட்டதுடன் சேவைக் கணக்குகளில் மிகை அதிகரிக்கப்பட்ட அதேவேளை துறைமுகம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான செயற்பாடுகளின் மேம்பாடு பகுதியளவில் வர்த்தகப் பற்றாக்குறையினை நீக்கியது. இந்த உந்துதலானது 2010 யூன் இறுதியளவில் 1,142 மில்லியன் ஐ.அ.டொலர் பற்றாக்குறையினை நடைமுறைக் கணக்கில் ஏற்படுத்தியது.

**வரைபு - 11**




பிரதான உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு வெளிநாட்டு கடன்களில் துரித செலவிடல் காரணமாக வெளிநாட்டு நிதி உட்பாய்ச்சல் அதிகரிக்கப்பட்டது. அத்துடன் புதிதாக கிடைக்கப் பெற்ற நம்பிக்கைப் பின்னணியில் உறுதியான செலாவணி வீதம் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் குறைவான சர்வதேச வட்டி வீதங்கள் என்பன தொடர்ந்தும் அரசாங்கத்தின் பிணையங்களுக்கு வெளிநாட்டு உட்பாய்ச்சலைக் கொண்டு வந்தன. சாதகமான முதலீட்டாளர் நம்பிக்கையானது 2010 யூன் மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் - எஸ்பிஏ என்ற இரண்டினது அங்கீகாரத்துடன் மேலும் அதிகரித்தது. அதேநேரம் நான்காவது அமைப்பொன்றும் 2010 செப்டெம்பரில் செலவிடல்களை மேற்கொண்டது. அரசாங்கம் சர்வதேச மூலதனச் சந்தையில் பத்து வருட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட கடன் முறிகளினூடாக 1,000 மில்லியன் ஐ.அ.டொலர்களை வெற்றிகரமாக பெற்றுக் கொண்டது.இப்பின்னணியில் வர்த்தக மற்றும் நடைமுறை கணக்கு பற்றாக்குறைகளின் விரிவாக்கலுக்கு மாற்றமாக உயர்ந்த திரவத்தன்மை மிக்க நாணய மாற்று விகிதங்கள் பிரதான நாணயங்களுக்கு மத்தியில் காணப்பட்டதுடன் ஐ.அ.டொலர்களுக்கெதிரான உறுதியான பரிவர்த்தனை ஒன்றாக பேணுமளவிற்கு இந்த உட்பாய்ச்சலுக்கு உதவி புரிந்துள்ளது. விரிந்த நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையானது நடைமுறை உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும் பாரிய மூலதன பொருட்களின் இறக்குமதிகளையும் அதிகரித்த எண்ணெய் விலைகளுக்கும் பகுதியளவில் காரணமாக இருந்தன. அதிகரித்த ரூபா வளர்ச்சியினை நீக்குவதற்கும் அதன் மூலம் வெளிநாட்டுப் போட்டித் தன்மையின் குறிப்பிடத்தக்களவு இழப்பினால் இலங்கை மத்திய வங்கி 2010 இன் முதல் 9 மாதங்களின் போது தேறிய கொள்வனவாளர் என்ற வகையில் உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையிலிருந்து வெளிநாட்டு செலாவணியினை கொள்வனவு செய்தது. இந்த அபிவிருத்திகளின் காரணமாக கொடுப்பனவுகளின் மீதி 2010 இன் முதல் 8 மாதங்களின் போது 432 மில்லியன் மிகையொன்றினை பதிவாக்கியிருந்த அதேவேளை மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2009 இன் இறுதியில் 5.357 மில்லியன்

ஐ.அ.டொலர்களிலிருந்து 2010 செப்டெம்பர் இறுதியளவில் 6,414 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதிகரித்தது. இது 5.8 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்குச் சமமானவையாகும். யூலை இறுதியில் மொத்த ஒதுக்குகள் 7,149 மில்லியன் ஐ.அ.டொலர்களை அடைந்தது.

**வரைபு - 12**




### ஏற்றுமதிகள்

ஏற்றுமதிகள் 2009 இன் அதே காலப்பகுதியின் காணப்பட்ட 4,551 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் 8 மாதங்களின் போது 5,040 மில்லியன் ஐ.அ.டொலர்களாக வளர்ச்சியடைந்ததுடன் 11 சதவீத அதிகரிப்பொன்றினை பதிவாக்கியது.

விவசாய ஏற்றுமதிகள் 2009 இன் மீளாய்வு காலப்பகுதியில் 1,051 மில்லியன் ஐ.அ.டொலர்களுடன் ஒப்பிடுகையில் 1,267 மில்லியன் ஐ.அ.டொலர்களாக 2010 இன் முதல் 8 மாதங்களின் போது அதிகரித்ததுடன் இது 21 சதவீத வளர்ச்சியொன்றாகும். 2010 இல் விவசாய ஏற்றுமதிகளின் வளர்ச்சி தேயிலைத் துறையில் உறுதியான செயலாற்றுகையினை பிரதிபலித்ததுடன் ஏலக்காய் மற்றும் கறுவா போன்ற சிறிய ஏற்றுமதிப் பயிர்களின் விலைகள் அதிகரித்தமையும் பிரதான காரணிகளாக இருக்கும் அதேவேளை எள்ளு விதைகள், கொக்கோ, கராம்பு மற்றும் மிளகு என்பவற்றின் ஏற்றுமதி அளவு அதிகரிக்கப்பட்டதும் இதற்குக் காரணமாகும். இறப்பர் ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட பிரதான வீழ்ச்சி இறப்பர் அடிப்படை உற்பத்திகளின் அதிகரிப்பினால் ஏற்பட்ட விளைவு காரணமாக இறப்பர் அடிப்படைகளின் உள்நாட்டு தயாரிப்பு பொருட்களின் உயர் கேள்வி ஏற்பட்ட அதேவேளை இறப்பர் ஏற்றுமதிகளின் வீழ்ச்சி பிரதானமாக வழங்கலில் குறைவினை ஏற்படுத்தியது.

**வரைபு - 13**



கைத்தொழில் ஏற்றுமதகளிலிருந்து வருமானம் 2010 இன் முதல் 8 மாதங்களின் போது 3,713 மில்லியன் ஐ.அ.டொலர்களால் அதாவது 8 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு பங்களிப்புச் செய்த பிரதான காரணிகள் பெற்றோலியப் பொருட்கள், இறப்பர் பொருட்கள் மற்றும் இயந்திரமும் உபகரணங்களும் ஆகும். 2010 ஆம் ஆண்டின் போது மீளாக்கம் செய்யப்பட்ட திருத்தப்பட்ட ரயர்கள் இறப்பர் உற்பத்திகளுக்கு காரணமாக இருந்ததுடன் குறிப்பிடத்தக்களவு ஏற்றுமதி சம்பாத்தியங்கள் பதிவாகிய அதேவேளை காவலிடப்பட்ட கம்பிகள், சுட்டிகள் மற்றும் நிலை மாற்றிகள் போன்ற மின்சார உபகரணங்கள் அதிகரிப்பினை பதிவாக்கியது. உணவு குடிபானங்கள் என்பவற்றிற்கிடையில் ஏற்றுமதி கொக்கோ தயாரிப்புக்கள், பழங்கள் மற்றும் காய்கறிச் சாறுகள் இக்காலப்பகுதியின் போது சிறந்த செயலாற்றுகையினைக் கொண்டிருந்தன.

புடவை மற்றும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதி வருமானம் குறைந்த உலக பொருளாதார கேள்வியின் காரணமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை படிப்படியான வளர்ச்சியினையும் ஏற்படுத்தியது. 2010 இன் முதல் 8 மாதங்களின் போது ஆடை மற்றும் புடவை ஏற்றுமதிகளின் வருமானம் 2,076 மில்லியன் ஐ.அ.டொலர்களாகக் காணப்பட்டதுடன் 2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 4 சதவீத வீழ்ச்சியினையும் பதிவாக்கியிருந்ததற்குப் பிரதான காரணம் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் சந்தைகளிலிருந்து குறைந்த கேள்வியாக முறையே 4 மற்றும் 7 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததைக் குறிப்பிடலாம். அத்துடன் இலங்கை ஜிஎஸ்பி+ திட்டத்தின் கீழ் பெற்று வந்த முன்னுரிமை தீர்வை நன்மைகளினை ஐரோப்பிய யூனியன் தற்காலிகமாக விலக்கிக் கொண்ட போதிலும் வித்தியாசப்படுத்தல் மற்றும் உற்பத்திகளை பல்வகைப்படுத்தல், தர மேம்பாடு, உற்பத்திகளை தரப்படுத்தல், உள்ளீட்டுச் செலவினங்களைக் குறைத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல் நடவடிக்கைகளினூடாக புதிய நிலைமைகளை எதிர் நோக்குவதற்கு நீண்ட காலத் தயாரிப்புக்கள் மீது ஏற்றுமதியாளர்கள் ஒருமுகப்படுத்தப்பட்டமையும் ஜிஎஸ்பி+ சலுகைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட தாக்கத்தினை படிப்படியாக இல்லாதாக்குவதற்கும் முடியும்.

## இறக்குமதிகள்

இறக்குமதிகள் மீதான செலவினம் 2010 இன் முதல் 8 மாதங்களில் 8,670 மில்லியன் ஐ.அ.டொலர்களாக இருந்த அதேவேளை இது 2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 37 சதவீத அதிகரிப்பொன்றாகும். இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அதிகரிப்பு 2010 ஆகஸ்ட் அன்றுள்ளவாறு 40 சதவீத அதிகரிப்பொன்றினை ஏற்படுத்திய அதேவேளை நுகர்வுப் பொருட்கள் இதே காலப்பகுதியில் 45 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் துரித அதிகரிப்பொன்று 2010 இன் முதல் 8 மாதங்களின் போது பெற்றோலிய விலைகளின் மீதான உயர் செலவினத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது. மசகு எண்ணெயின் இறக்குமதி விலை 2009 இன் மீளாய்வுக் காலத்தின் போது பீப்பாய் ஒன்று 72.79 ஐ.அ.டொலர்களாக காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் 8 மாதங்களின் போது பீப்பாய் ஒன்று 77.87 ஐ.அ.டொலர்களாக அதாவது 7 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கான காரணம் 2010 இன் ஆகஸ்ட் இறுதியளவில் மசகெண்ணெய் மீதான இறக்குமதிச் செலவினம் 2,009 மில்லியனால் அதிகரித்ததாகும்.

**வரைபு - 14**



நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள் 2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2010 இன் முதல் 8 மாதங்களின் போது 45 சதவீத அதிகரிப்பினை அதாவது 1,832 மில்லியன் ஐ.அ.டொலர்களை பதிவாக்கியது. 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகளவு இறக்குமதிகள் சீனி மற்றும் பால் தொடர்பில் இடம் பெற்றதனால் அவற்றின் மீதான செலவினமும் இறக்குமதிச் செலவிற்குள் உட்படுத்தப்பட்டது. உணவல்லாத நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு 2010 யூன் மாதத்திலிருந்து மோட்டார் வாகன இறக்குமதிகள் மற்றும் மின்சார உபகரணங்கள் மீது அறிமுகப்படுத்தப்பட்ட தீர்வைக் குறைப்புக்கள் காரணமாக ஏற்பட்டதாகும். அதேநேரம் தற்பொழுது இடம் பெற்று வரும் பாரிய உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள் மற்றும் நிர்மாணக் கைத் தொழில் வளர்ச்சி காரணமாக 2009 இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2010 ஆகஸ்ட் மாதத்தில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 1,878 மில்லியன் ஐ.அ.டொலர்களால் அதாவது 21 சதவீதத்தினால் அதிகரித்தது.

**அட்டவணை 31**

**வெளிநாட்டு வர்த்தகம்**

| | | | | | ஐ.அ.டொ.மில் |
|---|---|---|---|---|---|
| **சுட்டி** | **2007** | **2008** | **2009** | **2009 ஜனவரி - ஆகஸ்ட்** | **2010 ஜனவரி - ஆகஸ்ட்** |
| **ஏற்றுமதிகள்** | **7,640** | **8,111** | **7,085** | **4,551** | **5,040** |
| **விவசாய ஏற்றுமதிகள்** | **1,507** | **1,855** | **1,690** | **1,051** | **1,267** |
| தேயிலை | 1,025 | 1,272 | 1,185 | 738 | 870 |
| பிற விவசாய உற்பத்திகள் | 482 | 583 | 505 | 313 | 397 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **5,967** | **6,158** | **5,305** | **3,442** | **3,713** |
| புடவை மற்றும் தைத்த ஆடைகள் | 3,340 | 3,469 | 3,274 | 2,162 | 2,076 |
| இறப்பர் உற்பத்திகள் | 483 | 542 | 385 | 225 | 332 |
| இயந்திரம் மற்றும் உபகரணம் | 542 | 461 | 330 | 201 | 310 |
| மாணிக்கக்கல் மற்றும் ஆபரணம் | 367 | 435 | 330 | 196 | 217 |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 514 | 458 | 406 | 286 | 325 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 169 | 255 | 135 | 80 | 128 |
| பிற கைத்தொழில் உற்பத்திகள் | 554 | 539 | 446 | 292 | 325 |
| **இரத்தினக்கல் மற்றும் கனிய உற்பத்திகள்** | **128** | **98** | **89** | **58** | **60** |
| **வகுப்பாக்கப்படாதவை** | **38** | **0** | **0** | **0** | **0** |
| **இறக்குமதிகள்** | **11,297** | **14,091** | **10,207** | **6,333** | **8,670** |
| **நுகர்வுப் பொருட்கள்** | **1,768** | **2,184** | **1,713** | **1,263** | **1,832** |
| உணவும் குடிபானமும் | 831 | 1,138 | 987 | 802 | 1,144 |
| பிற | 937 | 1,047 | 726 | 461 | 688 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **6,751** | **8,720** | **5,928** | **3,440** | **4,812** |
| பெற்றோலியம் | 2,501 | 3,368 | 2,167 | 1,285 | 2,008 |
| உரம் மற்றும் இரசாயனம் | 474 | 938 | 506 | 279 | 417 |
| புடவை மற்றும் ஆடைகள் | 1,632 | 1,702 | 1,442 | 916 | 1,055 |
| கோதுமைத் தானியம் | 234 | 375 | 259 | 164 | 189 |
| பிற | 1,910 | 2,337 | 1,555 | 796 | 1,143 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **2,685** | **3,048** | **2,451** | **1,551** | **1,878** |
| இயந்திரங்களும் உபகரணங்களும் | 1,247 | 1,331 | 1,013 | 681 | 731 |
| போக்குவரத்து உபகரணம் | 365 | 439 | 436 | 203 | 427 |
| கட்டிடப் பொருட்கள் | 780 | 943 | 715 | 475 | 527 |
| பிற | 294 | 336 | 287 | 192 | 193 |
| **வகுப்பாக்கப்படாதவை** | **92** | **139** | **115** | **79** | **148** |
| **வர்த்தகப் பற்றாக்குறை** | **-3,627** | **-5,981** | **-3,122** | **-496** | **-1,621** |

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

2010 இன் முதல் அரையாண்டில் 128 சதவீதத்தினால் சேவைகள் கணக்கில் மிகை அதிகரித்ததுடன் 2009 இல் இதே காலப்பகுயுடன் ஒப்பிடுகையில் பாரிய வீழ்ச்சியாகும். அத்துடன் கப்பற் சரக்கேற்றல் மற்றும் துறைமுகம் தொடர்பான சேவைகள் பயணிகள் கட்டணம், நுண்பொருள் மற்றும் தகவல் தொழினுட்ப ஏற்றுமதி என்பன சேவைகள் மற்றும் சுற்றுலா செயற்பாடுகளை ஊக்குவித்தது. எவ்வாறாயினும், வருமானக் கணக்கில் பற்றாக்குறையானது 2009 இன் அதே காலப்பகுதியில் காணப்பட்ட 173 மில்லியன் ஐ.அ.டொலரிலிருந்து 2010 இன் முதல் 6 மாதங்களின் போது 236 மில்லியன் ஐ.அ.டொலர்களாக விரிவாக்கப்பட்டதன் விளைவாக சர்வதேச வட்டி விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக வெளிநாட்டு சொத்துக்களில் வட்டி வருமானம் வீழ்ச்சியடைந்தது.

**ஊழியர் அனுப்புகைகள்**

2010 இன் முதல் 6 மாதங்களில் 1,820 மில்லியன் ஐ.அ.டொலர்களாக அதாவது 14 சதவீதத்தினால் அதிகரித்த அனுப்புகைகளின் சர்வதேச உட்பாய்ச்சலிற்கமைய வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் இலங்கைக்கான வெளிநாட்டு நிதியளிப்பு மூலமானது உறுதியாக இருந்ததுடன் ஊழியர் அனுப்புகை முக்கிய ஒரு விடயமாக இருந்தது. பிரதான ஊழியர் அனுப்புகைகளை பெற்றுத் தரும் நாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட நாணய உறுதிப்பாடானது ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக 2010 இல் அதிக உட்பாய்ச்சலினை பெற்றதன் மூலம் இலங்கையில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. அத்துடன் வடக்கு கிழக்கில் திறக்கப்படும் புதிய வங்கிகள், ஊழியர் அனுப்புகைகளின் அதி கூடிய உட்பாய்ச்சல் என்பன முறையான வழிகளினூடாக பெறப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு சூழலும் அது பற்றிய கண்ணோட்டமும்

உலகப் பொருளாதாரமானது பல்வேறு மாற்றங்களுடன் மீட்சிப் பாதையில் தொடர்ந்திருப்பதுடன் அதன் பின்னடைவுப் பாதிப்புகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அதிவிசேட நாணய மற்றும் அரசிறை ஊக்குவிப்புப் பொதிகளினூடாக வசதியளிக்கப்பட்ட மீள் கட்டமைப்பு செயன் முறைகளின் நம்பிக்கை அவற்றினது சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன் பாரிய அழுத்தத்திலிருந்து விடுவிக்கவும் செய்யும் முன்னேற்றமடைந்த பல நாடுகளில் நுகர்வோர் கேள்வி வளர்ச்சியானது பாரியளவு வீட்டு வருமானங்கள் மற்றும் வசதிகள் இக் காலப்பகுதியின் போது வீழ்ச்சியடைந்ததன் காரணமாக தொடர்ந்தும் மந்த நிலையில் காணப்படுகிறது. ஒப்பீட்டு ரீதியில் பல நாடுகளில் குறைந்தளவு பணவீக்கம் காணப்பட்ட பொழுதிலும் சில நாடுகள் வளர்ந்து வரும் பணவீக்க அழுத்தங்களை நிறுத்துவதற்காக சரியான நாணயக் கொள்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளன. முன்னேற்றமடைந்த நாடுகள் வேலைவாய்ப்பின்மை காரணமாக பாரிய பேரண்டப் பொருளாதார சவால்களை எதிர் நோக்குவதுடன் பாரியளவான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, வளர்ச்சியடைந்த படுகடன் மற்றும் வெளிநாட்டு சமமின்மைகளை ஆபத்தான நாணய மாற்று விகிதத்தில் வைத்துள்ளன. நிதித்துறையினை உறுதிப்படுத்துவதற்கான தேவை ஏற்றுக் கொள்ளப்பட்ட அதேவேளை பிரதான சவால்களை மையப்படுத்தியதான சர்வதேசக் கவனமும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கை ஒருங்கிணைப்பு பிரதான பொருளாதாரங்களில் காணப்படும் பிரச்சினையாகும்.

தற்போது இடம் பெற்று வரும் உலகப் பொருளாதார மறுசீரமைப்புகள் இலங்கையின் பொருளாதார கண்ணோட்டத்தில் நேரடியானதும் மறைமுகமானதுமான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் நிதிச் சந்தை ஸ்திரத்தன்மையுடன் உலகப் பொருளாதார அறவீட்டினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு ஒத்துழைக்கும் சர்வதேச செயற்பாடு என்பன நாட்டின் வளர்ச்சி கண்ணோட்டத்தில் சாதகமான தாக்கமொன்றினை ஏற்படுத்த முடியும். அதேவேளை வெளிநாட்டு அபிவிருத்தியில் மிகவும் ஊக்கம் குன்றிய விடயங்களும் பாரியளவில் இடம் பெற்றுள்ளதுடன் குறிப்பாக ஜப்பானிய யென் இலங்கையிலிருந்து வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்குக் காரணமாக அமைந்தது.

2009 இல் உலகப் பொருளாதாரமானது 0.6 சதவீதத்தினை பதிவாக்கியிருந்ததுடன் முன்னேற்றமடைந்த நாடுகளில் காணப்பட்ட 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீத வளர்ச்சியினைக் கொண்ட அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. 2009 இல் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பன அவற்றினது மொ.உ.உற்பத்தியில் 2.6 சதவீதம், 4.1 சதவீதம், 5.2 சதவீதம் மற்றும் 4.9 சதவீதம் ஆக காணப்பட்டது. புதிதாக வளர்ந்து வரும் அத்துடன் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களானது வளர்ச்சி விகிதத்தில் சில வீழ்ச்சிப் போக்கு காணப்பட்ட போதிலும் இந்தியா மற்றும் சீனா என்பன முறையே 9.1 சதவீதம் மற்றும் 5.7 சதவீதம் என்ற வளர்ச்சி விகிதங்களை பதிவாக்கியதுடன் தொடர்ந்தும் விரிவாக்கப்பட்டது. ரஷ்யாவின் மொ.உ.உற்பத்தி 7.9 சதவீதத்தினாலும் பிறேஸில் 6.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது.

சர்வதேச நாணய நிதியமும் அதன் உலகப் பொருளாதார கண்ணோட்டமும் 2010 இல் 4.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 2011 இல் 4.2 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. வளர்ந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி விகிதம் 2010 இல் 7.1 சதவீதமாகவும் 2011 இல் 6.4 சதவீதமாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஆசியா, விசேடமாக இந்தியா மற்றும் சீனா என்பன அதிக செயலாற்றுகையுடன் கூடிய வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்தியதுடன் பணவீக்க அழுத்தத்தினை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்ததுடன் சாதகமான ஆனால் உலகப் பொருளாதாரத்தின் மீட்புக்கான உறுதியான நோக்கொன்றிற்கு பங்களிப்புச் செய்தது.

**வரைபு - 15**




சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட “உலக பொருளாதார எதிர்கால நோக்கு - 2010 ஒக்டோபர்” இலிருந்து எடுக்கப்பட்டது.

**அட்டவணை 32**
**மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம்**

| | உண்மையான | | எதிர்வு கூறப்பட்ட | |
|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 |
| **உலக மொ.உ.உ.வளர்ச்சி** | 2.8 | -0.6 | 4.8 | 4.2 |
| **முன்னேற்றமடைந்த நாடுகள்** | 0.2 | -3.2 | 2.7 | 2.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 0.0 | -2.6 | 2.6 | 2.3 |
| ஐரோப்பிய பிரதேசம் | 0.5 | -4.1 | 1.7 | 1.5 |
| ஜப்பான் | -1.2 | -5.2 | 2.8 | 1.5 |
| ஐக்கிய இராச்சியம் | -0.1 | -4.9 | 1.7 | 2.0 |
| கனடா | 0.5 | -2.5 | 3.1 | 2.7 |
| பிற முன்னேற்றமடைந்த நாடுகள் | 1.7 | -1.2 | 5.4 | 3.7 |
| **வளர்ச்சியடைந்து வரும் மற்றும் அபவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள்** | 6.0 | 2.5 | 7.1 | 6.4 |
| ஆசியா | 7.7 | 6.9 | 9.4 | 8.4 |
| சீனா | 9.6 | 9.1 | 10.5 | 9.6 |
| இந்தியா | 6.4 | 5.7 | 9.7 | 8.4 |
| ஆசியன்-5* | 4.7 | 1.7 | 6.6 | 5.4 |
| இலங்கை** | 6.0 | 3.5 | 7.6 | 7.5 |
| ஆபிரிக்கா | 5.5 | 2.6 | 5.0 | 5.5 |
| மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா | 3.0 | -3.6 | 3.7 | 3.1 |
| பொதுநலவாய சுதந்திர குடியரசுகள் | 5.3 | -6.5 | 4.3 | 4.6 |
| ரஷ்யா | 5.2 | -7.9 | 4.0 | 4.3 |
| மத்திய கிழக்கு | 5.0 | 2.0 | 4.1 | 5.1 |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 4.3 | -1.7 | 5.7 | 4.0 |
| பிறேஸில் | 5.1 | -0.2 | 7.5 | 4.1 |
| மெக்சிக்கோ | 1.5 | -6.5 | 5.0 | 3.9 |

மூலம்: சர்வதேச நாணய நிதியம்

*இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்நாம் உள்ளடங்கலாக

**2010 மற்றும் 2011 இற்கான திருத்தப்பட்ட எதிர்வு கூறல்கள்

முன்னேற்றமடைந்த நாடுகளில் சராசரி பணவீக்க விகிதமானது 2008 இல் 3.4 சதவீதத்திலிருந்து 2009 இல் 0.1 சதவீதமாகவும், 2010 இல் 1.4 சதவீதமாகவும் எதிர்வு கூறப்பட்டிருந்தது. அதி கூடிய வேலைவாய்ப்பின்மை தொடர்ந்தமை மற்றும் மந்த நிலையில் காணப்படும் உள்நாட்டு வளர்ச்சிக் கேள்வி என்பன குறைந்த பணவீக்கமாக காணப்படுவதுடன், 2008 இல் 9.2 சதவீதமாக இருந்து 2009 இல் 5.2 சதவீதமாக குறைவடைந்தமை வளர்ச்சியடைந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவான பணவீக்கமாகும். வளர்ச்சியடைந்து வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களின் சராசரி பணவீக்கம் 2010 ஆம் ஆண்டில் 6.2 சதவீதமாக இருக்குமென எதிர்வு கூறப்பட்டிருந்தது.

## வரைபு - 16




சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட "உலக பொருளாதார எதிர்கால நோக்கு - 2010 ஏப்ரல்" இலிருந்து எடுக்கப்பட்டது.

முன்னேற்றமடைந்த நாடுகளில் வேலைவாய்ப்பின்மை வீதமானது 2008 இல் 5.8 சதவீதத்திலிருந்து 2009 இல் 8 சதவீதமாக அதிகரித்தது. பல முன்னேற்றமடைந்த நாடுகளின் கண்ணோட்டங்கள் இந்த உயர் விகிதத்தினை குறைக்கும் வகையில் தொடர்ந்திருந்ததுடன் பல சமூக பொருளாதார பிரச்சினைகளையும் ஏற்படுத்தியது. அண்மைய பூச்சிய வட்டி வீதத்துடன் இந்த உயர் வேலைவாய்ப்பின்மை வீதமானது ஏற்கனவே உயர் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை ஏற்படுத்தியதுடன் படுகடன் விகிதங்களை அதிகரித்து எதிர்காலத்தில் வெளிநாட்டுப் பேரண்டப் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் நிச்சயமற்ற தன்மையினை நியாயமானளவு தோற்றுவிக்கின்றது.

### அட்டவணை 33

### பணவீக்கமும் வேலைவாய்ப்பின்மையும்

| | உண்மையான | | எதிர்வு கூறப்பட்ட | |
|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 |
| **நுகர்வோர் விலை பணவீக்கம்** | | | | |
| முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் | 3.4 | 0.1 | 1.4 | 1.3 |
| அபிவிருத்தியடைந்து வரும் ஆசியா | 7.5 | 3.1 | 6.1 | 4.2 |
| மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா | 8.1 | 4.7 | 5.2 | 4.1 |
| பொதுநலவாய சுதந்திர குடியரசுகள் | 15.6 | 11.2 | 7.0 | 7.9 |
| லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் | 7.9 | 6.0 | 6.1 | 5.8 |
| மத்திய கிழக்கு மற்றும் வட அமெரிக்கா | 13.5 | 6.7 | 6.8 | 6.2 |
| உப - சஹாரா ஆபிரிக்கா | 11.7 | 10.4 | 7.5 | 7.0 |
| **வேலைவாய்ப்பின்மை** | | | | |
| முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள | 5.8 | 8.0 | 8.3 | 8.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 5.8 | 9.3 | 9.7 | 9.6 |
| ஐரோப்பிய பிரதேசம் | 7.6 | 9.4 | 10.1 | 10.0 |
| ஜேர்மனி | 7.3 | 7.5 | 7.1 | 7.1 |
| பிரான்ஸ் | 6.7 | 7.8 | 8.7 | 8.6 |
| இத்தாலி | 6.7 | 7.8 | 8.7 | 8.6 |
| ஸ்பெயின் | 11.3 | 18.0 | 19.9 | 19.3 |
| ஜப்பான் | 4.0 | 5.1 | 5.1 | 5.0 |
| ஐக்கிய இராச்சியம் | 5.6 | 7.5 | 7.9 | 7.4 |
| புதிதாக கைத்தொழில் மயமாக்கப்பட்ட ஆசியப் பொருளாதாரங்கள் | 3.4 | 4.3 | 3.8 | 3.7 |

*மூலம்: சர்வதேச நாணய நிதியம், உலகப் பொருளாதார அமைப்பு*

அதிக அரசிறைப் பற்றாக்குறைகளையும் அரசாங்க படுகடனில் அதிக இணக்கப்பாட்டினையும் குறிப்பாக முன்னேற்றமடைந்த நாடுகள் மிக அண்மைய எதிர்காலத்தில் மாற்றமடைய உள்ளது. பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் கூட படுகடன்/மொ.உ.உற்பத்தி விகிதங்களில் அதிகரிப்பொன்றினைக் கண்டுள்ள அதேநேரம் முன்னேற்றமடைந்த நாடுகள் சில இவ்வாறான அதிக வளர்ச்சியினை காணவில்லை.

**வரைபு -17**




சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட "உலக பொருளாதார எதிர்கால நோக்கு - 2010 ஏப்ரல்" இலிருந்து எடுக்கப்பட்டது.

**அட்டவணை 34**
**தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் அரசாங்க படுகடன்/மொ.உ.உ.விகிதங்கள் (%)**

| | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| கனடா | 69.8 | 81.6 | 81.7 | 80.5 |
| பிரான்ஸ் | 67.5 | 78.1 | 84.2 | 87.6 |
| ஜேர்மனி | 66.3 | 73.5 | 75.3 | 76.5 |
| கிறேஸ் | 99.2 | 115.2 | 130.2 | 139.3 |
| இத்தாலி | 106.1 | 115.8 | 118.4 | 119.7 |
| ஜப்பான் | 194.7 | 217.6 | 225.9 | 234.1 |
| கொரியா | 29.0 | 32.6 | 32.1 | 30.5 |
| சிங்கப்பூர் | 95.6 | 106.2 | 98.9 | 95.2 |
| ஸ்பெயின் | 39.7 | 53.1 | 63.5 | 70.2 |
| ஐக்கிய இராச்சியம் | 52.1 | 68.5 | 76.7 | 81.9 |
| ஐக்கிய அமெரிக்கா | 71.1 | 84.3 | 92.7 | 99.3 |
| இந்தியா | 72.6 | 74.2 | 71.8 | 71.4 |
| இந்தோனேசியா | 33.2 | 28.6 | 26.7 | 26.3 |
| மலேசியா | 42.8 | 55.4 | 55.1 | 56.6 |
| தாய்லாந்து | 37.3 | 45.2 | 45.5 | 45.5 |
| பாகிஸ்தான் | 58.7 | 57.3 | 58.7 | 57.2 |
| பிலிப்பைன்ஸ் | 48.7 | 48.9 | 46.3 | 45.6 |
| பிறேஸில் | 64.1 | 68.9 | 66.8 | 66.6 |
| மெக்சிக்கோ | 43.3 | 44.9 | 45.2 | 45.7 |
| இலங்கை | 81.4 | 86.3 | 78.7 | 74.9 |

*மூலம்: சர்வதேச நாணய நிதியம், உலகப் பொருளாதார அமைப்பு, இலங்கைக்கான புதிய உத்தியோகபூர்வ எதிர்வு கூறல்கள்.*

சர்வதேச நுகர்வுப் பொருள் விலைகள் எரிபொருளல்லாத நுகர்வுப் பொருள் விலைகளில் 2008 இல் 7.5 சதவீத அதிகரிப்பொன்றிற்கு பின்னர் 2009 இல் 18.7 சதவீதத்தினால் வீழ்ச்சி சராசரியொன்றினைப் பதிவாக்கியது. சராசரிகளின் மீதான இந்த விலைகள் 2010 இல் 16.8 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அவற்றினது எதிர்கால பணிப்புரைகள் தாக்கம் செலுத்தப்படுவதுடன் ஏனையவற்றிற்கிடையில் கடந்த சில மாதங்களில் தளம்பல் வீத மாற்றமொன்றினை கொண்டிருந்தது. அத்துடன் எண்ணெய் விலை கட்டமைப்பில் நியாயமானளவு நிச்சயமற்ற தன்மை காணப்பட்டதுடன் 2010 ஒக்டோபரில் சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்வு கூறலானது 2010 இன் 23.3 சதவீதமாக அதிகரிக்குமெனப்பட்டது.

சர்வதேச நாணயச் சந்தையில் 2003 இலிருந்து 2006 வரையுமான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கெதிராக ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வளர்ச்சியை கொண்டிருந்ததன் பின்னர் 2009 இல் ஜப்பானிய ஜென் 9.4 சதவீதமாக வளர்ச்சியடைந்தது மேலும் துரித வளர்ச்சியொன்றினை சுட்டிக் காட்டியது. 2005 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கிடையில் 18 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த யூரோ நாணயம் டொலருக்கெதிரான குறிப்பிடத்தக்களவு வளர்ச்சிப் போக்கினைக் காட்டியதுடன், மேற்குறிப்பிடப்பட்ட விலையானது மிகவும் உறுதியான நிலையில் தொடர்ந்திருந்ததுடன், 2004 இலிருந்து 2006 வரைக்குமான 3 வருட காலப்பகுதியில் காணப்பட்ட சராசரி வீதமானது 1.25 ஆகக் காணப்பட்டது. இந்த நாணய அசைவு அக்கறைக்குரிய காரணியாக இருந்ததுடன் குறிப்பாக ஜப்பானிய யென் இனால் மிகைக்கப்பட்ட படுகடனில் பிரதான பங்கொன்றினை இலங்கை வகித்தது. யென் அதிகரிப்பானது படுகடன் சேவைக்காக இலங்கையின் வளங்களை நியாயமானளவு இலங்கைக்கு வெளியே மாற்றுவதற்கு காரணமாகியது.

**வரைபு- 18**




பொருட்கள் மற்றும் சேவைகளில் உலக வர்த்தகத்தின் அளவு 2009 இல் 11 சதவீதத்தினால் குறைவடைந்தமை 2011 இல் மேலும் 7 சதவீதத்தினால் அதிகரிப்பதுடன் 11.4 சதவீத அதிகரிப்பொன்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. முன்னேற்றமடைந்த நாடுகளினால் செய்யப்படும் இறக்குமதிகள் இலங்கையின் ஏற்றுமதி செயலாற்றுகையினை பிரதானமாக பாதிக்கும் காரணியொன்று என்பதுடன், 2009 இல் 12.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2010 இல் 10.1 சதவீதத்தினாலும் 2011 இல் மற்றுமொரு 5.2 சதவீதத்தினால் அதிகரிக்குமென தற்பொழுது எதிர்வு கூறப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களினால் செய்யப்படும் இறக்குமதிகள் 2010 இல் 14.3 சதவீதமாக மிக அதிகரித்த வளர்ச்சியினைக் காட்டியதுடன், 2011 இல் 9.9 சதவீதமாக அதாவது உலகப் பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிக்குமொன்றாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பின்னணியில், இலங்கையின் ஏற்றுமதிகள் 2009 இல் 12.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன், 2010 இல் 12.5 சதவீத வளர்ச்சியினை காட்டுமென எதிர்பார்க்கப்பட்டதுடன், 2009 இல் எதிர்பார்க்கப்பட்ட 27.6 சதவீத வீழ்ச்சி 31 சதவீத வளர்ச்சி வீதத்தினை சுட்டிக் காட்டும். இறக்குமதிகளில் விரைவான வளரச்சி திருத்தப்பட்ட தீர்வைகளினூடாக கொள்கை ஊக்குவிப்புக்களின் விளைவாக ஏற்பட்டதுடன் வளர்ச்சியடைந்து வரும் உள்நாட்டு வருமானங்களின் பொருளாதார செயற்பாடுகள் மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி உதவிகளினூடாக பிரதானமாக நிதியளிக்கப்படும் இறக்குமதி தேவைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதை துரிதப்படுத்தியுள்ளது.

தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சலானது வளர்ந்து வரும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்களில் 2008 இல் 439 பில்லியன் ஐ.அ.டொலர்களிலிருந்து 2009 இல் 241 பில்லியன் ஐ.அ.டொலர்களாக வீழ்ச்சியடைந்ததுடன், சில அறவீடுகள் 2010 இல் எதிர்பார்க்கப்பட்டுள்ளன. ஆனாலும், 2008 இல் இதன் மட்டம் 30 - 35 சதவீதமாக தொடர்ந்து காணப்பட்டது. இந்தப் பின்னணியில், துரிதப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் பிற தனியார் மூலதன உட்பாய்ச்சல் என்பவற்றினை கவர்ச்சிகரமான உயர்ந்த மட்ட கட்டமைப்பாக கருதப்படும் வகையில் இலங்கை அதனது முதலீட்டு அதிகரிப்பை மீள நோக்க வேண்டியுள்ளது.

**வரைபு- 19**




பல நாடுகளில் நீண்ட கால அரசாங்க முறிகளின் விளைச்சல் குறைந்த வட்டி விகிதத்தில் காணப்படுவது குறைந்த வீதத்தை தொடர்ந்தும் பேணுகின்றது. குறைந்த பணவீக்கம் மற்றும் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமை என்பவற்றின் காரணமாக வட்டி வீதத்தில் இலங்கை வீழ்ச்சிப் போக்கினைக் கண்டுள்ளது. இத்துடன் முதலீட்டாளர் நம்பிக்கையானது பங்குச் சந்தை செயற்பாடுகளில் மேம்பாடொன்றிற்கு காரணமாக இருந்தது. இதற்கு மேலதிகமாக, இலங்கையின் அந்தஸ்தினை சர்வதேச படுகடன் மூலதனச் சந்தையில் அதிகரிப்பதற்காக சாதகமான பங்களிப்பினை செய்ததுடன், இது நீண்ட கால முதிர்ச்சி அடிப்படையில் ஒரு பில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான கடன் முறிகளை அண்மையில் வெளியிட்டதன் மூலம் அடையப் பெற்றதாகும்.

முழு மொத்த பின்னணியில் நோக்கும் போது, சாதகமான அதேபோன்று ஊக்கப்படுத்தப்படாத அம்சங்களை கொண்ட நிச்சயமற்ற தன்மை ஆகிய இரண்டினை சர்வதேச சூழ்நிலை கொண்டிருந்தது. உள்நாட்டு நிலைமைகள் மேம்பாடடைந்ததுடன் வெளிநாட்டு வளங்களில் சாதகமான அபிவிருத்தி காணப்படுவதுடன், வளர்ந்து வரும் சர்வதேசப் பொருளாதார கண்ணோட்டத்தில் ஆபத்துக்களையும் சவால்களையும் எதிர் நோக்குவதன் மூலம் நன்மைகளை அடைந்து கொள்ளும் வகையில் இந்த நாடு தன்னை தயார்படுத்தி வருகிறது.

## 2011 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அடிப்படைகள்

### மொத்த உள்நாட்டு உற்பத்தி

